# உதயன்

சுடர்: 29 கதிர்: 246 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 14, புதன் 30.07.2014

stay connected with: uthayan.print uthayanprint *Uthayan - A lively National Tamil Daily*

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=


தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04




விமானத்தை வீழ்த்தியது போர்க்குற்றம் 7





இஸ்ரேலுக்கு எதிராகப் போராட்டம் 8





பீரிஸ் வழங்கிய தவறான தகவல் 14


# அடுத்த வாரம் இந்தியா பறக்கிறது கூட்டமைப்பு

## இந்தியப் பிரதமர், வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளது

யாழ்ப்பாணம், ஜூலை 30
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுவொன்று அடுத்த மாத ஆரம்பத்தில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது என்று தெரியவருகின்றது. அந்தக் குழு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகியோரைச் சந்தித்து முக்கிய பல விடயங்கள் குறித்துக் கலந்துரையாடவுள்ளது என் றும் நம்பகரமாகத் தெரிய வருகின்றது.

இந்தியா செல்லும் கூட்டமைப்பின் குழுவில், தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, க.சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருடன் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் செல்லவுள்ளார். இவர்கள் எதிர்வரும் 5 ஆம் திகதி கொழும்பில் இருந்து புறப்படவுள்ளனர்.

இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி கடந்த மே மாதம் பொறுப்பேற்றார். அவரைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது. அதன்படி கடந்த ஜூன் மாதம் நடுப்பகுதியில் இந்தியாவுக்கு கூட்டமைப்பு செல்லும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும், இந்திய அரசிடம் இருந்து அழைப்புக் கிடைக்காததால் பயணம் பிற்போடப்பட்டு வந்தது.

இந்த நிலையில் அடுத்த மாதம் முதல் வாரத்தில், கூட்டமைப்பை இந்தியாவுக்கு வருமாறு இந்திய அரசு, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தினூடாக அழைப்பு அனுப்பியுள்ளது என்று தெரியவருகின்றது.

அதையடுத்தே கூட்டமைப்பின் உயர்மட்டக் குழு எதிர்வரும் 5 ஆம் திகதி கொழும்பில் இருந்து புறப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## இந்திய மீனவர்கள் 51 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 30
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் இந்திய மீனவர்கள் 51 பேர் நேற்றுக் கடற்படையினரால் பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் 7 படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை கைது செய்யப்பட்ட அவர்கள் யாழ்.நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மீனவர்கள் இந்தியாவின் நாகை, காரைக்கால் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் நேற்றுப் பிற்பகல் பதில்நீதிவான் பெருமாரசாமி முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்ட மீனவர்களின் 5 விசைப்படகுகளும், 2


24ஆம் பக்கம் பார்க்க



## செப்ரெம்பர் நடுப்பகுதியில் யாழ். நகர் வரும் யாழ்தேவி

கொழும்பு.ஜூலை.30
கொழும்பு- யாழ்ப்பாணம் இடையே யாழ்தேவி ரயில் சேவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என ரயில்வே


22 ஆம் பக்கம் பார்க்க



## மதிப்பிட்டதைப் போல இரு மடங்கு வாடகை

### முதலமைச்சர் அலுவலகத்திற்கு மட்டும் தனிநடைமுறை



யாழ்ப்பாணம், ஜூலை 30
வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்திற்கு வாடகையாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மட்டுமே வழங்கப்படலாம் என்று விலை மதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பிடப்பட்ட போதும் 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை வடக்கு மாகாண சபை செலுத்தி வருகிறது.


22 ஆம் பக்கம் பார்க்க

இலங்கை மேமன் சங்கத்தின் நோன்பு பெருநாள் எய்ட் உல் ப்த்ர் தொழுகை காலி முகத்திடலில் நேற்றுக் காலை நடைபெற்றது. காலி முகத்திடலில் ஒன்று கூடிய பெரும் எண்ணிக்கையான முஸ்லிம் மக்கள் ஹாஜி ஹபீஸ் ரஸான் பட்டேல் தலைமையில் தொழுகையில் ஈடுபட்டனர். (ந-10)

## வியாபாரத்தில் ஈடுபட்ட இந்தியர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 30
சுற்றுலா நுழைவிசைவில் இலங்கை வந்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்று கூறப்படும் இந்தியர்கள் இருவர் யாழ்ப்பாணம், ஆறுகால் மடம் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமிழகத்தின் திண்டுக்கல் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், அவர்களிடம் இருந்து 46 புடைவைகள் மற்றும் 24 மாலைகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர்கள் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ந-4)

## நட்டநடு இரவில் காத்திருந்து கத்தி காட்டி நூதன கொள்ளை

### 3 லட்சம் ரூபா பணம், நகை அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30
நள்ளிரவில் வளவுக்குள் புகுந்து காத்திருந்த திருடர்கள், வீட்டிலிருந்த பெண் தேவைக்காக வெளியே வந்த சந்தர்ப்பத்தில் அவரது கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி 3 லட்சம் ரூபா பணம் மற்றும் 8 பவுண் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கோண்டாவிலில் இந்த நூதனத் திருட்டு இடம் பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேநேரம் நேற்றுமுன்தினம்


22 ஆம் பக்கம் பார்க்க


## பௌத்தர்களே இல்லாத இடங்களிலும் புத்தருக்கு புதிய விகாரைகள் அமைப்பு

### ஆண்டறிக்கையில் சுட்டிக்காட்டி சாடுகிறது அமெரிக்கா



இந்த அறிக்கை அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியால் வெளியிடப்பட்டது. அதில் இலங்கை தொடர்பில் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வொஷிங்ரன், ஜூலை 30
போரின் பின்னர், தமிழர் பிரதேசங்களில் - பௌத்தர்களே வசிக்காத பகுதிகளில்– இலங்கை இராணுவத்தினர் பௌத்த விகாரைகளை நிறுவுவதில் முனைப்புக் காட்டி வருகின்றனர் என்று தனது வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது அமெரிக்கா. மதச் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடும் பொது பலசேனாவுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில், பலமான தொடர்புகள் இருப்பதை உள்ளூர் ஊடகங்களும் அரச சார்பற்ற அமைப்பு


22 ஆம் பக்கம் பார்க்க


## முதலமைச்சர் நிதியத்துக்கு வடக்கு ஆளுநர் முழுத் தடை

யாழ்ப்பாணம், ஜூலை 30
வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம் வடக்கு மாகாண ஆளுநரினால் நிராகரிக்கப்பட்டுள்ளது. நிதி நியதிச் சட்டம் மற்றும் முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம் இரண்டுமே சபையின் அடுத்த அமர்வில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

வடக்கு மாகாண சபையி



னால் நிதி நியதிச் சட்டம், முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம், முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம் என்பன தயா


22 ஆம் பக்கம் பார்க்க

## தீயில் எரிந்து வீடு நாசம்



வாழைச்சேனை, ஜூலை, 30
வாழைச்சேனை கண்ணகிபுரத் தில் வீடு ஒன்று தீப்பற்றி எரிந்து நாசமாகி உள்ளது.
இந்தச் சம்பவம் நேற்று நடைபெற்றுள்ளது.
வீட்டில் எவரும் இல்லாத நிலையில் அங்கு வைக்கப்பட்டிருந்த விளக்கிலிருந்து தீ பரவி வீடு முற்றாக எரிந்துள்ளது என வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். இதன்போது பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் ஆவணங்களும் எரிந்துபோயுள்ளன என்று அவர் மேலும் தெவித்தார். (ஜ-10)

# இராணுவ பிடியில் இருக்கும் காணியில் சிங்கள மக்களைக் குடியேற்றத் திட்டம்

## மாவை சேனாதிராசா குற்றச்சாட்டு

வலி.வடக்கு, ஜூலை 30
வடபகுதியில் இராணுவ முகாம்களுக்கு என்று சுவீகரிக்கப்படும் காணிகளில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதற்கே அரசு முயற்சித்து வருகிறது. இதனால் பரம்பரையாக தமது சொந்த இடங்களில் வாழ்ந்த மக்கள் அகதி முகாம்களில் அவல வாழ்வை எதிர்கொள்ளும்நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாள ரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா.
தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறைக் கிளை தெல்லிப்பழையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-
பரம்பரை பரம்பரையாக விவசாயம், மீன்பிடி போன்ற தொழில்களைச் செய்து வந்த மக்கள் இன்று வீடற்றவர்களாக அகதிகளாக அவல வாழ்வை எதிர்கொண்டு வருகின்றனர். அவர்களது பூர்வீக நிலங்களை இராணுவத்தினர் தம்வசம் வைத்துள்ளனர்.
இவ்வாறு வைத்திருக்கும் காணிகளை கையகப்படுத்தும் அவர்கள் சிங்களக் குடியேற்றங்களையே தமிழர் பகுதியில் ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளனர். இன்று தமிழ் இன விகிதாசாரத்தைக் குறைக்கும் வகையில் அரசு செயற்பட்டு வருகிறது. வடக்குக் கிழக்கில் அமைதியின்மையைப் பேணி மக்களை வெளியேற்றுவதில் அரசு குறியாக உள்ளது. இன்று சுமார் 2 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்தியாவில் அகதி முகாம்களில் வசிக்கின்றனர். இவர்களுக்கு இந்தியாவில் குடியுரிமை வழங்க வேண்டும் என்று தமிழக முதல்வர் வலியுறுத்தி வருகிறார். கடந்த 60 ஆண்டு காலமாக தொடரும் தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகள் தற்போது மேலும் வலுப் பெற்றிருக்கின்றன. அதாவது பண்பாட்டு விழுமியங்களை சிதைப்பது ஊடாக ஒரு இனத்தை அழித்து விடலாம் என்பதே அவர்களின் நீண்ட கால திட்டமாக உள்ளது.
மயிலிட்டியில் தந்தை செல்வா காலத்தில் துறைமுகம் அமைக்கப்பட்டு இங்குள்ள உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. ஒரு காலத்தில் எமது பகுதிகளில் இருந்து 300 க்கு மேற்பட்ட லொறிகளில் கடலுணவு கொண்டு செல்லப்பட்டது. தென்னிலங்கையில் இருந்து வரும் வியாபாரிகள் பெருமளவான பொருள்களை கொள்வனவு செய்து சென்றனர். இந்தக் காலத்தில் செல்வச் செழிப்புடன் எமது கிராமங்கள் விளங்கின. ஆனால் இன்று நாம் தென்னிலங்கையை நம்பி வாழ வேண்டிய சூழல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.
மத்திய அரசு மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை தம்வசப்படுத்தி வைத்திருக்கிறது. இதனால் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக துன்பங்களையே எதிர்நோக்க வேண்டியுள்ளது - என்றார். (ஜ - 86)



கல்முனை முஹம்மதிய்யா ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் ஹுதா பள்ளிவாசல் இணைந்து ஏற்பாடு செய்த புனித நோன்புப் பெருநாள் தொழுகை நேற்று செவ்வாய்க்கிழமை கல்முனை கடற்கரை வீதியில் அமைந்துள்ள ஹுதா திடலில் இடம்பெற்றது. (ஜ-10)

## தமிழரசுக் கட்சியின் கிளை தெல்லிப்பழையில் திறப்பு

வலி.வடக்கு, ஜூலை 30
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறைக் கிளை அலுவலகம் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் தெல்லிப்பழை ஆனைக்குட்டி மதவடியில் உள்ள தனியார் இல்லத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாள்ரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன் மற்றும் சி.ஸ்ரீதரன் ஆகியோர் இணைந்து நாடா வெட்டித் திறந்து வைத்தனர்.
தொடர்ந்து தந்தை செல்வநாயகம் மற்றும் முன்னாள் எதிர் கட்சித்தலைவர் அமிர்தலிங்கம் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு நினைவுச் சுடரை மாவை சேனாதிராசா ஏற்றி வைத்தார். இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-86)



# வீட்டில் இருந்தவற்றை பறித்தெடுத்த கொள்ளையர் மீதியைகேட்டு மிரட்டல்

## அடைவுத் துண்டுகளை காட்டித் தப்பினர் வீட்டார்

## கனகராயன்குளத்தில் மக்கள் அச்சத்தில்

மாங்குளம், ஜூலை 30
கனகராயன்குளப் பகுதியில் கூரிய ஆயுதங்களுடன் வீட்டினுள் புகுந்த கொள்ளையர்கள் அங்கு தூக்கத்தில் இருந்தவர்களை எழுப்பி நகை, பணத்தை ஒப்படைக்குமாறு மிரட்டினர். உயிர் தப்பினால் போதுமென்று அணிந்திருந்த நகைகளை கழற்றிக்கொடுத்த வீட்டாரை இன்னும் தரவேண்டும் என மிரட்டியுள்ளனர் கொள்ளையர்கள். இதனால் தாம் பணத் தேவைக்காக நகைகளை அடைவு வைத்துவிட்டோம் என்று அடைவு துண்டுகளை காட்டியதால் கொள்ளையர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.
இந்த துணிகரச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் கனகராயன்குளம் விஞ்ஞான குளப்பகுதியிலுள்ள வீட்டில் இடம்பெற்றுள்ளது.
கொள்ளையர்கள் அந்த வீட்டார் அணிந்திருந்த 6 பவுண் நகை மற்றும் குறிப்பிட்ட தொகைப் பணம் என்பவற்றை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.
சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-
விஞ்ஞான குளப் பகுதியில் காட்டுமிருகங்களின் அட்டகாசம் இருப்பதால் தமது மாடுகளை பாதுகாப்பதற்காக வீட்டின் வெளிப்புறத்தில் வீட்டின் உரிமையாளர் உறங்கிக் கொண்டிருந்தார். அப்போது அவரின் முகத்துக்கு டோச் லைற் வெளிச்சம் பாய்ச்சப்பட்டது. அவ்வேளை சிலர் முகங்களை கறுத்தத் துணியால் கட்டியபடி கூரிய ஆயுதங்களுடன் நிற்பதைக் கண்டு அவர் கத்தியுள்ளார்.
இவரின் அலறல் சத்தத்தை கேட்டு வீட்டினுள் உறங்கிக் கொண்டிருந்த மனைவி, பிள்ளைகள் வெளியில் வந்து பார்த்தபோது கணவனைச் சுற்றி சிலர் நிற்பதைக் கண்டனர்.
அவர்கள் கொள்ளையர்கள் எனத் தெரிந்து கொண்டதும் அச்சத்தில் உறைந்தனர். செய்வதறியாது அவர்கள் திகைத்து நின்றனர்.
அடுத்த கணம் தாயை வீட்டுக்குள் இழுத்துச் சென்று பயமுறுத்துவதைக் கண்டு மகன் அவர்களுடன் போராட முற்பட்ட போது கொள்ளையர்களில் ஒருவன் வாள் வீச்சு நடத்தினான். ஆனால் தெய்வாதீனமாக அவரின் கழுத்து மயிரிழையில் தப்பியது. தாய், பிள்ளைகள் கத்திக் குழறினர். நகைகளை எடுக்குமாறு அவர்கள் கடும்தொனியில் கூறினர். அதற்கு தாங்கள் அவசர பணத் தேவைக்காக அடைவு வைத்து விட்டோம் எனக் கூறிக்கொண்டு பற்றுச்சீட்டைக் காட்டியுள்ளனர்.
அதை அடுத்து அவர்களிடம் இருந்த காப்பு, சங்கிலி என்பவற்றை அபகரித்துக்கொண்டு பணத்தை எடுத்துக் கொண்டு அவர்களை அறைக்குள் பூட்டிவிட்டுச் சென்றனர் கொள்ளையர்கள்.
இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து வீட்டுக்காரரின் மனைவிக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அவரை உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.
சம்பவம் குறித்து கனகராயன்குளப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் மோப்ப நாய்களுடன் வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.
கொள்ளையர்கள் சரளமாக தமிழ் கதைத்தனர் என்று வீட்டார் தெரிவித்தனர். அங்கிருந்து செல்லும்போது கொலை அச்சுறுத்தல் விடுத்துச் சென் றனர் என்றும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (ஓ-422)

## முத்திரை வெளியிடுவதற்கான முன்மொழிவு சமர்ப்பிக்கலாம்

கொழும்பு, ஜூலை 30
2015ஆம் ஆண்டுக்கான ஞாபகார்த்த முத்திரைகளை வெளியிடுவதற்கு பொது மக்களிடமிருந்து முன்மொழிவுகளை இலங்கை அஞ்சல் திணைக்களம் கோரியுள்ளது.
இதற்கமைய தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள், ஆண்டு நிறைவு, மதிப்பிற்குரிய நபர்கள், இயற்கை காட்சிகள், விளையாட்டு, தேசிய அபிமானத்தை வெளிக் கொண்டுவரும் விடயங்கள் மற்றும் கலாசாரம் ஆகிய விடயங்களை உள்ளடக்கி பொதுமக்கள் தங்கள் முன் மொழிவுகளை சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
பொதுமக்கள் தமது முன்மொழிவுகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் ,முத்திரை காரியாலயம், தபால் தலைமையகம், இலக்கம் 310, டி.ஆர். விஜேவர்தன மாவத்த, கொழும்பு 10 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் என்று தபால் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஜ-14)

பக்கங்கள்: முப்பத்திரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா யாழ். 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 14 புதன்கிழமை (30.07.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 246

# சுகாதாரத்துறை வெற்றிடங்களை நிரப்ப 4 ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்குக

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30

**வடக்கு மாகாணத்தில் சுகாதாரத் துறையில் காணப்படும் பல்வேறு வெற்றிடங்களை நிரப்புவதற்கு 4 ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்குவதற்கு அனுமதிக்குமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கை சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது என்றும் தெரியவருகின்றது.**

முகாமைத்துவ சேவை கள் திணைக்களத்தின் வருடாந்த மீளாய்வுக் கலந்துரையாடல் கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்றது. அதில் ஒவ்வொரு மாகாணத்திலும் காணப்படும் பதவி வெற்றிடங்கள் தொடர்பான மீளாய்வு இடம்பெற்றது. அப்போதே வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுகாதாரத் துறையின் பல்வேறு பிரிவுகளிலும் பல பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. புதிய சிகிச்சைப் பிரிவுகள் பல உருவாக்கப்பட்டுள்ளதால் அதற்குரிய வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் என்று பல்வேறு துறைசார் ரீதியிலும் பலர் தேவைப்படுகின்றனர். அத்துடன் சிற்றூழியர்கள், சுகாதாரத்துறையுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் என்பவற்றுக்குச் சுமார் 4 ஆயிரம் பேர் வரையில் வடக்கில் மாத்திரம் நியமிக்கப்பட வேண்டிய தேவையுள்ளது என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்தக் கோரிக்கை சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ற-5)

## காணாமற்போனோர்களில் பலர் வேறிடங்களில் வசிக்கின்றனர்

### ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவரின் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூலை 30

வடக்கு - கிழக்கில் கடந்த காலங்களில் காணாமற்போனவர்கள், கடத்தப்பட்டவர்கள் அல்லது கொல்லப்பட்டனர் என்று கூறப்பட்ட பலர், தற்போது வேறு இடங்களில் வசிப்பது கண்டறியப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"போர் நடைபெற்ற காலப் பகுதியில், தமது நாடுகளில் குடியேறிய தமிழர்கள் தொடர்பான தகவல்களை வழங்கும்படி, பல மேற்குலக நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். ஏனென்றால், காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகளுக்கு இந்த தகவல்கள் முக்கியமானவை.

(22ஆம் பக்கம் பார்க்க)

## திட்டமிட்ட நிகழ்ச்சிநிரலில் செயற்படவில்லை ஐ.நா.

### மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தமது பாதிப்புக்கள் தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் பணியகத்திடம் கருத்துத் தெரிவிக்க ஆர்வமாக இருந்தனர் என்று தெரி. வித்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை விடயத்தில் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்படுகின்றது என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்களையும் மறுத்துள்ளார்.

அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இலங்கை தொடர்பில் பல அறிக்கைகள் காணப்படுகின்றன. அதில் முதலாவது அறிக்கையை ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் நியமித்த வல்லுநர் குழு சமர்ப்பித்துள்ளது.

அது விசாரணை அறிக்கை அல்ல. உண்மைத் தகவல்களைக் கொண்ட அறிக்கை. போர் நிறைவடைந்த நிலையில் நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டும். அதேவேளை போரால் பாதிக்கப்பட்டவர்களது கருத்துக்களுக்கும் செவிசாய்க்க வேண்டும். எனவே இந்த அறிக்கை இலங்கைக்கு எதிரான நிகழ்ச்சி நிரலைக் கொண்டுள்ளது என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிக்கின்றேன். இலங்கையில் கற்றுக்கொண்ட பாடங்கள்

(22ஆம் பக்கம் பார்க்க)

## நிறைவேற்று அதிகாரமுறையை ஒழித்தால் பொது வேட்பாளர் ஒருவர் தேவையில்லை

### சோபித தேரர் நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இல்லாதொழிப்பாராயின், பொது வேட்பாளர் ஒருவர் எமக்குத் தேவையில்லை என்று தெரிவித்துள்ளார் கோட்டே ரஜமகா விகாராதிபதி வண. மாதுலுவாவே சோபித தேரர். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட்டால் அது நாட்டிலுள்ள அனைத்து மக்களின் வெற்றியாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கோட்டை ரஜமகா விகாரையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"பொது வேட்பாளர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்காக அண்மைக்காலமாக பல தலைவர்களுடன் நாம் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தி வருகிறோம். நிறைவேற்று அதிகார ஜனாதி

(22ஆம் பக்கம் பார்க்க)

## இஸ்ரேலை எதிர்த்துப் போராட்டங்கள்

கொழும்பு, ஜூலை 30

பலஸ்தீனிய மக்கள் மீதான இஸ்ரேலியத் தாக்குதலைக் கண்டித்தும், பாதிக்கப்பட்ட பலஸ்தீனிய மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் நாட்டின் சில பகுதிகளில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு, அம்பாறை, புத்தளம் மாவட்டங்கள் உட்பட பல இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ற)

## ஐ.நா. குழு அழைப்புவிடுத்தால் சம்பந்தன் தலைமையிலான குழு சாட்சியமளிக்கும்

### கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

"இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சாட்சியமளிக்க ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்தால் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழு ஏதோவொரு வழியில் சாட்சியமளிக்கத் தயாராகவுள்ளது." - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேசத்தைப் புறந்தள்ளி விட்டு நினைத்ததை முடித்துவிட முடியாது

### நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 30

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. சர்வதேசத்தைப் புறந்தள்ளி, அனைத்து விடயங்களையும் நாட்டின் இறைமையோடு முடிச்சிட்டு முடிவு கட்டிவிடலாம் என்று சிலர் எதிர்பார்ப்பது முட்டாள்தனம் - இவ்வாறு தெரிவித்துள்ளார் நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"எமது நாட்டின் உள்ளூர் அரசியல் ஒருபுறம் இருக்க சர்வதேச ரீதியில் இந்த நாட்டுக்கு பலவிதமான நெருக்குதல்கள் வந்து கொண்டிருந்தது. அதை சண்டித்தனத்துடன் சமாளித்துக் கொள்ளலாம் என்ற முயற்சியும் பேச்சும் தற்போது சற்று சம்பந்தப்பட்டவர்களால் தளர்த்தப்பட்டிருக்கின்றது. சர்வதேச ரீதியான சவால்களைச் சற்று அனுசரித்துப் போக வேண்டும் என்ற நிலைப்பாடு தற்போது ஆட்சியாளர்களுக்கு வந்துள்ளது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரிய இடமாற்றத்துக்கான விண்ணப்பங்களை அனுப்பலாம்

### வடமாகாண கல்வித் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

வ்டக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வருடாந்த அடிப்படையில் எதிர் வரும் ஜனவரியில் நடைமுறைக்கு வரவுள்ள இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் வட மாகாண கல்வித் திணைக்களத்தால் கோரப்பட்டுள்ளன.

அதன்படி வலயத்துக்கு உள்ளான இடமாற்றங்கள், மாவட்டத்தினுள் வலயங்களுக்கு இடையிலான இடமாற்றங்கள், மாவட்டங்களுக்கு இடையிலான இடமாற்றங்கள் மற்றும் மாகாணங்களுக்கு இடையிலான இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இடமாற்றத்துக்கு விண்ணப்பிப்போர், அவர்களது நியமனக்கடிதத்தில் குறிப்பிடப்பட்ட சேவைக்காலத்தை பூர்த்தி செய்தவர்கள், கஷ்டப் பிரதேசங்களில் 5 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றிய ஆசிரியர்கள், வசதியான பிரதேசங்களில் 6 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றியோர், விசேட வைத்திய காரணங்கள் அல்லது வேறு விசேட கார

(22ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் திருவிழாக் காலத்தில் 2 மணிநேரம் வீதி பாவனைக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை 30

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு ஏற்படுத்தப்படும் வீதித் தடைகள் சுமார் 2 மணி நேரமே தளர்த்தப்படும். ஏனைய நேரங்களில் வீதிகள் மூடப்பட்டிருக்கும். பொது மக்கள், வாகன சாரதிகள் மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்தி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - இவ்வாறு கோரியுள்ளார்

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொன் விழா ஆண்டு நிகழ்வாக உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வு

### சாவகச்சேரி நகர சபை தீர்மானம்

தென்மராட்சி, ஜூலை 30

சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சிவார இறுதிநாள் நிகழ்வை நகர சபையின் பொன்விழா ஆண்டு நிகழ்வாக நடத்த நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சபையின் பொன் விழாவை முன்னிட்டு சிறப்பு நூல் வெளியிடப்படல் வேண்டும் என்றும், குறித்த 50 வருட காலத்தில் இயங்கிய சபைகளின் விவரங்கள் எதிர்காலச் சந்ததியினருக்கு விளங்கக் கூடிய வகையில் ஒவ்வொரு சபையினாலும் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பான விவரங்கள் நூலில் வெளியிடப்படல் வேண்டும் என்றும் உறுப்பினர்களால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறான விவரங்களைத் திரட்டி நூலாக வெளியிட 3 பேர் கொண்ட குழுவும் தெரிவு செய்யப்பட்டதாகத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

## தீயணைப்புப் பிரிவு ஆரம்பிக்க தீர்மானம்

### சாவகச்சேரி நகரசபையில்

தென்மராட்சி, ஜூலை 30

சாவகச்சேரி நகரசபைக்கு தீயணைப்புப் பிரிவொன்றை ஆரம்பிப்பதென சபையின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இந்தக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

போர் அழிவுகளின் பின்னர் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதி துரித வளர்ச்சி கண்டு வருகிறது. இந்த நிலையில் திடீரென தீ ஏற்பட்டால் அதனை அணைப்பதற்கு சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படலாம். இதனைக் கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தீயணைப்புப் பிரிவொன்றை உருவாக்க மாகாண சபையிடம் கோர வேண்டும் என்று உறுப்பினர் த.சுதர்சன் தனிநபர் பிரேரணையை கூட்டத்தில் சமர்ப்பித்திருந்தார். சபைக்கு உட்பட்ட மக்களின் பாதுகாப்பு அவசியம் என்பதால் தீயணைப்பு பிரிவொன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உறுப்பினர்கள் அபிப்பிராயம் தெரிவித்ததால் உரிய நடவடிக்கை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டதாக தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

## வவுனியா மாவட்ட மெய்வன்மைப் போட்டிகள்

மாங்குளம், ஜூலை 30

வவுனியா மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் வெள்ளி, சனி ஆகிய தினங்களில் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆண்கள், பெண்களுக்கான 10,000 மீற்றர் ஓட்டப் போட்டி, நீளம் பாய்தல், 200 மீற்றர் ஓட்டப் போட்டி, முப்பாய்ச்சல், தட்டெறிதல், உயரம் பாய்தல் போன்ற போட்டிகளும், மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஏனைய போட்டிகள் யாவும் நடைபெறும் எனவும் வவுனியா மாவட்ட விளை யாட்டு உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (க-422)

### தவறிவிட்டது

குணரட்ணம் ஹம்சத்வனி என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் என்பன 05.07.2014 சனிக்கிழமை யாழ்.நகரப்பகுதிக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தரவும்.

தொடர்பு: 077 735 3580 (50341)(4.8.3)

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

கிளிநொச்சி, உதயநகர் மேற்கில் நல்லநிலையில் உள்ள வீடு, கட்டுக்கிணற்றுடன் 14பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு.

(50327) (12.3.6) தொடர்பு: 077 273 5435

## கோஷ்டி மோதல் குழு என்ற சந்தேகத்தில் 12 பேர் கைதாகி பிணையில் விடுவிப்பு

வடமராட்சி, ஜூலை 30

வடமராட்சி அல்வாய் பத்தியோடைப் பகுதியில் கோஷ்டி மோதலில் ஈடுபட இருந்தனர் எனக் கூறப்படும் 12 பேர் அடங்கிய இரு குழுவினரைப் பொலிஸார் கைது செய்து பின்னர் பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

அல்வாய் பகுதியில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு நிகழ்வொன்றில் ஏற்பட்ட குழப்ப நிலையை அடுத்தே இரு குழுவினரும் மோதலில் ஈடுபடத் தயாராகி வருகின்றனர் என்று நெல்லியடி பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. அதை அடுத்தே இரு குழுக்களையும் சேர்ந்த 12 பேரைப் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர். பின்னர் பொலிஸ் பிணையில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-109)

### வேலை வாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல ரெஸ்ரோரண்டுக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

* Cook (குக்)
* உணவு பரிமாறுபவர்
* சுத்திகரிப்பாளர்

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (41338) (10.6.3)

தொடர்புக்கு: 075 724 6060

### பழைய மரச்சகடை விற்பனை

எமது வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில் பாவித்த மரச்சகடை (நீளம் 13' 9'', அகலம் 7'4'', உயரம் 3'6'') உடைய பழைய சகடை ஞாயிற்றுக்கிழமை (03.08.2014) ஏலம் மூலம் ஆலய கோபுர வாசலில் காலை 9 மணியளவில் விற்கப்பட உள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய கோயில்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலன சபை, கைதடி. (50346) (45.6.3)

## தேவாரப் பண்ணிசை பயிற்சி வகுப்பு

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வாரந் தோறும் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் சைவாலயங்கள், சைவ நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளிலும் இலவச தேவார பண்ணிசைப் பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகிறது.

அந்த வகையில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் பிற்பகல் 3 மணி முதல் 4.30 மணி வரையும், யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய நாயன்மார் மண்டபத்தில் 4.30 மணி முதல் 6.30 மணி வரையும், செவ்வாய்க்கிழமைகளில் மாலை 5 மணி முதல் 6.30 மணி வரை கொழும்புத்துறை சிவ தொண்டன் நிலைய மகளிர் ஆச்சிரமத்திலும், கலாபூஷணம் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்த ஓதுவார் இந்தப் பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகிறார்.

இதில் ஆண், பெண் இருபாலாரும், மாணவர்களும் பங்குபற்றிப் பயன்பெறலாம் என்று மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (ஓ)

### VACANCY

**Software Engineer**-Computer Science/IT Degree, Experience more than 3 Years, Experience in PHP/Java Script/MY SQL, Best Practice in OOP, Experience in developing POS & Accounting Software would be an added advantage.

**Software Developer** - Fresher's with CSE/IT Degree or Deploma in CSE/IT with 1 Year Experience, Good knowledge about Web based, DBMS applications.

Candidates willing to work in base station in Kilinochchi. Salary Negotiable based on Qualification and Experience. Interested Candidates Please Forward your CV to jptechkili@gmail.com

**JP TECHNOLOGIES**
No.70/1, Kanakapuram, Kilinochchi (41338) (10.6.3)




### சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்


ஆவரங்கால் இந்து மன்ற வீதியை வசிப்பிடமாகவும் மந்திகை ஆதார வைத்திய சாலையின் இயந்திரப் பிரிவில் கடமையாற்றும்

**பொன்.கஜேந்திரன்**

அவர்கள் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு 14.07.2014 அன்று மல்லாகம் மாவட்ட நீதிபதி கௌரவ.S.சதீஸ்தரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவரை மேலும் பல பட்டங்கள் பெற வேண்டும் என வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர்:
இயந்திர மேற்பார்வையாளர்களும், இயந்திர இயக்குநர்களும்
ஆதார வைத்தியசாலை, மந்திகை (50336)(5.6.3)




### FAMILY REHABILITATION CENTRE

*The Family Rehabilitation Centre (FRC) is a non-profit, non-sectarian organization incorporated in August 1992, engaged in humanitarian work, (www.frcsl.org).*

### PSYCHOSOCIAL WORKER
VAVUNIYA

**Applicants must possess:**

* A Degree/Diploma in counseling from a recognized institution.
* At least 3 years experience in counseling
* Computer literacy
* Fluency in local languages and working knowledge in English

The Psychosocial Worker is expected to work in the office as well as in the field. Remuneration will be around Rs.27,500/= and depend on the qualifications and experience, Please forward your CV with 2 references within 10 days to: frcsl@slt.lk Or to the following address:

**FAMILY REHABILITATION CENTRE**
No.73, Srimath R.G.Senanayake Mawatha,
(Formally Gregory's Road),
Colombo 07, Sri Lanka.
Fax: 94-11-2695885
Email:frcsl@slt,lk

(4838) (12.3.6)

## தனிநாயகம் அடிகளாருக்கு யாழ். மடத்தடியில் சிலை

### அவரது பிறந்த நாளில் திறப்பு விழா



யாழ்ப்பாணம், ஜூலை 30
யாழ். நகரில் உள்ள மடத்தடி (கொன்வென்ற் பாடசாலை அருகில்) அரச மரத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தனிநாயகம் அடிகள் நினைவு முற்றம், அடிகளாரின் பிறந்த தினமாகிய எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும், யாழ். மறை மாவட்டமும் இணைந்து முன்னெடுக்கும் இந்த நிகழ்வில் யாழ். மறை மாவட்ட ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும், நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் இணைந்து தனிநாயகம் அடிகளாரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைப்பார்கள்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தெய்வ வணக்கத்தை யாழ். தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் கு.பாலஷண்முகனும், தொடக்கவுரையை தனிநாயகம் அடிகள் நூற்றாண்டுவிழாக் குழு இணைச்செயலர் அருட்பணி அ.பி.ஜெயசேகரமும் வழங்குவர்.

சிலைத் திறப்பு விழாவைத் தொடர்ந்து திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியற் கல்லூரி மண்டபத்தில் தனிநாயகம் அடிகள் நினைவு நிகழ்வுகள் இடம்பெறும். இதில் தமிழ்ச் சங்க உபதலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி, தனிநாயகம் அடிகளாரின் கல்வித்துறைசார் பங்களிப்பு என்ற பொருளில் சிறப்புரையாற்றுவார். திருமறைக் கலாமன்றத்தினர் வழங்கும் தமிழ்த் தாயின் புகழானாய் என்ற நாட்டிய நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. (ஓ)

# தொடர்ந்து கொண்டே இருக்கும் தமிழின வளர்ச்சிப் பணிகள்

### வட மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30
தமிழின வளர்ச்சிப் பணிகள் இனிமேல் தொடர்ந்துகொண்டே இருக்கும். மெல்ல மெல்ல தமிழ்ச் சமுதாய அடையாளங்களை மீட்டெடுக்க அனைவரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும் என்று வட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்றிட்டத்தின் மூன்றாம் கட்டம் முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியில் அண்மையில் இடம்பெற்றது.

போரால் பெற்றோரில் ஒருவரை அல்லது இருவரையும் இழந்த மாணவர்களின் பாடசாலை இடைவிலகலை குறைக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தச் செயற்றிட்டத்தின் முதல் இரண்டு கட்டங்கள் மூலம் 87 மாணவர்கள் பயன்பெற்ற நிலையில் அதன் மூன்றாம் கட்டம் கடந்த சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமானது.

மூன்றாம் கட்டத்துக்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் மூலமாகவும் 20 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பாடசாலைக்கான தைத்த சீருடை, காலணி, கொப்பிகள் மற்றும் புத்தகப் பை என்பன வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ரவிகரன் மேலும் கூறுகையில்:- ஒரு வருடத்துக்கு முன்னர் எனக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு ஆய்வறிக்கையில் 2012 ஆம் ஆண்டு 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வடக்கு-கிழக்கு மாண வர்கள் பாடசாலையில் இருந்து இடைவிலகியுள்ளார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இது ஒட்டுமொத்த இலங்கை ரீதியில் கிட்டத்தட்ட 50 சதவீதம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஈழத்தமிழினம் கொண்டிருந்த அடையாளங்களுள் கல்வியும் ஒன்று. எமது தாயகம் பல நூற்றுக்கணக்கான கல்விமான்களை அடையாளப்படுத்திய தேசம். போர் அழிவுகளோடு எமது மரபுகளும் அழிந்து செல்லும் நிலையை பொறுப்புள்ள எவரும் அனுமதிக்க முடியாது.

பாடசாலை இடைவிலகலுக்கான காரணங்களை ஆராய்ந்த போது ஈழத்தமிழினத்தின் வறுமையே அங்கு முன்னிற்கிறது. ஆதலால் பாடசாலை இடைவிலகலைக் குறைக்கும் நோக்கில் புலம்பெயர் உறவுகளுடன் கைகோர்த்து இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுக்கத் தொடங்கினேன். புலம்பெயர் உறவுகளும் கைகொடுக்கத் தொடங்கினார்கள். இன்று இந்தச் செயற்றிட்டம் 107 மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை உறுதிப்படுத்தியிருக்கிறது.

இந்தச் செயற்றிட்டத்தின் மூன்றாம் கட்டமாகிய இன்றைய நிகழ்வில் 20 மாணவர்களுக்கான கல்விசார் பொருள்களை வழங்க என். சிவகணேஸ் மற்றும் தி.சதீஸ்குமார் ஆகியோர் (தமிழ் சமூக நிலையம் லண்டன்) முன்வந்திருக்கிறார்கள். இனிவரும் நாள்களில் இந்தத் திட்டம் அடுத்தடுத்த கட்டங்களை எட்டும். இன்னமும் வறுமையால் வாடும் பல ஈழத்துச் சிறார்கள் இந்தச் செயற்றிட்டங்களால் பயனடைவார்கள். அவர்களால் எமது தேசம் மலரும். எமது மரபுகள் வளரும். எமது தாயகம் மேலும் சிறக்கும் என்ற நம்பிக்கையும் கனவும் அதிகமாகவே எமக்கு இருக் கிறது - என்றார். (வ-5)

## இந்து, முதியோர் இல்லங்களுக்கு கலாசார திணைக்களத்தால் நிதியுதவி

வவுனியா, ஜூலை 30
வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இந்து இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் சுமார் 10 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட வவுனியா கோயில்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக சிறுவர் இல்லம், வேப்பங்குளம் இந்து அன்பக சிறுவர் இல்லம் மற்றும் முருகனூர் சிவன் முதியோர் இல்லம் என்பவற்றுக்கே இந்த நிதி உதவி வழங்கப்பட்டது.

இதில் அருளக சிறுவர் இல்லத்துக்கு 4 லட்சத்து 62 ஆயிரத்து 500 ரூபாவும், வேப்பங்குளம் அன்பக சிறுவர் இல்லத்துக்கு ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 500 ரூபாவும், முருகனூர் சிவன் முதியோர் இல்லத்துக்கு 3 லட்சத்து 87 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்பட்டன.

இந்த நிதியை வ்வுனியா பிரதேச செயலர் கா.உதயராசா வழங்கி வைத்தார் என வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தெரிவித்தார். (க-108)

## அபராதம்

கிளிநொச்சி, ஜூலை 30
20போத்தல் கசிப்பைத் தம் வசம் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட கிளிநொச்சி தர்மபுரம் ஆறாம் யுனிற்றைச் சேர்ந்த நபரொருவருக்கு கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் எம்.ஏ.வஹாப்தீன் ஒரு லட்சத்து 25ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

கடந்த 24 ஆம் திகதி மாலை பொது மக்கள் வழங்கிய இரகசியத் தகவலை அடுத்து தர்மபுரம் 6ஆம் யுனிற் பகுதியில் தேடுதல் நடத்திய கிளிநொச்சி மாவட்ட மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20போத்தல் கசிப்பை கைப்பற்றியதுடன் அதனை வைத்திருந்த நபரையும் கைது செய்தனர்.

குறித்த நபரை மறுநாள் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தியபோது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது (வ-9)

## வரலட்சுமி விரத உற்சவம்

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் ஸ்ரீ வரலட்சுமி விரத உற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

நோன்பு நூல் பெற விரும்பும் அடியார்கள் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஆதீன மகா சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

## நாளை தேரில்வரும் நல்லைக் கந்தனின் கொடிச்சீலை

நல்லூர், ஜூலை 30
நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள வைத்தியர் ந.சத்தியமூர்த்தியின் இல்லத்தில் இருந்து சமய ஆராதனைகளின் பின்னர் பரம்பரை மரபின்படி தர்மகுலசிங்கம் (ரவி) என்பவர் நல்லூர் கந்தனின் கொடிச்சீலையை சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள வேல்முருகன் ஆலயத்துக்கு எடுத்துச் செல்வார்.

அங்கு பூசை வழிபாடுகளின் பின்னர் தேரில் வைத்து பக்தர்களால் நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்கு கொடிச்சீலை எடுத்துச் செல்லப்படும். (ஓ)

## ஆடிப்பூர பெருவிழா

வட்டு கிழக்கு துறட்டிப்பனை அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய ஆடிப் பூர பெருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. அம்பாள் உள் வீதி வலம் வரும் நிகழ்வும் இடம்பெறும். பகல் அன்னதானம் வழங்கப்படும். (க)

## ஒளிர மறுக்கும் வீதி விளக்குகள்

யாழ்ப்பாணம், ஜூலை 30
உடுவில், ஆலடிப்பகுதியில் உள்ள ஒரு தொகுதி வீதி மின் விளக்குகள் நீண்ட காலமாக ஒளிராது காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் அந்தப் பகுதி வீதியில் போதிய வெளிச்சம் இல்லாததால் பயணிகள் விபத்துக்களை எதிர்நோக்குவதுடன் அச்சத்துடனும் பயணிக்க வேண்டியுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள ஆளி (சுவிச்) மற்றும் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளதாக பலமுறை பிரதேச சபை மற்றும் உரியஅதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-135)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 23 . 11 . 1927



மறைவு 01 . 07 . 2014

அமரர் வேலுப்பிள்ளை (வெள்ளையப்பா) மார்க்கண்டு

கடந்த 01.07.2014 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் அமரர் வேலுப்பிள்ளை மார்க்கண்டு அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (31.07.2014) வியாழக்கிழமை அதிகாலை 5 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுகளுக்கு அனைவரும் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குமாரவளவு,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்
கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம்
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
தொ.பே. 071 817 5820

(47008) (45.8.3)



2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
நாகலிங்கம் தியாகராசா

திதி: திருதியை
நட்சத்திரம் - பூரம்

தோற்றம் 04.06.1944
மறைவு 21.07.2012

ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம்மை விட்டு நீங்காது

குடும்பத்தினர்.
சைவப் பாடசாலை லேன்,
கோண்டாவில் மேற்கு.

(50342)(4.3.6)

# உள்ளக விசாரணை நடத்தப்படின் ராஜதந்திர ரீதியில் நடத்த வேண்டும்

## வலியுறுத்துகின்றது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஜூலை 30
போர்க் குற்றம் தொடர்பாக உள்ளக ரீதியில் விசாரணை நடத்தப்பட வேண்டுமாயின் அது ராஜதந்திர ரீதியில் நடத்தப்பட வேண்டியது அவசியமானது என்று வலியுறுத்தியுள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க,
"போர்க்குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசு உள்ளக விசாரணை நடத்தினால், அது ராஜதந்திர ரீதியில் முன்னெடுக்கப்பட வேண்டும்.



போர் வெற்றிக் களிப்பில் திளைத்த அரசு நாட்டை உரிய வகையில் வழிநடத்தவில்லை. அதன் காரணமாகவே சர்வதேச ரீதியிலும் உள்நாட்டு ரீதியிலும் அரசு நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.
மக்களின் நலன் கருதி இந்த அரசு செயற்படுவதில்லை. அதனால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.
இவை குறித்து கவனம் செலுத்தாது அரசு மீண்டும் தேர்தல் தொடர்பிலான பரபரப்பை ஏற்படுத்தி மக்களை திசை திருப்பி வருகின்றது"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# பொது பல சேனாவுடன் அரசுக்கு தொடர்புண்டு

## அமெரிக்கா கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 30
பொது பலசேனா அமைப்புக்கு தற்போதைய இலங்கை அரசுடன் தொடர்புகள் உள்ளன என்று தகவல்கள் கிடைத்துள்ளன என்று அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட 2013ஆம் ஆண்டுக்கான சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.
அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரியால் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையில், இலங்கையில் மதங்கள் தொடர்பில் நீண்ட விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.
"இலங்கையிலுள்ள சிறுபான்மை மதங்களுக்கு சிக்கல்கள் ஏற்படுத்தப்படுகின்றன.
மதத் தலங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றன"- என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அத்துடன் பொதுபல சேனா அமைப்பு மற்றும் ராவண பலய அமைப்பு ஆகியவை பற்றியும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இலங்கையில் வலுக்கட்டாயமாக மதங்களுக்கு ஆள்கள் சேர்க்கப்படுகின்றனர் என்றும், அதனை சாதாரண மக்கள் எதிர்க்கின்றனர் என் றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# சூதாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் உட்பட 9 பேர் கைது

கொழும்பு, ஜூலை 30
சட்டவிரோதமான முறையில் சூதாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் இருவர் உட்பட ஒன்பது பேர் பனா கொட பிரதேசத்தில் கைது செய்யப்பட் டுள்ளனர்.
வலான குற்றத்தடுப்பு பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலைத் தொடர்ந்து பொலிஸார் மேற் கொண்ட தேடுதலின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இதன்போது சந்தேகநபர்களிடம் இருந்து 78,579 ரூபா பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளது.
கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பாதுக்க, அவிசாவளை, ஹோமாகம, அத்துருகிரிய மற்றும் மீகொட பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.
இவர்கள் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ஓ)

# ஊவா மாகாண சபைத் தேர்தலில் விமலின் கட்சி தனித்துப் போட்டி

கொழும்பு, ஜூலை 30
ஊவா மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதது என்று தேசிய சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ளது.
நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் உரையாற்றிய முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ இந்தத் தகவலைத் வெளியிட்டுள்ளார். அதையடுத்து பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் தேசிய சுதந்திர முன்னணி தனியாக வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யவுள்ளது.




அதேவேளை, ஊவா மாகாண சபைக்கான வேட்புமனுக்களை ஏற்கும் நடவடிக்கை இன்று ஆரம்பமாகவுள்ளது. (ற)

# அநுர குமாரவின் சாரதி கைது




கொழும்பு, ஜூலை 30
மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்கவின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.
இரத்தினபுரி - கிரிஎல்ல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தின் பின்னர், இரத்தினபுரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.
கவனயீனமாக வாகனத்தை செலுத்தியதாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. நேற்று அவர் நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். (ஓ)

# பிரபாகரனால் முடியாததை நவிப்பிள்ளை செய்ய முயற்சி

## குற்றஞ்சாட்டுகின்றார் அமைச்சர் டிலான் பெரேரா

கொழும்பு, ஜூலை 30
ஐக்கிய நாடுகள் சபையால் முன்னெடுக்கப்படும் சர்வதேச விசாரணைகள் ஒரு நாடகக் காட்சியாகும் என்று சாடியுள்ளார் அமைச்சர் டிலான் பெரேரா.
அந்த விசாரணையின் முடிவுகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டன என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.
அரச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
வேலுப்பிள்ளை பிரபாகரனால் செய்ய முடியாததை நவநீதம்பிள்ளை வேறு வழிகளால் செய்ய முயற்சிக்கின்றார் என்று தெரிவித்துள்ள அவர்,




அந்த முயற்சியை இலங்கை அரசு முழுமையாக நிராகரித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.
இலங்கையில் அனைத்து பொறிமுறைகளும் இருக்கும் போது ஏன்? வெளிநாட்டு பொறிமுறையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவர் அ[illegible] கேள்வி எழுப்பியுள்ளார். (ற)

# மரண அறிவித்தல்

## திருமதி நாகம்மா மாணிக்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)



புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 179, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா மாணிக்கம் நேற்று முன்தினம் (28.07.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை மாணிக்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், ஜெயந்தி (ஆஸ்திரேலியா), நிர்மலா (ஆசிரியை, யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம்), ஜெயக்குமார் (எஸ்.ஜே.எலக்றிக்கல்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும், சிவயோகநாதன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), பஞ்சலிங்கம் (அதிபர், யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்), பிரியந்தி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, செல்லம்மா, துரைச்சாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் றஜீவன், அபிராமி, பிரதீபன், நிரோசன், தீபதரன், தினேசன், கோபிநாத், ஹறிணி, ஹறிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2014) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

179, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். 077 266 6670

தகவல்:
குடும்பத்தினர்.

(50334) (45.6.3)

# பேருவளையில் வைபவம் முடிந்து ஜனாதிபதி வெளியேறிய கையோடு ஹோட்டலில் தீ!

கொழும்பு, ஜூலை 30
பேருவளையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஞாயிறன்று நடந்த திருமண வைபவத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கிருந்து வெளியேறிய ஒருசில நிமிடங்களில் அந்த ஹோட்டலில் தீ பரவியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
திருமண வைபவத்தில்திருமணப்பதிவுக்கு சாட்சிக் கையொப்பமிட வந்திருந்த ஜனாதிபதி அது முடிந்ததும் வெளியேறினார் எனவும், அவர் வெளியேறிய ஓரிரு நிமிடங்களில் ஹோட்டல் கழிவறை யொன்றில் தீ பரவி யது எனவும், அது உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.
கீழ் மாடியில் நடந்த திருமணப்பதிவு வைபவத்தில் ஜனாதிபதி மஹிந்த கலந்து கொண்டார் எனவும், தீ பரவியது மூன்றாம் மாடியில் எனவும் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண, இந்தத் தீ விபத்து பற்றி காரணத்தை அறிய அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ)

மணப் பந்தல் விற்பனைக்கு
60 அடி சொக்கட்டான் பந்தல்
50 அடி லெவல்சீற் பந்தல்
30 அடி வெறும் பந்தல்
இவற்றுடன் இணைந்த மேடை,
கதிரை சமையல் பாத்திரங்கள்
விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 077 757 4752 (49719)(4.6.3)

# இருபதாம் ஆண்டிலே நினைவலைகள்



## தம்பிஜயா ரவிச்சந்திரன் (ராசன்)

தாயின் மடியில் 05.01.1968
ஐங்கரன் தாளில் 10.08.1994
திதி: 30.07.2014

கடைக்குட்டியாய் நீ பிறந்து
முதலாவதாய் முந்திச்சென்றாயோ?
காரணம் தான் யாதோ?
சொல்வாய் எமதுயிரே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நவேந்திர வீதி,
இணுவில் மேற்கு.

குடும்பத்தினர்.

# ஹமாஸ் ரொக்கெட் தாக்குதலில் 9 இஸ்ரேலியப் படையினர் சாவு

ஜெருசலேம், ஜூலை 30
ஹமாஸ் படைகள் திங்கட்கிழமை மேற்கொண்ட ரொக்கெட் தாக்குதலில் இஸ்ரேல் தரப்பில் 9 இராணுவத்தினர் சாவடைந்தனர். இந்தச் சண்டையில் இதுவரை சாவடைந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை 52 ஆக உயர்ந்துள்ளது என இஸ்ரேலிய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலைச் சேர்ந்த 3 மாணவர்கள் கொல்லப்பட்டது தொடர்பாக மூண்ட இரு தரப்புச் சண்டை கடந்த 22 நாட்களாக நீடித்து வருகிறது.

தீவிரமாக சண்டையிட்டு வரும் இஸ்ரேலும் ஹமாஸ் அமைப்பும் கடந்த 26ஆம் திகதி தற்காலிக போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டன.

காஸாவில் வாழும் மக்கள் ரமழான் பண்டிகையைக் கொண்டாட வழிவகுக்கும் வகையில் மேலும் 24 மணி நேரத்துக்கு போர் நிறுத்தத்தை நீடிக்குமாறு ஐ.நா. அதிகாரிகள் இஸ்ரேலை கேட்டுக் கொண்டனர்.

இதனை இஸ்ரேலும் ஏற்றுக்கொண்டது. இந்த நிலையில், காஸா பகுதியிலிருந்து இஸ்ரேல் இராணுவ டாங்கிகளும், காலாட் படையினரும் வெளியேறும் வரை போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறிய ஹமாஸ் போராளிகள் திங்கட்கிழமை இஸ்ரேல் மீது 5 ரொக்கெட்களை வீசி தாக்குதல் நடத்தினர்.

இவற்றில் 4 ரொக்கெட்களை இஸ்ரேல் இடைமறித்து சுட்டு வீழ்த்தியது. ஒரு ரொக்கெட் மட்டும் இஸ்ரேலிலுள்ள குடியிருப்புப் பகுதியில் விழுந்ததில் ஒரு வீடு இடிந்து தரை மட்டமாகியது.

இதனையடுத்து, காஸா பகுதி மீதான வான்வழி, தரைவழித் தாக்குதலை தொடர்ந்து நடத்துமாறு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு உத்தரவிட்டார்.

இதை தொடர்ந்து மீண்டும் துவங்கிய இரு தரப்பு தாக்குதலின் விளைவாக சாவடைந்த பலஸ்தீனியர்களின் எண்ணிக்கை 1066 ஆக உயர்ந்துள்ளது. இரு தரப்பிலும் சுமார் 6 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர். (த)



உலகெங்கும் நேற்று ரம்ழான் பண்டிகை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆயினும் காஸாவில் உள்ள முஸ்லிம்களுக்கு மட்டும் நேற்றைய ரம்ழான் பெரும் துயரமானதாக அமைந்தது. நேற்றும் அங்கு இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 9 குழந்தைகள் உட்பட 24 பேர் உயிரிழந்தனர். (த)

## விமானத்தைச் சுட்டமை போர்க் குற்றத்துக்கு சமம்

### ஐ.நா. ஆணையாளர் நவிப்பிள்ளை கண்டனம்



நவிப்பிள்ளை

ஜெனிவா, ஜூலை 30
கிழக்கு உக்ரைனில் மலேசிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது போர்க் குற்றத்துக்கு சமமானது என்று ஐ.நா. சபை தெரிவித்துள்ளது. இது குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மலேசிய பயணிகள் விமானம் நடுவானில் சுட்டு வீழ்த்தப்பட்டது கண்டனத்துக்குரியது. இதுகுறித்து முழுமையான, சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும். இந்தச் சம்பவத்தில் சர்வதேச விதிகள் மீறப்பட்டுள்ளன. விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது போர்க் குற்றத்துக்கு இணையானது. சம்பவத்துக்கு காரணமானவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நீதியின் முன்பு நிறுத்தப்பட வேண்டும்.

டோனஸ்க், லூகான்ஸ்க் பகுதிகளில் உள்நாட்டுப் போர் தீவிரம் அடைந்துள்ளது. இதனால் உயிரிழப்பு அதிகரித்து வருகிறது. இரு தரப்பிலும் அப்பாவி பொதுமக்கள் அதிகம் சாவடைந்து வருகின்றனர். இதுவரை 1129 பேர் உயிரிழந்துள்ளனர். 3442 பேர் பலத்த காயமடைந்துள்ளனர். உள்நாட்டுப் போர் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் - என்றுள்ளது. (த)

## அமெரிக்கா மீது அணு ஆயுத தாக்குதல்

### வடகொரியா மிரட்டல்

பியோங்யாங், ஜூலை 30
அமெரிக்க அதிபர் மாளிகை மீதும், அந்நாட்டின் இராணுவத் தலைமையகமான பென்டகன் மீதும் அணு ஆயுதத் தாக்குதல் நடத்துவோம் என்று வடகொரிய இராணுவத்தின் உயர் அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

வடகொரிய தலைநகர் பியோங்யாங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இராணுவ அணிவகுப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற அந்நாட்டு இராணுவ துணைத் தளபதி ஹுவாங் பியோங் பேசியதாவது:

சமீப காலமாக தென்கொரியாவும், அமெரிக்காவும் இணைந்து மேற்கொள்ளும் போர்ப் பயிற்சி நடவடிக்கைகள் இப்பகுதியில் பதற்றமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளன. அணு ஆயுதத் தாக்குதலுக்கு பயன்படுத்தும் போர் விமானங்களை அமெரிக்கா பயிற்சியில் ஈடுபடுத்தி வருகிறது.

நமது நாட்டின் இறையாண்மைக்கு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அச்சுறுத்தலாக இருந்தால், அவர்களின் அதிபர் மாளிகையான வெள்ளை மாளிகையிலும், பென்டகனிலும் அணு ஆயுதத் தாக்குதலை நடத்துவோம் என்று தெரிவித்துள்ளார். (த)

## காஸாவில் போர் நிறுத்தத்துக்கு ஐ.நா., அமெரிக்கா வலியுறுத்தல்

வொஷிங்ரன், ஜூலை 30
காஸாவில் உடனடியாகப் போரை நிறுத்த வேண்டுமென்று இஸ்ரேலையும், ஹமாஸ் அமைப்பையும் ஐ.நா. பாதுகாப்புச் சபையும், அமெரிக்காவும் வலியுறுத்தியுள்ளன. காஸாவில் கடந்த 21நாள்களாக நடைபெற்று வரும் மோதலில் இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

மனிதாபிமான அடிப்படையில் எவ்வித நிபந்தனையும் விதிக்காமல் இரு தரப்பும் போரை நிறுத்தவேண்டும். இதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர கால உதவிகளைச் செய்ய முடியும் என்று ஐ.நா. பாதுகாப்புச் சபை கூறியுள்ளது.

காஸாவில் நடைபெற்று வரும் தாக்குதல்கள் குறித்து ஐ.நா பாதுகாப்புச் சபையில் அவசர ஆலோசனைக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. 15 உறுப்பு நாடுகளும் பங்கேற்ற இக்கூட்டத்தில், காஸாவில் உடனடி போர் நிறுத்தத்திற்கு வலியுறுத்துவது என ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது. சர்வதேச மனித உரிமைகள் சட்டம் முழுமையாக மதிக்கப்படவேண்டும். அப்பாவிப் பொதுமக்கள் பாதுகாப்பு உறுதி செய்யப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்புச் சபை வலியுறுத்தியுள்ளது. 20 நாள்களாக நடந்துவரும் போரில், 1030 பலஸ்தீனர்களும் 46 இஸ்ரேலியர்களும் உயிரிழந்துள்ளனர்.

### நெதன்யாகுவிடம் ஒபாமா வலியுறுத்தல்

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, போரை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அமெரிக்க அதிபர் இல்லமான வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு ரொக்கெட் குண்டுகளை வீசுவதையும், சுரங்கம் அமைத்து தாக்குதல் நடத்துவதையும் அமெரிக்க வன்மையாகக் கண்டிக்கிறது. அதே நேரத்தில் பலஸ்தீனத்தில் அப்பாவி மக்கள் அதிகம் பேர் உயிரிழப்பது கவலை அளிக்கிறது. இஸ்ரேல் தரப்பிலும் பலர் உயிரிழந்துள்ளனர். அங்கு மனித உரிமை என்பது கேள்விக் குறியாகி வருகிறது.

எனவே காஸாவில் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று நெதன்யாகுவிடம் ஒபாமா கூறினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இஸ்ரேல் அரசு அறிவித்த 24 மணி நேரப் போர்நிறுத்தத்தை ஹமாஸ் இயக்கத்தினர் ஏற்க மறுத்து ஞாயிற்றுக்கிழமை ரொக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக இஸ்ரேல் ராணுவமும் காஸாவைக் குறிவைத்து மீண்டும் தாக்குதலைதொடங்கியுள்ளது.(த)

## ஐ.எஸ்.ஐ.எஸ்ஸுடன் கைகோர்க்கும் சீனர்கள்



பக்தாத், ஜூலை 30
ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்புடன் தற்போது சீனாவைச் சேர்ந்த இஸ்லாமியர்களும் இணைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரியா மற்றும் ஈராக்கில் சன்னி இஸ்லாமியர்கள் கொண்ட ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கம், முக்கிய நகரங்களைக் கைப்பற்றி தனிநாடாக பிரகடனம் செய்துள்ளது.

இந்த நாட்டுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தலைவர் அபூபக்கர் அல் பாக்தாதி தன்னை கலிபா (தலைவராக) என அறிவித்துள்ளார். மேலும் அங்கு குடியிருக்கும் ஏராளமான மக்களை இந்த அமைப்பினர்சமீபத்தில்கொன்று குவித்தது உலக நாடுகளைக் கதி கலங்கச் செய்துள்ளது.

இந்நிலையில் சீனாவைச் சேர்ந்த சிலரும் ஐ.எஸ். ஐ.எஸ் பயங்கரவாதிகளுடன் இணைந்துள்ளதாக அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது. குறிப்பாக சீனாவில் உள்ள ஜின்ஜியாங் மாகாணத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இஸ்லாமியர்கள், மேற்காசிய நாடுகளுக்குச் சென்று, ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பில் இணைந்துள்ளதாக சீன அரசு தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது. (த)



ரம்ழான் பண்டிகை நேற்றுக் கொண்டாடப்பட்டது. அந்தப் பண்டிகையை முன்னிட்டு முஸ்லிம்களால் பரிமாறப்படும் விசேட இனிப்புப் பண்டமான கஜ்லா இந்தியாவில் நேற்றுப் பெருமளவில் விற்பனையாகியது. (த)

## நடிகர் கார்த்தி சுகவீனம்

சென்னை, ஜூலை 30
நடிகர் கார்த்தி உடல்நலக் குறைவு காரணமாக நேற்று முன்தினம் சென்னையில் ஒரு தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.
கமுதியில் நடந்த கொம்பன் என்ற படத்தின் படப்பிடிப்பில் கடந்த 30 நாள்களாக கலந்து கொண்டிருந்த அவர், அவர் தொடர்பான காட்சிகள் பட மாக்கி முடிக்கப்பட்டதால் சென்னை திரும்பியுள்ளார்.
இந்நிலையில், நேற்று முன் தினம் மாலை சென்னை மைலாப்பூரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனை யில், அவர் அனுமதிக்கப்பட் டதாகத் தெரிகிறது. (த)



கார்த்தி

## முதல்வரை சந்திப்பேன்



அன்புமணி ராமதாஸ்

சென்னை, ஜூலை 30
தருமபுரித் தொகுதி மக்களின் நலனுக்காகத் தமிழக முதல் வர் ஜெயலலிதாவை சந்திப் பேன் என்று அந்தத் தொகுதி மக்களவை உறுப்பினர் அன்பு மணி ராமதாஸ் கூறினார்.
தருமபுரி நீதிமன்ற வளாகத் தில் மக்களவை உறுப்பினர் அலுவலகம் அமைக்கப்பட் டுள்ளது.
அந்த அலுவலகத்தை அன்பு மணி ராமதாஸ் கடந்த திங் கட்கிழமை திறந்து வைத்தார். பின்னர் அவர் செய்தியாளர் களிடம் கூறியதாவது:-
மத்திய அரசு அறிவித்துள்ள எய்ம்ஸ் மருத்துவமனையை தருமபுரி மாவட்டத்தில் அமைக் கும்படி முதல்வர் ஜெயலலி தாவுக்கு கடிதம் அனுப்பியுள் ளேன். இங்கு அமைப்பதன் மூலம் சுற்றுவட்டார பகுதியில் உள்ள மாவட்ட மக்கள் பயன் பெறுவதுடன் வேலைவாய்ப் பும் கிட்டும்.
தருமபுரியில் விவசாயம் சார்ந்த மேம்பாட்டுக்கு மேற்கொள்ளப் ப்பட வேண்டிய நடவடிக்கை கள் குறித்து அனைத்துத் தரப் பினருடனும் ஆலோசிக்க கருத்தரங்கம் ஒன்றை நடத்த வுள்ளோம்.
மக்களின் நலன் சார்ந்த பல் வேறு பணிகள் மத்திய, மாநில அரசுகள் மூலம் மேற்கொள் ளப்படும். தேவை ஏற்பட்டால் இந்த மாவட்ட மக்களின் நன் மைக்காகத் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை நேரில் சந் திப்பேன் என்றார் - அன்பு மணி. (த)

# காஸா தாக்குதலை எதிர்த்து நேற்றுத் திரண்ட முஸ்லிம்கள்

## ரம்ழான் தொழுகைக்குப் பின்னர் டில்லி மஸ்ஜித்தில் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, ஜூலை 30
காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலின் எதிரொலியாக, இந்தியா முழுவதும் கொண் டாடப்பட்ட ரம்ழான் பண்டி கையில் வழக்கமான உற் சாகம் வெகுவாகக் குறைந் திருந்தது.
இந்தியாவில் நேற்று ரம்ழான் பண்டிகை கொண்டாடப்பட் டது. ஆயினும் இந்தியா வின் பல்வேறு பகுதிகளிலும் காஸாவில் பலஸ்தீனர்கள் மீதான தாக்குதலை நிறுத்தி, மனிதநேயத்தைக் காத்திட வழிவகுக்கவேண்டும் என்ற குரலும் எழுப்பப்பட்டது.



டில்லி ஜும்மா மசூதியில் நடந்த தொழுகைக்குப் பின்னர், காஸாவில் நடைபெறும் தாக் குதலை' மையப்படுத்தி பதா கைகளைக் கையில் ஏந்திய வண்ணம் இஸ்லாமியர்கள் திரண்டிருந்தனர்.
பலஸ்தீனத்தின் மீதான தாக் குதல் தங்கள் மீதான தாக்கு தல் எனச் சகோதரத்துவ கோட் பாட்டை வலியுறுத்தும் வகை யில், அந்த பதாகைகளில் எழுதப்பட்டிருந்த வார்த்தை கள் அமைந்திருந்தன. இஸ் ரேலின் வன்முறை நிறுத் தப்படவேண்டும் எனவும் அவற்றில் எழுதப்பட்டிருந்தது.
பலஸ்தீனத்தின் காஸா மீது கடந்த 21 நாள்களாக இஸ் ரேல் தாக்குதல் நடத்தி வரு கிறது. ஹமாஸ் கிளர்ச்சியாளர் களுக்கு எதிராகவே இந்தத் தாக்குதல் நடைபெறுகிறது என இஸ்ரேல் கூறி வந்தாலும், போரில் அப்பாவிப் பொது மக்களே அதிகம் பேர் பலி யாகியிருப்பதாக ஐ.நா. தெரி வித்துள்ளது.
பலஸ்தீனியர் தரப்பில் இந்தப் போரில் பலியான வர்களின் எண்ணிக்கை 1030 ஆக உயர்ந்துள்ளது.
இஸ்ரேல் தரப்பில் 46 பேர் உயிரிழந்துள்ளனர். அவர் களில் 43 பேர் இஸ்ரேல் இராணுவத்தினராவர். (த)

# இலங்கை இராணுவக் கருத்தரங்கில் இந்திய அரசு பங்கேற்கக் கூடாது

## வைகோ வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 30
இலங்கை இராணுவக் கருத் தரங்கில் பங்கேற்கும் முடிவை இந்திய அரசு உடனடியாகக் கைவிடவேண்டும் என ம.தி. மு.க. பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.
இனப்படுகொலையில் ஈடுபட்ட இலங்கை இராணுவத் தரப் பினரின் கருத்தரங்கில் இந் தியா பங்கேற்பது என்பது சகிக்க முடியாத, மன்னிக்க முடி யாத மாபாதகச் செயலாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில்:
தமிழ் இனப் படுகொலை நடத் திய சிங்கள அரசு, கொழும் பில் ஒகஸ்ட் 18 முதல் 20 ஆம் திகதி வரை மூன்று நாள்கள் இலங்கை இராணுவக் கருத் தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்து இருக்கின்றது. இந்தக் கருத் தரங்கில் இந்திய இராணுவத் தளபதிகளும், அதிகாரிகளும் பங்கேற்கிறார்கள் என்றும், பாரதீய ஜனதா கட்சியின் சார் பில் சுப்பிரமணியசுவாமி உள் ளிட்ட குழுவினரும் கலந்து கொள்வர் என்றும் செய்தி வெளி யாகி இருக்கின்றது. இந்தத் தகவல் தமிழ் மக்களுக்குக் கடும் அதிர்ச்சியையும் மனவேத னையையும் தருகிறது.
ஈழத் தமிழர்களுக்கு எதிராக வும், குழந்தைகள் வயது முதிர்ந்தோர், பெண்கள் உள் ளிட்ட லட்சக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்த ராஜபக்ஷ அரசுக்கு ஆதர வாகவும் இந்திய அரசு செயற் படும் என்று இந்திய அரசின்



வைகோ

சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்து, தாய்த் தமிழ்நாட்டு மக்களைக் கொந் தளிக்கச் செய்துள்ளது.
இந்நிலையில், இலங்கை அரசு நடத்தும் இராணுவக் கருத் தரங்கில் இந்திய இராணுவ உயர் அதிகாரிகளும், பாரதீய ஜனதா கட்சி சார்பில் ஒரு குழு வும் பங்கேற்பது தமிழர்கள் மீது நெருப்பை அள்ளிக் கொட்டு வது போன்றதாகும்.
ஐ.நா. மனித உரிமைகள் சபை யில், இலங்கை அரசு நடத் திய தமிழ் இனப் படுகொலை களை விசாரிப்பதற்குச் சுதந்தி ரமான பன்னாட்டு விசா ரணை நடைபெறவேண்டும் என்று உலகின் பல நாடுகள் வற்புறுத்தி வரும் நிலையில், இந்திய இராணுவத் தளபதிக ளும், பா.ஜ.க. குழுவும் இலங்கை இராணுவக் கருத்தரங்கில் பங்கேற்பது என்பது சகிக்க முடியாத, மன்னிக்க முடியாத மாபாதகச் செயலாகும்.
ஏழரைக் கோடித் தமிழர்களின் உணர்வுகளை மதித்துச் செயற் படும்வகையில், இலங்கை இரா ணுவக் கருத்தரங்கில் பங்கேற் கும் முடிவை இந்திய அரசு உட னடியாக கைவிட வேண்டும் என்று வலியுறுத் திக் கேட்டுக் கொள்கிறேன் என அவர் தெரிவித்துள்ளார். (த)

## டில்லியில் 14 வயது மாணவி பலாத்காரம்

டில்லி, ஜூலை 30
டில்லியில் பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவியொருவரை 2 சிறுவர்கள் உள்ளிட்ட 5 பேர் கொண்ட கும்பல், துப்பாக்கி முனையில் கூட்டு- பலாத்கா ரம் செய்துள்ள சம்பவம் அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது.
இது குறித்து டில்லி பொலி ஸைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் கூறும்போது, பள்ளி செல்லும் வழியில், ஜரோதா என்ற பகுதியில் 10 ஆம் வகுப்பு மாணவியொருவரை 5 பேர் கொண்ட கும்பல், சுரேந்தர் பெல்வான் என்ப வரது வீட்டுக்குக் கொண்டு சென்று, துப்பாக்கி முனையில் கூட்டாக பலாத்காரம் செய்ததா கப் பாதிக்கப்பட்ட பெண்ணின் பெற்றோர் அளித்த புகாரின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது எனத் தெரிவித் துள்ளார். (த)

# கொழும்பில் நடைபெறும் பாதுகாப்பு கருத்தரங்குக்கு வருகின்றனர் இந்திய இராணுவ அதிகாரிகளும்

## சுப்பிரமணியசுவாமி தலைமையிலும் குழு பங்கேற்கும்

கொழும்பு, ஜூலை 30

இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படும் வருடாந்த பாதுகாப்புக் கருத்தரங்கில் இந்திய இராணுவ அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.

அத்துடன் இந்தியப் பிரதமர் மோடி தலைமையிலான அரசின் பிரதிநிதியாக சுப்பிரமணியசுவாமியும் அந்தக் கருத்தரங்கில் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினரால் பாதுகாப்புக் கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டுக்குரிய கருத்தரங்கு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையில் கொழும்பில் நடத்தப்படவுள்ளது. இந்தக் கருத்தரங்கு 'இலங்கை: வளரும் நாடு எதிர்கொள்ளும் சவால்கள்' என்ற தலைப்பில் நடைபெறவுள்ளது.

பயங்கரவாதத்தை ஒடுக்குவதில் சர்வதேச நாடுகளின் இராணுவம் மற்றும் பொலிஸ் போன்றவை கையாளும் உத்திகள் உள்ளிட்ட பல விவரங்கள் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளப்படவுள்ளன.

இதில் பங்கேற்பதற்காக பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இராணுவ உயரதிகாரிகள், கல்வியியலாளர்கள், அரசியல் தலைவர்கள், ஆய்வாளர்கள் உள்ளிட்டோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் இராணுவத் தலைமையகத்துக்கும், சில அரசியல் தலைவர்களுக்கும் இலங்கை அழைப்பு அனுப்பியுள்ளது.

இதையடுத்து, கருத்தரங்கில் பங்கேற்க தமது அதிகாரிகளை இந்திய இராணுவம் அனுப்பி வைக்கும் என்றும், பா.ஜ.க. சார்பில் அதன் மூத்த தலைவர் சுப்பிரமணியசுவாமி தலைமையில் ஒரு குழுவினர் கருத்தரங்கில் பங்கேற்பர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு நட்பு நாடுகளும், பிற உலக நாடுகளும் எத்தகைய பாதுகாப்பு ஒத்துழைப்பை வழங்க முடியும் என்பதை அறிய கருத்தரங்கு உதவியாக இருக்கும் என்று இலங்கைத் தரப்பில் கூறப்பட்டது.

தேசிய வளர்ச்சி, பயங்கரவாதத் தடுப்பு உள்ளிட்டவைகள் தொடர்பாகப் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் இதில் பங்கேற்று கருத்து வெளியிடுவர். ஆனால், இந்தியாவின் பங்களிப்பைத்தான் இலங்கை மிகவும் உயரியதாகக் கருதுகிறது என்று இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஓ-5)

# ஐ.நா. ஆணைக்குழுவுக்குச் சாட்சியம் அளிப்பது ஏகாதிபத்தியவாதிகளுக்கு துணைபோகும் செயல்

## வடக்கு முதலமைச்சரையும் சாடுகிறார் வாசுதேவ



வாசுதேவ

கொழும்பு,ஜூலை 30

ஐ.நா. சர்வதேச விசாரணை ஆணைக்குழுவுக்கு சாட்சியமளிப்பது இலங்கைக்கு எதிரான ஏகாதிபத்தியவாதிகளின் சதித் திட்டத்துக்கு துணை போகும் செயலாகும்.

இவ்வாறு கூறுகிறார் சமூக ஒருமைப்பாடு மற்றும் தேசிய மொழிகள் தொடர்பான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

இது தொடர்பில் வாசுதேவ மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கை மீது போர்க்குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி சர்வதேச ரீதியில் எமது நாட்டைத் தனிமைப்படுத்தி நெருக்கடியில் தள்ளிவிடுவதை இலக்காக வைத்தே ஐ.நா. சர்வதேச விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது.

இது இலங்கைக்கு எதிரான சதித்திட்டம். எனவே, அரசு அதனை நிராகரித்து விட்டது. எனவே, இவ்வாறானதொரு குழுவுக்கு இலங்கையர்கள் எவரும் சாட்சியம் வழங்கக்கூடாது.

அதற்கு வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் விதிவிலக்கானவர் அல்ல. எவரும் இந்தக் குழுவுக்கு சாட்சியம் வழங்கக் கூடாது. அவ்வாறு சாட்சியம் வழங்குவோர் இலங்கைக்கு எதிரான ஏகாதிபத்திய வாதிகளின் சதித் திட்டத்துக்கு துணை போகின்றவர்கள் என்றே கருதப்படுவார்கள்.

அந்தப் பட்டியலிலேயே அவர்கள் இணைத்துக்கொள்ளப்படுவார்கள். இதனைக் கடுமையாக எதிர்க்கின்றேன்.

ஜனாதிபதியால் உள்ளூரில் விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்ட மெக்ஸ் வெல் பரணகம விசாரணைக்குழு விடம் சொல்ஹெய்ம் அல்ல எவரும் சாட்சியங்களை வழங்கலாம் இதனை எதிர்க்கவில்லை. ஏனென்றால் இந்தக் குழு உண்மைகளைக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட நியாயமான விசாரணைகளை நடத்தும் உள்ளூர்க் குழுவாகும்.

இதற்கு ஆலோசனைகளைப் பெறுவதற்கு வெளிநாட்டு நிபுணர்கள் நியமிக்கப்பட்டமையால் எந்தவிதமான தப்பும் இல்லை. இதன் மூலம் உள்ளூர் விசாரணைக் குழுவுக்கு சர்வதேச ரீதியான அங்கீகாரம் மேலும் வலுப்பெறும். இந்நிலை உருவாகும் போது எம்மை நெருக்கடியில் தள்ளிவிடும் நோக்கில் நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச விசாரணைக் குழுவின் பலம் இழக்கப்படும் நிலைமை உருவாகும் என்றார். (ஓ)

# ஞானசார தேரர் சம்பிக்கவுக்கு எதிராக 2 லட்சம் முறைப்பாடுகள்



சம்பிக்க



ஞானசார தேரர்

கொழும்பு,ஜூலை 30


பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மற்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆகியோருக்கு எதிராக 24 மணித்தியாலங்களுக்குள் 2 லட்சம் முறைப்பாடுகள் முகநூல் நிர்வாகத்துக்குக் கிடைத்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதில் ஆசிய நாடுகளில் இருந்தே அதிக முறைப்பாடுகள் கிடைத்தன.

இந்தநிலையில் பொதுபல சேனாவின் வாசகர் பக்கத்துக்கு எதிராக மொத்தமாக 50 லட்சம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானில் இருந்தே அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனினும் எந்த மதத்துக்கு எதிராகவும் தாம் முகநூலை பயன்படுத்தவில்லை என்று ஞானசார தேரர் முகநூல் நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளார். (ஓ)



கொழும்பில் காலி முகத்திடலில் நேற்றுக் காலை நோன்புப் பெருநாள் விசேட தொழுகையில் ஈடுபட்டிருந்த போது... (ஓ)

# இலங்கையில் சர்வதேச திரைப்படவிழா

கொழும்பு.ஜூலை 30

சர்வதேச திரைப்பட விழா எதிர்வரும் 2 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

திரைப்பட இயக்குநர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தச் சர்வதேச திரைப்படவிழா 2 ஆம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை வாழ் சினிமா ரசிகர்களுக்கு சிறந்த விருந்தாக அமையவுள்ள சர்வதேச திரைப்படவிழா இலங்கையில் முதற்தடவையாக நடைபெறவுள்ளது.

பிரான்ஸ்- இந்தியா- பிரித்தானியா- அமெரிக்கா- சீனா- ஜேர்மனி- நேபாளம்- இஸ்ரேல் மற்றும் சுவீஸ் ஆகிய நாடுகளின் 70 இற்கும் மேற்பட்ட திரைப்படங்கள் இந்தச் சர்வதேச திரைப்படவிழாவில் திரையிடப்படவுள்ளன.



கோப்புப்படம்

ஆபிரிக்கா- கரீபியன் மற்றும் லத்தீன் அமெரிக்க கலாசாரங்களை இலங்கை சினிமா ரசிகர்கள் கண்டு ரசிக்கும் வகையிலான இந்தத் திரைப்பட விழாவில திரைப் படங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ரீகல்- மெஜஸ்டிக் சினிமாஸ்- எம்பயர் மற்றும் தரங்கணி ஆகிய திரையரங்குகளில் இந்தத்திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

# விக்னேஸ்வரன் சாட்சியமளிப்பது தேசத்துரோகம்

## சாடுகிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்



வசந்த பண்டார

கொழும்பு.ஜூலை 30

ஐ.நா. விசாரணை ஆணைக்குழுவில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் சாட்சியமளிப்பது தேசத்துரோக செயலாகும் என கூறுகிறார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் வசந்த பண்டார.

வசந்த பண்டார மேலும் தெரிவிக்கையில்:

இலங்கைக்கு எதிராக விசாரணைகளை நடத்துவதற்காக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளை நியமித்த சர்வதேச விசாரணைக் குழுவை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

அத்தோடு அந்தக்குழுவை நிராகரித்ததோடு இலங்கை நாடாளுமன்றத்திலும் அதற்கெதிராக ஏகமனதாக பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் வடமாகாண சபையின் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள விக்னேஸ்ரன் எவ்வாறு சர்வதேச விசாரணைக் குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க முடியும். அவ்வாறு சாட்சியமளிப்பது என்பது தேசத்துரோகச் செயலாகும்.

இதற்கெதிராக எவ்வாறான சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்பது தொடர்பில் தெளிவில்லை. ஆனால் சர்வதேச விசாரணைக் குழுவில் முதலமைச்சர் சாட்சியமளிப்பதற்கு எதிராக அரசு கடும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பரணகம ஆணைக்குழு உள்ளூர் விசாரணைக்குழுவில் இயங்கும் போது ஆர்வம் காட்டாதவர்கள் இன்று வெளிநாட்டு நிபுணர்களை நியமித்ததும் ஆர்வம் காட்டுகிறார்கள்.

விசேடமாக சொல் ஹெய்ம் சாட்சி வழங்குவதன் மூலம் பரணகம ஆணைக் குழுவுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்கும். அதற்கே இந்த முயற்சிகள் இடம் பெறுகின்றன. எனவே இந்தக் குழுவுக்கு வெளிநாட்டு நிபுணர்களை நியமித்தமை அரசு செய்த மாபெரும் பிழையாகும் -என்றார். (ஓ)

# ஒரே மரத்தில் 40 வகைப் பழங்கள்

அமெரிக்காவில் ஒரே மரத்தில் 40 வகையான பழங்களை உருவாக்கி அசத்தி இருக்கிறார் சாம் வான் அகேன் என்ற தாவரவியல் விஞ்ஞானி.

ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்பது நம்மூர்ப் பழமொழி. ஆனால் இனிமேல் அப்படிக்கூற முடியாது. அமெரிக்காவில் உள்ள சைராகஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சாம் வான் அகேன் தான் அதற்கு காரணம். அவர் வளர்க்கும் மரத்தில் ஒரே மரத்தில் பிளம்ஸ், செரி என பல பழங்கள் விழும். இவருடைய ஆராய்ச்சி ஒன்றும் புதிதல்ல. எனினும் ஓரளவு முயற்சியையும், உழைப்பையும் கோருவது. எம்மூரில் மாம்பழங்களைச் சுவை மிக்கதாக மாற்றுவதற்கு ஒட்டு என்ற முறை பயன்படுத்தப்படுவதுண்டு. அதில் புளிப்பான மரத்தின் தண்டில், சுவையான் மாம்பழத்தின் தண்டை ஒட்ட வைத்து சிறிது நாளில் புளிப்பான மாம்பழத்தை இனிப்பாகவும்,



அதிகமாகவும் காய்க்கச் செய்வர்.

அதே போன்றுதான் இவரும் ஒரே மரத்தில் பல்வேறு மரங்களின் தண்டுகளைப் படிப்படியாக இணைத்தும், சில மாற்றங்களைச் செய்தும் வளர்த்துள்ளார். தற்போது இவர் வளர்த்த மரத்தில் 40 வகையான பழங்கள் காய்த்து குலுங்குகின்றன. அதுமட்டுமின்றி பார்ப்பதற்குக் கண்ணைக் கவரும் வகையில் மிகவும் அழகிய தோற்றத்தை உடையதாகவும் உள்ளது. இதுகுறித்து சாம் வான் அகேன் கூறுகை யில்,என்னுடைய ஆராய்ச்சியின் பயனாக, அந்தமரத்தை குளிர்காலத்தில் பார்ப்பவர்களுக்கு செம்பழுப்பு, ஊதா மற்றும் வெள்ளை என வானவில்லைப்போல் காட்சியளிக் கிறது. கோடை காலத்தில் அந்த மரம் பல்சுவை கொண்ட பழங்களை வழங்குகிறது. மேலும், இதுபோன்ற வகையில் தாவர ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வேன் என்று சாம் வான் அகேன் பெருமையுடன் கூறுகிறார்.

# ஆண்களின் மூக்கு பெரிதாக இருக்க இதுதான் காரணமாம்



அமெரிக்க பல்கலைக்கழக ஆய்வாளர்கள், மனித உடல் உறுப்புகளின் அமைப்புப் பற்றி நடத்திய ஆய்வில்,அதிக அளவு பிராண வாயு தேவைப்படுவதாலேயே ஆண்களின் மூக்கு அளவில் பெரிதாக இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

பொதுவாக பெண்களை விட, ஆண்களின் மூக்கு, 10 சதவீதம் அளவில் பெரியது. ஆண்களின் உடல் அமைப்பில் சதை அதிகமாக உள்ளதால் இதன் வளர்ச்சிப் பெருக்கத்திற்கு அதிக அளவு ஒட்சிசன் தேவைப்படுகிறது. பெண்களின் உடலில் சதையை விட கொழுப்பே அதிகம் உள்ளது. ஆண்களை விட பெண்களுக்கு சதை குறைவு என்பதால் அவர்களுக்கு ஆண்களை விட குறைந்த அளவிலான பிராண வாயு (ஒட்சிசன்) போதுமானது. அதிக அளவு ஒட்சிசனை உள்ளிழுப்பதற்காகவே, ஆண்களின் மூக்கு பெரிதாக அமைந்துள்ளது. ஐரோப்பிய ஆண்கள் மற்றும் பெண்களின் மூக்கின் அளவுகளின் அடிப்படையிலேயே இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

# மரபணு மைக்ரோசிப் உருவாக்கிச் சாதனை


பிரிட்டனைச் சேர்ந்த கிறிரோபர் தொமேஸோ என்ற ஆராய்ச்சியாளர் மரபணு மைக்ரோசிப்பை உருவாக்கிச் சாதனை படைத்துள்ளார்.

இந்தப் படைப்புக்கு ஐரோப்பியன் இன்வென்டர் விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்தச்சிப்பைப் பயன்படுத்தி பரம்பரை அலகுகளில் காணப்படும் மரபணுக்குறைபாடுகளை 20 நிமிட நேரத்தினுள் இனங்கண்டுகொள்ள முடியும்.

மேற்கு லண்டனில் வசித்துவரும் 52 வயதான கிறிரோபர் தொமேஸோ கடந்த 6 வருடங்களாகப் படைப்புக்கு யூரோப்பியன் விருதைத் தட்டிச் சென்றுள்ளார்.

இதேவேளை இவருடைய 23 வயதான மகன் ஒருவர் சிறுநீரகப் பிரச்சினையால் குழந்தைப்பருவத்திலிருந்தே பாதிக்கப் பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.




# வானம் நிறம் மாறுவது ஏன்?

பகல் பொழுதில் நீல நிறத்தில் தெரியும் வானம், காலை மற்றும் மாலை நேரத்தில் மட்டும் ஏன் வேறு நிறத்தில் தெரிகிறது?

வானம் நீல நிறமாகத் தெரிவதற்கு ஒளிச்சிதறல் என்ற விளைவே காரணம்.

சூரிய ஒளி காற்று மண்டலத்திலுள்ள வாயுக்கள் மற்றும் துகள்களின் வழியே செல்வதால் அனைத்து இடங்களிலும் பரவுகிறது. சூரிய ஒளியில் பல வண்ணங்கள் இருப்பது நமக்கு ஏற்கனவே தெரிந்த விடயம், இந்த வண்ணங்கள் ஒவ்வொன்றும் வித்தியாசமான அலைநீளம் கொண்டவை.



அதனால் சூரிய ஒளி பரவும்போது குறைந்த அலைநீளம் கொண்ட நீல நிறம் விரைவாகப் பரவுகிறது. இதனால் தான் பகல் நேரத்தில் வானம் நீலநிறத்தில் தோன்றுகிறது.

ஆனால் காலை மற்றும் மாலையில் மட்டும் ஏன் வானம் வேறு நிறத்தில் தோன்றுகிறது? அதற்கும் இந்த விளைவு தான் காரணம். காலை மற்றும் மாலை நேரங்களில் சூரிய ஒளி பரவ அல்லது மறைய ஆரம்பிக்கும் நேரத்தில் அதிக அலைநீளம் கொண்ட ஏனைய நிறங்கள் (சிவப்பு, செம்மஞ்சள் அல்லது மஞ்சள்) அதிதளவில் ஒளிச்சிதறல் அடைந்து நமது கண்களுக்குத் தெரிகின்றன.

# முகச்சவரம் செய்யும் மனிதக் குரங்கு



ஆண்கள் தான் முகச்சவரம் செய்வார்கள். ஆனால், வழமைக்கு மாறாக இங்கு மனிதக் குரங்கு ஒன்று முகச்சவரம் செய்து பலரை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

குரங்கு ஒன்றுக்கு நபர் ஒருவர் முகச்சவரம் செய்யும் காட்சிகள் அடங்கிய காணொலி தற்போது இணையத்தளங்களில் வெளியாகியுள்ளன.

இந்தக் காணொலியில் குரங்கு அமர்ந்திருப்பதும் அதற்கு நபர் ஒருவர் முகச்சவரம் செய்வதும் போன்ற காட்சிகள் அடங்கியுள்ளன. முகச்சவரம் செய்யும்போது இந்த மனிதக் குரங்கு அதற்கு ஏற்றாற் போல இசைந்து கொடுப்பதே பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்தக் காட்சியைப் பார்க்கும்போது இக்குரங்கு பலதடவை இவ்வாறு முகச்சவரம் செய்துள்ளது என்பது புலனாகின்றது.

# சினிமாவிலிருந்து விலகுகிறார் நஸ்ரியா

நடித்த சில படங்களாலேயே தமிழ்ச் சினிமா ரசிகர்களைக் கவர்ந்தவர் நஸ்ரியா. இவர் நடித்த ராஜா ராணி, நேரம் போன்ற படங்கள் அவருக்கு நல்ல பெயரை வாங்கி கொடுத்தன. இந்த நிலையில் தனுஷுடன் அவர் நடித்த நையாண்டி படத்தில் ஏற் பட்ட சர்ச்சையால், அவரது பெயர் அடிபட்டாலும்கூட தொடர்ந்து எல்லோருக்கும் பிடித்த நடிகையாகத் தான் வலம் வருகிறார்.ஆனால் அவர் தமிழ்த் திரையுலகுக்கு முதன் முதலாக அறிமுகமான படம் திருமணம் என்னும் நிக்காஹ், இந்தப்படம் வெளிவ்ருவதற்குள், மற்றைய படங்கள் வெளிவந்தன. சமீபத்தில் இப்படம் வெளிவந்து திரையில் ஓடிக்கொண்டிருக்கும் நேரத்தில், இனிமேல் தான் சினிமாவில் நடிக்க மாட்டேன் என்று நஸ்ரியா கூறியதாக நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



# பொறாமைக் குணம் மனிதருக்கு மட்டுமல்ல நாய்களுக்குமாம்



மனிதரிடம் உள்ள சில விசேடமான குணங்களைப் போன்று நாய்களிடமும் சில விசேட குணங்கள் இருப்பது கலிபோர்னியா பல்கலைக் கழக மாணவர்களின் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதாவது சில பிரத்தியேக மான பரிசோதனைகளில் நாய்கள் பொறாமைக் குணத்தை வெளிப்படுத்தும் விதத்தில் நடந்து கொண்டுள்ளன.

உதாரணமாக சில நாய்களின் உரிமையாளர்கள் தமது வளர்ப்பு நாய்கள் முன்னிலையில் போலியான பொம்மை நாய்க்குத் தமது பாசத்தை வெளிப்படுத்துவது போன்று நடிக்கும் போது நாய்கள் வித்தியாசமாகத் தமது பொறாமைக் குணத்தை வெளிப்படுத்துவது போல்நடந்து கொண்டன.

நாய்களிடம் காணப் படும் பொறாமைக் குணம் வெவ் வேறு தன்மை உடையயவை. ஒரே வகையானவை அல்ல

அதாவது நாயைப் போன்று குரைக்கக் கூடிய அசையும் பொம்மை நாய் மீது பாசத்தைக் காட்டுவது போன்று நடிக்கும் போது வளர்ப்பு நாய்கள் உரிமையாளருக்கும் பொம்மைக்கும் இடையே வந்து குறித்த செய்கையைத் தடுத்ததுடன் பொம்மை நாயைத் தாக்கவும் செய்துள்ளன. இக்குணம் பூனைகளிடம் இல்லை என்றும் பூனைகளை விட மனிதனுக்கு ஒப்பான சில உணர்வு களை நாய்கள் கொண்டிருப்பதாகவும் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

மேலும் இந்த ஆய்வின்படி நாய்கள் முறை தவறிக் கையாளப்பட்டாலும் அவை புரிந்து கொள்ளும் ஆற்றல் உடையவை என்றும் கூறப்பட்டுள்ளது. இதனால் நாய்கள் சமூகப் பார்வையாளர்களுக்கு இணையானவை என்றும் கருதப்படுகின்றது.

விலங்குகளின் சுபாவம் பற்றிய நிபுணரான பட்ரிசியா மக் கொன்னெல் என்பவர் போ த லவ் ஒப் ஏ டோக் (For the Love of a Dog) என்ற தனது புத்தகத்தில் நாய்களின் குணாதி சயங்கள் குறித்து விவரித்துள்ளார்.

ஆனால் அவரது கூற்றுப் படி மனிதர்களிடையே காணப்படும் பொறாமைக் குணமும், நாய்களிடம் காணப்படும் பொறாமைக் குணமும் வெவ்வேறு தன்மை உடையவை, ஒரே வகையானவை அல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாய்களிடம் மேற்கொள்ளப்பட்ட கலிபோர்னியா பல்கலைக் கழக மாணவர்களின் குறித்த ஆய்வு செல்லப் பிராணிகளின் தனிப்பட்ட உணர்வுகளைப் புரிந்து கொள்வதற்கான முக்கிய மைல்கல் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர்.



# எய்ட்ஸ் நோய் உருவாகாமல் தடுக்க முடியும்



உயிர்க்கொல்லி நோயான எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்த மருந்து கண்டு பிடிக்கும் முயற்சியில் சர்வதேச விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் எய்ட்ஸ் நோய் பரவாமல் கட்டுப்படுத்தும் புதிய மருந்தை அமெரிக்க விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள உதா பல்கலைக்கழகத்தின் மருந்தியல் பள்ளி ஆராய்ச்சியாளர்களே இந்தப் புதிய மருந்தை கண்டுபிடித்துள்ளனர்.

மனிதக் குரங்குகளில் இருந்து உருவாகும் எச்.ஐ.வி.வைரஸ் கிருமிகள் சிறிய வகை குரங்குகள் மூலம் மனிதர்களுக்கு எய்ட்ஸ் கிருமிகளாக பரவுகின்றன.

அவ்வாறு பரவும் எச்.ஐ.வி. வைரஸ் கிருமிகளை இந்த மருந்து அழிக்கும் தன்மை உடையது. இதை எச்.ஐ.வி. கிருமி தாக்கிய 40 குரங்குகளுக்குச் செலுத்தி சோதித்துப் பார்த்ததில் பரிசோதனை வெற்றி அடைந்துள்ளது.

எனவே, எய்ட்ஸ் நோய் மேலும் உருவாகாமல் தடுக்க முடியும்.

தற்போது எச்.ஐ.வி. கிருமிகளை அழிக்கக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் இந்த மருந்தின் மூலம் எய்ட்ஸ் நோயை முற்றிலும் குணப்படுத்தும் புதிய மருந்தைத் தயாரிக்க முடியும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# பயனுள்ள சிகிச்சை தரும் நுங்கு



வெயில் காலத்தில் எம்மைப் பாதுகாக்க இயற்கை தந்துள்ள வரப்பிரசாதம் பனை மரம். பனைவெல்லம், பனாங்கற்கண்டு, பனாங்கிழங்கு, மட்டை, ஓலை என பனையில் இருந்து கிடைக்கும் அனைத்துப் பொருள்களுமே மருத்துவ குணம் வாய்ந்தவை. அவற்றில் நுங்கின் மகத்துவம் அளப்பரியது!

கோடையில் நம் உடலுக்குத் தேவையான நீர்ச்சத்துக்களை வாரி வழங்குகிறது நுங்கு. நுங்கில் விற்றமின் பி, சி, இரும்புச்சத்து, கல்சியம், துத்தநாகம், சோடியம், மக்னீசியம், பொட்டாசியம், தயாமின், அஸ்கார்பிக் அமிலம் மற்றும் புரதம் போன்ற சத்துகள் அதிகம் காணப்படுகின்றன.

நுங்குக்குக் கொழுப்பைக் கட்டுப்படுத்தி, உடல் எடையைக் குறைக்கும் தன்மை அதிகம். உடல் எடையைக் குறைக்க நினைப்பவர்கள் உணவுக் கட்டுப்பாட்டுடன் நுங்கை அதிகம் சேர்த்துக் கொள்ளலாம்.

நுங்கில் உள்ள நீரானது வயிற்றை நிரப்பி, பசியையும் தூண்டும். மலச்சிக்கல் மற்றும் வயிற்றுப் போக்கு இரண்டுக் குமே நுங்கு மருந்தாக இருப்பது அதிசயம்! நுங்கைச் சாப்பிட்டால் உடனடியாக பயன் கிடைக்கும்.

சிலருக்கு உடல் சூடு காரணமாக எவ்வளவு தான் தண்ணீர் குடித்தாலும் தாகம் அடங்காது. அவர்கள் நுங்கைச் சாப்பிட்டால் தாகம் அடங்கிவிடும்.

சிலருக்கு உடல் சூடு காரணமாக எவ்வளவுதான் தண்ணீர் குடித்தாலும் தாகம் அடங்காது. அவர்கள் நுங்கைச் சாப்பிட்டால் தாகம் அடங்கிவிடும்.

குருதிச்சோகை உள்ளவர்கள் நுங்கைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் விரைந்து குணமாகி உடல் சுறுசுறுப்பாகும். நுங்கில் அந்த்யூசைன் என்ற இரசாயனம் இருப்பதால் அது பெண்களுக்கு மார்பகப் புற்று நோய்க் கட்டிகள் வருவதைத் தடுக்கும்.

வெயில் காலத்தில் ஏற்படும் அம்மை நோய்கள் வருவதைத் தடுத்து, உடலுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியைத் தரும்.

# சிறுநீரகக்கல் பிரச்சினையா? இதோ வாழைத்தண்டு மோர்க்கூட்டு



சிறுநீரகத்தில் கல் வராமல் இருக்க வேண்டுமானால், இடையிடையே வாழைத்தண்டை உணவில் சேர்த்து வர வேண்டும். ஏனெனில் வாழைத்தண்டில் நார்ச்சத்து அதிகம் உள்ளது.

இவை சிறுநீரகக் கல் ஏற்படுவதைத் தடுக்கும். அதிலும் சிறுநீரக கல் இருப்பவர்கள், தினமும் வெறும் வயிற்றில் வாழைத்தண்டை ஜூஸ் போட்டு குடித்தால், சிறுநீரகக் கல் கரைந்துவிடும். ஆனால் சிறுநீரக கல் வராமல் இருக்க வேண்டுமானால், வாழைத்தண்டை உணவில் சேர்த்து வாருங்கள்.

இதோ வாழைத்தண்டு மோர்க்கூட்டு தயாரிக்கும் முறை.

## தேவையான பொருள்கள்

வாழைத்தண்டு - 1 துண்டு
தயிர் - 1 குவளை
பச்சை மிளகாய் - 2
சீரகம் - அரை தேக்கரண்டி
தனியா - அரை தேக்கரண்டி
வேக வைத்த கடலைப்பருப்பு - அரை குவளை
இஞ்சி சிறிய துண்டு
கறிவேப்பிலை, கொத்தமல்லி - சிறிதளவு
கடுகு, எண்ணெய் - அரை தேக்கரண்டி
பெருங்காயத்தூள் - சிறிதளவு
மஞ்சள் தூள் - ஒரு சிட்டிகை
உப்பு - தேவையான அளவு

## செய்முறை

இஞ்சியைத் தோல் சீவி வைக்கவும்.

வாழைத்தண்டை பொடியாக நறுக்கி நாரை நீக்கி வைக்கவும்.

தயிரை நன்றாகக் கடைந்து வைக்கவும்.

சுத்தம் செய்த வாழைத்தண்டை மஞ்சள் சேர்த்து வேக வைக்கவும். பச்சை மிளகாய், தனியா, சீரகம், கொத்தமல்லி, இஞ்சி சேர்த்து விழுதாக அரைத்து வேக வைத்த வாழைத்தண்டுடன் சேர்க்கவும். அதன் பின்னர் கடைந்து வைத்துள்ள தயிரைச் சேர்த்து, உப்பு வெந்த கடலைப்பருப்பு என்பவற்றைச் சேர்த்து குறைந்த தீயில் அடுப்பில் வைக்கவும்.

கடாயில் எண்ணெய் ஊற்றி கடுகு, பெருங்காயத்தூள், கறிவேப்பிலை தாளித்து வாழைத்தண்டு கலவையில் கொட்டி கடைசியாக கொத்தமல்லித் தழை தூவி இறக்கவும்.

# குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு பிரதேச செயலகங்களுக்கு நிதியுதவி

## வவுனியா செயலகக் கூட்டத்தில் தெரிவிப்பு

வவுனியா. ஜூலை 30
வவுனியா மாவட்டத்தில் நிலவும் குடி தண்ணீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் பிரதேச செயலகங்களுக்குத் தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.



இதனை வவுனியா மாவட்டச் செயலகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தற்போதைய வறட்சி நிலைமை குறித்து ஆராயும் கூட்டத்தில் வைத்து வர்த்தக கைத்தொழில் அமைச்சரின் இணைப்புச் செயலாளரான ஐ.எஸ்.எம். முகைதீன் தெரிவித்தார்.
அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்:-
வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் பணிப்புரைக்கமையவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.
வவுனியா மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலகங்களில் குடிதண்ணீர்ப் பிரச்சினை நிலவுகின்றது.
உடனடியாக அந்தப் பிரச்சினை காணப்படும் கிராமங்களை இனம் கண்டு பிரதேச சபைகளின் வளங்களைப் பயன்படுத்தி குடிதண்ணீர் விநியோகத்தை மேற் கொள்ளவெனப் பிரதேச செயலர்களுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.
இதேவேளை கிராமங்களில் உள்ள சிறு குளங்கள், வாய்க்கால்கள் மற்றும் வீதிகளில் சிரமதானப் பணிகளை மேற்கொள்ளும் கிராம மக்களுக்கு குடும்பமொன்றுக்கு 6 ஆயிரம் பெறுமதியான உணவுப் பொருள்களை பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-402)

# பயனில்லாத வீதி சமிக்ஞைகள்



வவுனியா. ஜூலை 30
வவுனியாவிலுள்ள வீதிக்ள் சிலவற்றில் அமைக்கப்பட்டுள்ள வீதிச் சமிக்ஞைக் குறியீடுகள் தெளிவாகக் காணப்படாததால் அடிக்கடி விபத்துச் சம்பவங்கள் இடம்பெறுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
வவுனியா ஏ-9 வீதி, ஹொரவப்பொத்தான வீதி, கண்டி வீதி, மன்னார் வீதி, நேரியகுளம் வீதி உட்பட பல்வேறு பிரதான வீதிகளில் வீதி சமிக்ஞைக் குறியீடுகள் தெளிவாக இல்லாமை மற்றும் உரிய இடங்களில் பொருத்தப்படாமை ஆகிய காரணங்களால் வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன.
இதேவேளை சில இடங்களில் வீதிச் சமிக்ஞைக் குறியீடுகள் அழிவடைந்தும், கீழே வீழ்ந்தும் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. (க-402)

# கல் அகழ்வால் பாதிப்புறும் அம்பாள்புரம் கிராமம்


முல்லைத்தீவு. ஜூலை 30
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாந்தை கிழக்கு அம்பாள்புரம் கிராமத்தில் தொடர்ந்தும் கல் அகழ்வு இடம்பெறுவதனால் தமது குடியிருப்புக்கள் பாதிக்கப்படுவதாக இந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.
அத்துடன் அதிக சக்தி கொண்ட வெடிகளின் உதவியுடன் கல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதனால் இந்தப் பகுதியைச் சூழவுள்ள பகுதிகளில் கடும் அதிர்வு ஏற்படுவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.
இதனால் இங்கு வசிக்கும் 54 வரையான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.



இதேவேளை இங்கு கருங்கல் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் இந்தப் பகுதி மக்கள் தமது வீட்டுத் திட்டத்துக்கு தேவையான கருங்கல்லை ஒட்டுசுட்டான் அல்லது வவுனியாவில் இருந்தே பெற வேண்டியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
இந்தக் கிராமத்தில் இடம்பெற்று வரும் கருங்கல் அகழ்வு சட்டவிரோதமாக இடம்பெற்று வருவதாகவும் 100 அடி ஆழம் வரை நிலம் தோண்டப்பட்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
உரியவர்கள் இதனை தடுத்து நிறுத்தி தமது சூழலையும் தம்மையும் பாதுகாக்க வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-55)

# ஆரம்பப் பாடசாலைக்குரிய வசதிகளை ஏற்படுத்துமாறு பெற்றோர் கோரிக்கை

கிளிநொச்சி. ஜூலை 30
கிளிநொச்சி கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலயத்தை தனியாக இயங்க வைப்பதற்குரிய வசதிகளை ஏற்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
கோணாவில் அ.த.க. பாடசாலை ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
இதன் காரணமாக அதன் ஆரம்பப் பிரிவு வேறாக இயங்க வேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது. ஆரம்பப் பிரிவில் தற்போது 325 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.
ஆரம்பப் பாடசாலைக்கென ஐந்து ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் தற்காலிக கொட்டகை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் பாடசாலை இயங்குவதற்குரிய அடிப்படை வசதிகள்கூட அங்கு ஏற்படுத்தப்பட வில்லை.
இதனால் பாடசாலையை ஆரம்பிக்க முடியாதநிலை காணப்படுகின்றது. எனவே இந்தப் பாடசாலையைத் தனியாக இயங்க வைக்கும் பொருட்டு அதற்குரிய வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பெற்றோர் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள் ளனர்.
இதேவேளை இந்தப் பாடசாலைக்கென அதிபர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் காந்தி ஆரம்ப வித்தியாலயத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணியின் ஒரு பகுதியை இராணுவம் பிடித்து வைத்திருப்பதாகவும் பெற்றோர் தெரிவித்தனர். (க-18)



மன்னார் மூர்வீதி முகைதீன் ஜும்மாப் பள்ளிவாசலில், பேஸ் இமாம் அஸ்ஸெய்க் எஸ்.ஏ.அஸீம் மௌலவியினால் புனித ரம்ழான் நோன்பு பெருநாள் தொழுகையும், துவா பிரார்த்தனைகளும் மேற்கொள்ளப்பட்ட போது கலந்து கொண்ட மக்களைக் காணலாம். (க-56)

# வறட்சி காரணமாக நீருக்கு தட்டுப்பாடு

## வவுனியாவில் குளங்களும் வற்றின

வவுனியா. ஜூலை 30
வவுனியாவில் கடும் வறட்சி காரணமாக குளங்கள் மற்றும் வீட்டுக் கிணறுகளிலும் நீர் வற்றி வருவதால் பொது மக்கள் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.
வவுனியா நகரக் குளம், சமளக்குளம், பம்பைமடுக் குளம், நெளுக்குளம், இராசேந்திரங்குளம் உட்பட அனேக குளங்கள் வற்றி வருகின்றன.
இதேவேளை குட்செட்வீதி, தோணிக்கல் பூந்தோட்டம், மகாறம்பைக்குளம், கருப்பனிச் சங்குளம், சிதம்பரபுரம், சமளங்குளம் உட்படப் பல்வேறு கிராமங்களிலுள்ள வீட்டுக் கிணறுகளும் வற்றி வருவதால் குடிதண்ணீருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன் விவசாயிகளும் தமது பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியாது திண்டாடுகின்றனர்.
கடந்த சில மாதங்களாக மழை வீழ்ச்சி குறைவாக இருந்ததால் இவ்வாறு குளங்களும் கிணற்று நீரும் வற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-402)

# சீராக இயங்காத அஞ்சலகம்

துணுக்காய், ஜூலை 30
துணுக்காய் அஞ்சல் அலுவலகம் சீராக இயங்குவதில்லையென அந்தப் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
இந்த அலுவலகம் தனியார் வீடு ஒன்றில் இயங்கிக் கொண்டிருப்பதன் காரணமாக மக்கள் அங்கு செல்லும் போது அந்த அலுவலகம் பூட்டிக்கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
இதன் காரணமாக உதவிப் பணம் பெறும் மக்கள் கூட ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
இதேவேளை புத்துவெட்டுவான் கிராமத்தில் அஞ்சல் அலுவலகம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (க-18)

# தண்டுவான் கிராமம் ஊடாகவும் பஸ் சேவைகளை நடத்துக

## மாகாணசபை உறுப்பினர் கோரிக்கை

ஒட்டுசுட்டான், ஜூலை 30
ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள தண்டுவான் கிராமம் ஊடாக முல்லைத்தீவு மற்றும் வவுனியா நகரங்களுக்கு பஸ் சேவைகளை நடத்துமாறு வடமாகாண சபை உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



வவுனியாவில் இருந்து செல்லும் பஸ்கள் நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் வழியாக முல்லைத்தீவு நகரத்தைச் சென்றடைகின்றன.
ஆனால் தண்டுவான் கிராமம் புறக்கணிக்கப்படுகின்றது.
வருமானப் பற்றாக்குறையே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.
நெடுங்கேணி ஊடாக தண்டுவான், முள்ளியவளை வழியாக காலையிலும் மாலையிலும் இரு சேவைகளையாவது நடத்துவதன் மூலமாகத் தண்டுவான் கிராம மக்கள் முல்லைத்தீவு அரச செயலகம், மருத்துவமனை, நீதிமன்றம் ஆகியனவற்றுக்கு இலகுவாகப் பயணிக்க முடியும்.
நெடுங்கேணியிலிருந்து தண்டுவான் ஊடாக பஸ் சேவைகள் இடம்பெறாததால் பழம்பாசி, மாமடு, 17ஆம் கட்டை, தட்டையர்மலை, முறிப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் முல்லைத்தீவு நகரத்துக்குச் சென்று வருவதில் இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.
தண்டுவான் கிராம மக்களின் போக்குவரத்து நெருக்கடி தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. (க-18)

## நல்லூர் ஆலயத் திருவிழா காலத்தில் விசேட பஜனைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 30
நல்லூர் ஆலயத் திருவிழாக் காலத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் விசேட பஜனை நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

திருவிழாக்காலத்தில் சுவாமி உள்வீதி, வெளிவீதி வரும் போது இந்த பஜனை நிகழ்வுகள் இடம்பெறும்.

யாழ்.சின்மயா மிஷன், வடமாகாண கல்வித் திணைக்களம், யாழ்.மாநகர சபை, இராமநாதன் நுண்கலைப் பீடம் ஆகியன இணைந்து இந்த பஜனை நிகழ்வுகளை நடத்தவுள்ளன.

கிளிநொச்சி,மாங்குளம், மடு, துணுக்காய், முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் இருந்து பாடசாலை மாணவர்களும் இந்தப் பஜனையில் பங்குபற்றவுள்ளனர். (வ-14)

## வயாவிளான் புனித யாகப்பர் ஆலய நூற்றாண்டு விழாவுக்குத் திரண்ட மக்கள்

### யாழ்.ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலி

யாழ்ப்பாணம், ஜூலை 30
அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள வயாவிளான் புனித யாகப்பர் ஆலய நூற்றாண்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்புற நடைபெற்றது.

பற்றைகள் மூடியிருந்த ஆலயப் பகுதியை பாதுகாப்புப் படையினரும் இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் வசித்து வரும் ஆலயத்தைச் சேர்ந்த இளைஞர்களும் இணைந்து துப்புரவு செய்தனர்.

பல்வேறு இடங்களில் இருந்து பஸ்களில் வந்த நூற்றுக் கணக்கான மக்கள் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை ஊர்வலமாக அழைத்துச் சென்று கூட்டுப்பலியில் இணைந்து கொண்டனர்.




யாழ்.ஆயருடன் மண்ணின் மைந்தர்களான அருட்திரு இ.மரியநாயகம் அடிகள், அருட்திரு றெஜிலாசரஸ் அடிகள் மற்றும் அருட்தந்தை ஜெயசீலன் அடிகள், அருட்தந்தை ஸ்ரீபன் அடிகள் ஆகியோர் இணைந்து திருப்பலியை நிறைவேற்றினர்.

அருட்தந்தை இ.மரியநாயகம் அடிகளின் தொகுப்பில் உருவான நூற்றாண்டு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

குடிதண்ணீர், சுகாதார வசதிகளை இராணுவத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

2012ஆம் ஆண்டுவரை சேதமடைந்திருந்த ஆலயத்தின் கூரை தற்போது இல்லாத நிலையில், ஆலயத்தினுள் தகரப்பந்தல்கள் அமைத்து நூற்றாண்டுவிழாவைக் கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது.

விழாவில் கலந்து கொண்ட, வயாவிளானைப் பூர்வீகமாகக் கொண்ட மக்கள் தாம் தமது இடத்தில் நிரந்தரமாக குடியமரும் நாள் எப்போது வரும் என்ற ஆதங்கத்துடன் அவ்விடத்தை விட்டுச் சென்றதைக் காணமுடிந்தது. (ஒ-135)

## அரச, தனியார் பஸ்களின் போட்டியால் பயணிகள் அந்தரிப்பு

பருத்தித்துறை -யாழ்ப்பாண வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் அரச பஸ்ஸொன்றுக்கும், தனியார் பஸ்ஸொன்றுக்கும் இடையில் ஏற்பட்ட போட்டியால் பயணிகள் பொலிஸ் நிலையத்தில் அந்தரித்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை நெல்லியடியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

பருத்தித்துறையிலிருந்து பயணிகளுடன் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த அரசபஸ்ஸொன்றும், தனியார் பஸ்ஸொன்றும் போட்டி போட்டுக் கொண்டு ஒன்றையொன்று முந்தி வேகமாகவும் பயணித்துள்ளன. இந்த நிலையில் அரச பஸ் சாரதி தமக்கு பஸ் விலத்திச் செல்ல பாதையை விட்டுத் தரவில்லை என்று தெரிவித்து தனியார் பஸ் சாரதி நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இரு பஸ்களையும் தடுத்து நிறுத்திய பொலிஸார் இரு பஸ் சாரதிகளையும் நடத்துநர்களையும் எச்சரித்து ஆலோசனைகள் கூறியதுடன் தொடர்ந்து பயணத்தை மேற்கொள்ள அனுமதித்தனர்.

இந்தச் சம்பவத்தால் அந்த பஸ்களில் பயணித்த பயணிகள் அரைமணி நேரமாக பொலிஸ் நிலையத்தில் அந்தரித்ததுடன் கால தாமதத்தையும் எதிர்கொள்ள நேர்ந்தது. (வ-108)



யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய தேவி தையல்நாயகி அம்பாள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை தேரேறி அடியார்களுக்கு அருட்காட்சி கொடுத்தபோது... (ஒ-17-135)

## நல்லூர் உணவுச்சாலைகளில் அசைவ உணவு விற்கத் தடை

### ஆலயத் திருவிழா காலத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 30
நல்லூர் திருவிழாக்காலத்தில் ஆலயச்சூழலில் அமைக்கப்படும் உணவுச்சாலைகளில் அசைவ உணவுகள் விற்பனை செய்யப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். இது தொடர்பில் வர்த்தகர்களுக்கும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது என்று யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பேணும் நோக்கில் உணவுச்சாலைகளின் உரிமையாளர்கள் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். கடந்த வருடம் ஆலயச் சூழலில் அமைக்கப்பட்ட கொத்துரொட்டிக்கடைகளில் இருந்து இரவு 9 மணிக்குப் பின்னர் அதிகளவு சத்தம் ஏற்பட்டதால் பக்தர்கள் அமைதியான முறையில் வழிபாடுகளை மேற்கொள்ள முடியாதிருந்ததாகவும், பஜனை நிகழ்வுகளை நடத்த முடியாது சிரமப்பட்டதாகவும் முதல்வருக்கு எடுத்துக் கூறப்பட்டது. இதுதொடர்பில் இந்த வருடம் கவனம் செலுத்தி மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதாக முதல்வர் தெரிவித்தார்.

இதேவேளை உணவுச்சாலைகளில் மாமிச உணவுகள் மற்றும் அசைவ உணவுகள் விற்பனை செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. வர்த்தகர்கள் அதனை கவனத்தில் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். (வ-14)

## தண்ணீர்த் தாங்கிகள் வைத்து குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு

### சுன்னாகம் மின்சார நிலையத்தைச் சூழவுள்ள மக்களுக்கு

வலி. வடக்கு, ஜூலை 30
சுன்னாகம் மின்சார நிலையத்தை அண்மித்த பகுதி மக்களுக்கு தண்ணீர் தாங்கிகள் வைத்து குடி தண்ணீர் வழங்க சுன்னாகம் பிரதேச சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர் பிரகாஸ் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம்பிரதேச சபையைச் சூழவுள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலந்துள்ளமையால் அந்தப் பகுதி கிணறுகளின் நீரைக் குடிதண்ணீராகப் பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு மக்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் முதற் கட்டமாக சுன்னாகம் மின்சார நிலையத்தை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நீர்த் தாங்கிகள் மூலம் குடி தண்ணீர் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் மின்சார நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கிணறுகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் 5 நீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறவுள்ளது.

தலா ஆயிரத்து ஐந்நூறு லீற்றர் கொள்ளளவைக் கொண்டுள்ள இந்தக் குடிதண்ணீர் தாங்கிகளுக்கு நாளாந்தம் இரண்டு தடவைகள் பிரதேச சபையால் நீர் நிரப்பவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதனை அந்தந்தப் பகுதிகளின் கிராமமட்ட அமைப்புக்கள் கண்காணிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-86)

## நடமாடும் வாகனம் மூலம் பேக்கரி உற்பத்திப் பொருள்கள் விற்கத் தடை

### சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள் இந்த மாத இறுதிக்குள் நடைமுறைக்கு

தென்மராட்சி, ஜூலை 30
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வெளியிடங்களைச் சேர்ந்த பேக்கரி உற்பத்திப் பொருள்களை நடமாடும் வாகனங்களில் விற்பனை செய்வதை ஜூலை 31ஆம் திகதி முதல் தடை செய்வது என்று நேற்று முன் தினம் நடைபெற்ற நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நடமாடும் வாகனங்கள் வீடு வீடாகச் சென்று தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்து வருவதால் தமது உற்பத்திப் பொருள்களைவிற்கமுடியவில்லை என்று சபை எல்லைக்குட்பட்ட பேக்கரி உரிமையாளர்கள் முறையிட்டதாக சபை உறுப்பினர் ப. சிறிதரன் தனிநபர் பிரேரணையொன்றைச் சமர்ப்பித்ததை அடுத்து மேற்கண்ட தீர்மானம் சபையால் ஏக மனதாக மேற்கொள்ளப்பட்டதாக தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

## ஆலயத்தில் உணவு பரிமாறப்பட்ட வேளை நெரிசலைப் பயன்படுத்தி திருடர் கைவரிசை

### ஒருவரின் தாலிக்கொடி, மூவரின் சங்கிலிகள் அபேஸ்

கொழும்புத்துறை, ஜூலை 30
ஆலயம் ஒன்றில் பரிமாறப்பட்ட உணவைப் பெற்றுக் கொள்வதற்காக சனக்கூட்டத்துக்குள் முண்டியடித்த நால்வர் தமது தங்க நகைகளைப் பறிகொடுத்தனர். பாண்டியன்தாழ்வுப் பகுதியில் உள்ள புனித அன்னம்மாள் ஆலயத் திருவிழாவின் போதே இவ்வாறு நால்வரிடமும் இருந்து ஒரு தாலிக் கொடி, 3 சங்கிலிகளைத் திருடர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் தொடர்ச்சியாக ஆலயத் திருவிழாக்கள் நடைபெற்று வரும் சூழ்நிலையில் திருட்டுக் கும்பல்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றன. மக்களோடு மக்களாக உலாவும் அவர்கள் தக்க சமயத்தில் தங்களது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

இவ்வாறான திருவிழாக்காலத் திருட்டுக்களைத் தவிர்க்க ஆலயங்களுக்குச் செல்லும். போது நகைகள் அணிந்து வருவதைத் தவிர்ப்பதோடு நெருக்கடியான இடங்களில் தத்தமது தங்க நகைகள் குறித்து அவதானமாக இருக்க வேண்டும் என்று பொலிஸார் மக்களுக்கு அடிக்கடி அறிவுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-135)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கொழும்பு அரசே உரசிப் பார்த்துவிடு

வடமாகாணத்தின் அபிவிருத்திக்காக 6 ஆயிரம் மில்லியன் ரூபாவை அடுத்த வருடத்தில் ஒதுக்கித் தருமாறு கொழும்பு அரசிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது வடக்கு அரசு. இந்தக் கோரிக்கையை கொழும்பு சாதகமாகப் பரிசீலிக்க வேண்டும்.

இலங்கை நாட்டில் இருப்பது இனப் பிரச்சினை அல்ல. அது பொருளாதார ரீதியான பிரச்சினையே என்று கொழும்பு அரசில் அங்கம் வகிப்பவர்கள் பலர் கடந்த காலங்களில் கூறிவந்திருக்கின்றனர். அவர்களில் முக்கிய அமைச்சர்களும் அடக்கம். போர் முடிந்த பின்னர் வந்த நான்கு ஆண்டுகளில் அவசர அவசரமாக வடக்கில் 'காப்பெற்' வீதிகளையும் வேறு சில உட்கட்டுமான அபிவிருத்திகளையும் இந்தக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே அரசு மேற்கொண்டது. வடக்கு மாகாணம் அபிவிருத்தி அடைந்து விட்டால் வசதிகளும் வாய்ப்புகளும் கிடைத்து விட்டால் சுயாட்சிக் கோரிக்கைகள் மற்றும் பிரிவினைச் சிந்தனை என்பன இல்லாமல் போய்விடும் என்று கொழும்பு கணிப்பிட்டது. வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் வரையில் தமது இந்தக் கோட்பாடு வெற்றிகரமாகச் செயற்பட்டு வருவதாகவும் கொழும்பு நம்பி வந்தது. ஆனால் உண்மை வேறு மாதிரியானது என்று தேர்தல் காட்டிவிட்டது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அதிகூடிய ஆதரவை அள்ளி வழங்கியதன் மூலம் கொழும்பின் அபிவிருத்திக் கொள்கை மட்டும் தமக்குப் போதாது என்று தமிழ் மக்கள் தெளிவாக எடுத்துக்கூறிவிட்டார்கள். அதற்கு மேலாக அரசியல் அதிகாரத்தின் பங்கீட்டையும் தாங்கள் எதிர்பார்க்கிறார்கள் என்கிற செய்தி வாக்குகள் மூலம் அழுத்தமாகப் பதிவு செய்யப்பட்டது. இருப்பினும் அபிவிருத்தியைத் தமிழர்கள் நிராகரித்துவிட்டார்கள் என்பது அதற்கு அர்த்தமல்ல.

எனவேதான் வடக்கின் அபிவிருத்திக்குத் தேவையான நிதியுதவியை கொழும்பிடம் இருந்து மாகாண சபை அரசு இப்போது கோரியிருக்கிறது. வடக்கின் அபிவிருத்தியில், அதிலும் போரினால் மிகப் பெரும் அளவில் பாதிக்கப்பட்ட - மொத்த உட்கட்டுமானத்தையும் இழந்த - தொழில்துறை அனைத்தையும் அழித்து நிற்கின்ற - வடக்கின் மேம்பாட்டில் கொழும்பு அரசு உண்மையான அக்கறை கொண்டிருக்குமானால் கோரப்பட்ட நிதியை வழங்குவதற்கு அது நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து மாகாணங்களுக்கும் ஒதுக்குவதைப் போன்று ஒதுக்குவதாகவோ, அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பங்களிப்புச் செய்யும் மாகாணங்களின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதாகவோ இல்லாமல் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அபிவிருத்திக்காக, விசேடமாக இந்த நிதி ஒதுக்கீட்டைக் கொழும்பு செய்யவேண்டும்.

போர் முடிவடைந்து 5 வருடங்களாக அரசியல் தீர்வு ஒன்றைத்தானும் தமிழ் மக்களுக்கு வழங்க முன்வராத இந்தக் கொழும்பு அரசு, குறைந்த பட்சம் பாதிக்கப்பட்ட பகுதியின் துரித அபிவிருத்திக்கு உதவி செய்வதன் மூலமாவது தமிழர்கள் மீதான தனது குறைந்தபட்ச நல்லெண்ணத்தை வெளிப்படுத்தவேண்டும். பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து விட்டால் இனப்பிரச்சினைக்கு சாத்தியமே இல்லை என்கிற கொழும்பின் கொள்கை சரியானதா என்பதை உரசிப் பார்ப்பதற்கும் இது ஒரு சந்தர்ப்பமாக அமையும் என்பதால், வடக்கு மாகாண சபையின் கோரிக்கை மீது கொழும்பு அரசு அதிக கரிசனை செலுத்தவேண்டும்.

# நாடாளுமன்றத்தில் பீரிஸ் வழங்கிய தவறான தகவல்

## ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து கோகுலன்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசானது எதையுமே மறுத்துரைக்கும் ஒரு நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கும் போக்கில் உள்ளது. கடைசியாக இவ்வாறான ஒரு மறுப்பை வெளியிட்டிருப்பவர் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆவார். கடந்த வாரம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சீன நிறுவனம் ஒன்றுக்கு விமானத் திருத்தம் செய்யும் நிலையமொன்றை திருகோணமலையில் அமைக்க அரசு அனுமதியளித்திருப்பதாக வந்துள்ள செய்திகள் பற்றிக் கேள்வி எழுப்பியிருந்தார். அமைச்சர் பதிலளிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் தவறான செய்தியொன்றை வெளியிடுகிறார். அவர் கூறுவதுபோல் திருகோணமலையில் விமானங்கள் திருத்துவதற்கான நிலையம் அமைக்க அனுமதிப்பதென்று தீர்மானிக்கப்படவில்லையென்று கூறினார்.

மே மாதம் 29 ஆம் திகதி அமைச்சரவை அமர்வின்போது அமைச்சர்கள் திருகோணமலையில் விமானம் திருத்தும் நிலையம் ஒன்றை அமைக்க அனுமதியளிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ராஜபக்ஷவின் கருத்தை ஏகமனதாக அங்கீகரித்திருந்தார்கள். அது பின்னர் அமைச்சரவைக் குறிப்பேட்டில் பதியப் பெற்றது. அமைச்சர் பீரிஸ் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கவில்லை. இலங்கை விமானப் படையினர் உல்லாசப் பயணிகளுக்காக விடுமுறை கால விடுதிகளை நடத்தி வரும் பகுதியில் மாபஸ்பீச்சில் 30 இரட்டைப் படுக்கை அறைகளைக் கொண்ட கட்டடத் தொகுதியொன்றை சீன விமானப் பணியாளர்களுக்காகக் கட்டுவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரின் கருத்தை நிராகரித்த வெளியுறவு அமைச்சர் இது ஒரு நல்ல திட்டம். ஆனால் திருகோணமலையில் நிறுவுவது என்று முடிவு செய்யப்படவில்லை. இதில் குளறுபடிகளை உருவாக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. ஜெட் விமானங்கள் இறங்கக் கூடிய இடம் தேவைப்படுகின்றது. அப்படியான இடங்கள் மூன்றுதான் இருக்கின்றன. கட்டுநாயக்க, மத்தள மற்றும் திருகோணமலை. இவைகளை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். ஆனால் முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை. திருகோணமலையில் நிறுவப்படும் என்று தீர்மானிக்கப்படவில்லை.

விக்கிரமசிங்க நினைப்பது போல் இதில் சர்ச்சை ஒன்றுமில்லை. அவர் கூறியது போல் இது இலங்கை- இந்தியாவுக்கிடையில் பிரதான பிரச்சினையாகவும் இல்லை. இந்திய வெளியுறவு அமைச்சரைச் சந்தித்தபோது இது பிரதான பிரச்சினையாக விவாதிக்கப்படவில்லை. அவர் இந்தத் திட்டம் பற்றிய விவரங்களைத்தான் கேட்டார். இங்கே குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கப் பார்க்கிறார்கள். அது வெற்றியளிக்காது. சுமுகமான இந்திய உறவுக்காக எமக்கு ஒப்பந்தங்கள் ஒன்றும் தேவையில்லை. இலங்கையை ,இந்தியாவுக்கு எதிராக பயன்படுத்த அனுமதிக்கப் போவதில்லை. எதிர்க்கட்சித் தலைவர் விக்கிரமசிங்க கூறியதாவது:-

இது பற்றிய பத்திரிகைச் செய்திகள் தொடர்பாக அரசு ஒன்றும் கூறாமையால்தான் நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். இதை நான் வெளிநாடுகளுக்கு எடுத்துச் சொல்லவில்லை. இங்கு நாடாளுமன்றில் கேள்வி எழுப்பியிருக்கிறேன். அரசும்- எதிர்க்கட்சியினரும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி செயற்பட வேண்டும் என்று அமைச்சர் ஏற்றுக் கொண்டிருப்பது மகிழ்ச்சியளிப்பதாகும். விமானப் பராமரிப்பு நிலையம் மூலம் எம்மவருக்கு புதிய தொழில் நுட்ப உதவிகள் கிடைக்கும் என்று அமைச்சர் கூறினார். எமது நாட்டில் சிறு விமானப் படையொன்றைத்தான் நாம் வைத்திருக்கிறோம். எம்மிடம் 44 சீன தயாரிப்பு விமானங்கள் உள்ளன. கடந்த 30 ஆண்டுகளாக நாம் அவைகளை இங்கேயே பழுது பார்த்தோம். இயந்திரங்கள் மட்டும்தான் அங்கிருந்து கொண்டு வரப்பட்டன. இந்த மாதிரி பராமரிப்பு நிலையத்தால் எமக்கு என்ன கிடைக்கப் போகிறது என்பது எனக்கு விளங்கவில்லை. இவைகளைப் பழுது பார்ப்பதற்கு நாம் ஒரு வருடத்துக்கு ஒரு மில்லியன் ரூபாவைக் கூடச் செலவு செய்வதில்லை.

அமைச்சர் பீரிஸ்: எமது விமானங்களை நாமே பராமரிக்க வேண்டும். அதற்குக் கணிசமான அளவு பணம் தேவைப்படுகிறது. எனவே அந்தப் பணத்தை வெளியில் அனுப்பாமல் நாமே வைத்துக் கொள்ள முடியும். இந்த வகையில் எமது இளைஞர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு இது சரியான தருணம். இந்த வகையில் செயற்படுத்துவதற்கு அரசுக்கு எல்லாவகைப் பொறுப்புக்களும் இருக்கின்றன.

விக்கிரமசிங்க: புதிய இயந்திரங்களை இணைப்பது தவிர்ந்த ஏனைய எல்லா பழுது பார்ப்பு வசதிகளும் எம்மிடம் இருக்கின்றன. இதற்கு ஒரு வருட காலத்துக்கு அமெரிக்க டொலரில் ஒரு லட்சம் அல்லது இரண்டு லட்சம் மில்லியன் தான் செலவாகும் என்று நான் அறிகிறேன். ஜெட் விமானங்கள் இறங்கக் கூடிய விமான நிலையங்கள் கட்டு நாயக்க, ரத்மலான மற்றும் ஹிங்குராங் கொட என்பவையே திருகோணமலை அல்ல.

பீரிஸ்: மத்தள என்பது ஒன்று என்று நான் கூறினேன்.

விக்கிரமசிங்க : இல்லை

பீரிஸ்: திருகோணமலையென்றேன்.

சபாநாயகர்: நீங்கள் ஹறங்குராங்கொட பற்றிக் கூறவில்லை.

திருகோணமலையில் சீன விமான திருத்தும் நிலையம் அமைக்கும் அரசின் திட்டம் இன்னமும் கைவிடப்படவில்லை. ஏனென்றால் இன்னமும் அமைச்சரவையின் பரிசீலனைக்கு இடத்தின் மாற்றம் பற்றிய முன்மொழிவு ஒன்று வந்து சேரவில்லை. எதுவானாலும் அந்த நிலையம் திருகோணமலையில் இடம் பெறுவதாக இல்லை. இடம் மாற்றப்படுவது நிச்சயமாகும். இது இந்திய வெளியுறவு அமைச்சர் நேரடியாகத் தெரிவித்துள்ள கருத்தின் விளைவு. கடந்த ஜூலை 11 ஆம் திகதி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் புதுடில்லி சென்றிருந்த போது இது பற்றிய விவகாரத்தை அவர் கிளப்பியுள்ளார். 1987 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இலங்கை- இந்திய ஒப்பந்தத்துக்கு மாறானது இதுவென்று சுஸ்மா சுவராஜ் பீரிஸிடம் எடுத்துக் கூறியிருந்தார். ஆனால் பீரிஸ் இது பற்றி நாடாளுமன்றத்தில் கூறுகையில் இந்திய அமைச்சர் விளக்கம் கோரியதாக மட்டுமே கூறினார். விவரம் தரவில்லை. அதற்குப் பதிலாக ரணில் விக்கிரமசிங்க கற்பனைக் கருத்துக்களை வைத்துக் குளறுபடிகளை ஏற்படுத்துவதாகவும், குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயல்வதாகவும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

சுஸ்மா சுவராஜ் உடனான சந்திப்பின்போது காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் ஆணைக்குழுவின் அதிகாரப் பரப்பை விஸ்தரிக்க முடிவு செய்யப்பட்டிருப்பது, அதனால் அதற்கு ஆலோசனை கூற வெளிநாட்டு நிபுணர்களை நியமிக்க விருப்பது போன்ற விடயங்களையும் பீரிஸ் இந்திய அமைச்சருக்கு விளங்கப்படுத்தியிருந்தார் என்று தெரிய வந்துள்ளது. இது இந்திய ஆதரவை இதற்குப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சியானாலும் அப்படி ஒன்று நடைபெற்றதாகத் தெரியவில்லை. பீரிஸ் கூறியவற்றைக் கேட்டு வைத்தாரே தவிர இந்திய அமைச்சர் கருத்து ஒன்றையும் வெளியிடவில்லை. அமைச்சரின் செயற்பாடு குறித்த எதிர்க்கட்சித் தலைவர் பத்திரிகைகளுக்கு கருத்து வெளியிடுகையில், இது ஒரு முக்கிய விடயம் என்பதால் நான் நாடாளுமன்றத்தில் கிளப்பியிருந்தேன். வெளியுறவு அமைச்சர் செய்ததெல்லாம் என்னை மட்டுமல்ல முழு சபையையுமே தவறாக வழி நடத்தியதுதான் என்றார்.

### நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க ஆலோசனை


கொழும்பு புதிய நகர மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஒரு கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கவலையளிப்பதாக இருந்திருக்க முடியும். சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் வண.மதுலுவாவே சோபித தேரரால் இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. எதிர்க்கட்சிகளில் பல முக்கிய தலைவர்களையும், அரசிலுள்ள ஜாதிக ஹெல உறுமய பிரதிநிதியையும் இந்தக் கூட்டம் ஒன்றுபடுத்தியிருந்தது. அவர்கள் அனைவருமே ஜனாதிபதி ஆட்சிமுறையில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்தை வெளியிட்டிருந்தார்கள். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனநாயக கட்சித் தலைவர் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புத் தலைவர் ஆர்.சம்பந்தன், ஜனதா விமுக்தி பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி 43 ஆவது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உபுல் ஜயசூரிய, மேல் மாகாண சபை உறுப்பினர் உதயகமன் பில, ஜே.எச்.யு, நாடாளுமன்ற உறுப்பினர் வண. அதுரெலியேரத்தன தேரர் மற்றும் வண ஜிராம்பே ஆனந்த தேரர், ரா்மானிய நிகாயாவின் அனுநாயகா ஆகியோரும் ஏனைய பலரும் கலந்து கொண்டனர். கூட்டத்தினில் அரசியல்வாதிகள், தொழில் நுட்பப் பிரமுகர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் காணப்பட்டனர்.

நல்லதொரு நாளைய தினத்துக்கான பொது வேலைத்திட்டம் ஒன்று கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை ஒழிக்கப்பட வேண்டும். அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் மீளவும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். இந்த நோக்கங்களை அடைவதற்கு வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பிரதான ஏற்பாட்டாளர்கள் இரகசிய கலந்துரையாடல்களை நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது. அவ்வாறான ஒரு வேட்பாளர் தாம் தெரிவாகி ஆறு மாதத்துக்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக வாக்களிக்க வேண்டும்.

பல்வேறு அரசியல் கோட்பாடுகளைக் கொண்ட கட்சிகள் எல்லாம் ஒன்று கூடியிருப்பது நாட்டில் மிக மோசமான அரசியல் சூழ்நிலையொன்று உருவாகியிருப்பதையும் அதில் ஏற்பட்டுள்ள அதிருப்தியையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இந்தக் கட்சிகள் யாவும் தமது ஏனைய வேறுபாடுகளை விடுத்து ஒன்று சேர்ந்திருப்பதும் ஓர் அரசியல் மாற்றத்தை அவர்கள் விரும்புகிறார்கள் என்பதைக் காட்டுவதாய் உள்ளது. இது ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு ஒரு நல்ல செய்தியல்ல. இருந்தாலும் கைதேர்ந்த அரசியல்வாதியும் பொதுமக்கள் தொடர்பு சாதுர்யவானுமாகிய அவர் தளர்ச்சியடையப் போவதில்லை. அவர் எதனையும் எதிர்நோக்கத் தயாராய் இருப்பதாகத் தெரிகிறது.

■ இ.நிசா.

# நன்மைகள் பல நல்கும் ஆடிப்பூரம்



இந்து சமயத்தினரது சிறப்பான வழிபாட்டுத் தினங்களில் ஆடிப்பூரம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆடி மாதம் அம்பிகையை வழிபட உகந்த காலமாகும். ஆடி மாதத்தில் பூர நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும்போது கொண்டாடப்படும் விழா இதுவாகும். இந்த நாள் அம்பிகைக்குரிய நாளாகவும் ஆண்டாளுக்குரிய நாளாகவும் சிறப்பிக்கப்படுகின்றது. ஏனெனில் இந்த நாளிலேதான் அம்பிகையும் ஆண்டாளும் அவதரித்ததாகக் கூறப்படுகின்றது. அகில உலகிலுள்ள உயிர்களைக் காப்பதற்காக பராசக்தியானவள் அம்பிகையாக இந்த நாளிலே தோன்றியதாக புராணங்கள் குறிப்பிடுகின்றன. இந்த நாளிலே அம்பிகைக்கு வளைகாப்புச் சாத்தும் உற்சவமும் இடம் பெறும். உயிர்களைப் படைத்து அவற்றைக் காத்தருளுகின்ற அன்னையான அம்பிகைக்கு வளைகாப்பு நடத்தி அவளுக்கு வளையல்களை அணிவித்து அவளை மகிழ்வுறச் செய்கின்ற நாள் இதுவாகும்.


அது மட்டுமல்லாது, இந்த நாளிலேதான் சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாகிய ஆண்டாள் நாச்சியார் அவதரித்தார். வில்லிபுத்தூர் என்ற அழகிய கிராமத்தில் ஆழ்வார்களில் மூத்தவரான பெரியாழ்வார் அரங்க நாதனை வழிபட்ட வண்ணம் வாழ்ந்து வருகின்றார். அவருக்குக் குழந்தைப் பாக்கியம் இல்லாத குறையை நீக்கத் திருவுள்ளம் கொண்ட பெருமாள் தனது சக்தியான பூமிதேவியின் அம்சத்தை அவருக்கு மகளாகப் பிறக்கச் செய்கின்றார். அதன்படி அங்குள்ள நந்தவனத்தில் துளசி மாடத்தடியில் சிறு குழந்தையாக அவதரிக்கின்றார் பூமாதேவி. இதைக்கண்ட பெரியாழ்வார் அந்தக் குழந்தையை அணைத்தெடுத்து கோதை எனப் பெயரிட்டார். சிறு வயது முதலே அவளுக்குக் கண்ணனது பெருமைகளைச் சுவைபடக் கூறுவார். அவற்றை விருப்பத்தோடு கேட்டு அரங்கனின் நினைவாக அவள் வாழ்ந்து வந்தாள்.

பெருமாளுக்குத் தனது தந்தை தினமும் அணிவிக்கத் தொடுத்து வைத்திருக்கும் மாலையைத் தந்தைக்குத் தெரியாமல் தானே சூடிக் கொண்டு அழகு பார்ப்பாள் கோதை. தனது அழகைத் தானே பார்த்து ரசிப்பாள். பின்னர் மாலையைக் கழற்றி இருந்த இடத்தில் வைத்து விடுவாள். அந்த மாலையைத் தான் பெருமாளுக்கு அணிவித்து வந்தார் பெரியாழ்வார்.

ஒருநாள் பெருமாளுக்கு உரிய மாலையை ஆண்டாள் அணிந்திருந்ததை பெரியாழ்வார் பார்த்துவிட்டார். மகளைக் கண்டித்தார். பின்னர் வேறொரு மாலையைத் தொடுத்து அதைப் பெருமாளுக்கு அணிவித்தார்.

ஆனால் அது அறுந்து விழுந்தது. விபரீதம் ஏதும் நடக்கப்போகிறதோ? என்ற அச்சத்தில் இருந்தார் பெரியாழ்வார்.

அவரிடம், தான் ஏற்கனவே அணிந்து அழகு பார்த்த மாலையைக் கொண்டுவந்து கொடுத்து பெருமாளுக்கு அணிவிக்குமாறு கூறினாள் ஆண்டாள். அவரும் அவ்வாறு செய்ய மாலை அறுந்து விழவில்லை. அப்போது பெருமாள் அவர்கள் முன்பு ஆண்டாள் அணிந்த மாலையை யாம் ஏற்றுக்கொண்டோம்" என்றார்.



ஆண்டாள் 'சூடிக் கொடுத்த சுடர் கொடியாள்' ஆனாள். ஆண்டாள் பருவ வயதை அடைந்த போதும் கண்ணன் மீது தீவிர பற்றுள்ளவளாக இருந்தாள். அதுவே காதலாக மாறியது. மணந்தால் ஸ்ரீரங்கப் பெருமானைத்தான் மணப்பேன் என்று வைராக்கியத்துடன் இருந்தாள்.

ஒருநாள் பெரியாழ்வாரின் கனவில் ஸ்ரீரங்கப் பெருமாள் தோன்றி "உம்து மகளை ஸ்ரீரங்கம் அழைத்து வா. அங்கே யாம் அவளை மணந்து கொள்வோம்" என்றார். அதன்படி ஆண்டாளை பல்லக்கில் அமர வைத்து ஸ்ரீரங்கம் அழைத்துச் சென்றனர். ஸ்ரீரங்க எல்லையை அடைந்தபோது திடீரென்று ஆண்டாள் மாயமாகிவிட்டாள்.

பெரியாழ்வார் அதிர்ச்சி அடைந்து பெருமாளை நோக்கி வேண்டினார். அப்போது ஆண்டாளுடன் பெருமாள் காட்சி கொடுத்தார். "உமது மகளை ஏற்றுக் கொண்டோம்" என்றார் பெருமாள். அதன்படி பங்குனி உத்தரம் அன்று ஸ்ரீவில்லிபுத்தூர் வந்து ஆண்டாளை மணந்தார் பெருமாள். இத்தகைய சிறப்புமிக்க ஆண்டாள், ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள நந்தவனத்தில் தோன்றியதும் ஆடி மாத பூர நட்சத்திர நாளன்றுதான்.

ஆடிப்பூர நன்னாளிலே அம்பாள் ஆலயங்களில் அம்பாளுக்கு வளையல் அணிவிக்கும் நிகழ்வு சிறப்பாக இடம்பெறும். அடியவர்கள் வளையல்களை அம்பாளுக்கு அணிவித்து மகிழ்வோடு வழிபடுவார்கள். அத்துடன் பெருமாள் ஆலயங்களில் ஆண்டாள் நாச்சியாருக்கு ருது சாந்தி வைபவம் சிறப்புற நிகழ்த்தப்படும். எனவே இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட ஆடிப்பூர நாளிலே அம்பிகை மற்றும் ஆண்டாள் ஆகியோரை வழிபடுகின்றபோது கன்னிப் பெண்களுக்கு திருமணத்தடைகள் நீங்கி விரைவில் திருமணம் கைகூடும் என்பதுடன் வாழ்வில் சகல நன்மைகளும் கிடைக்கப்பெறும்.

# உளவியல் நெருக்கீடுகளும் தீர்வுகளும்



"இளவயதினரிடையே அதிகரித்துவரும் புகை, போதைப் பழக்கங்கள்; இளவயதுக் கர்ப்பங்கள், தற்கொலை, வன்முறைப்போக்குகள், ஆசிரியர் மற்றும் பெற்றோர் முதியவர்களை மதிக்காத அலட்சியப்போக்குகள் என்பன சமூகத்தில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன. இதனைத் தடுத்து நிறுத்தி வடபகுதியின் உளநெருக்கீடுகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டியது காலத்தின் கட்டாயம். இந்த விடயத்தில் சகல தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டும்" என வடக்குமாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள ஆணையாளர் மருத்துவர் திருமதி சி.துரைரத்தினம் "உளவியல் நெடுக்கீடுகளும் தீர்வுகளும்" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள விவரக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நவீனமயப்படுத்தப்பட்ட நாகரிக வாழ்க்கையாலும் பல்வேறுபட்ட குடும்பச் சூழ்நிலை, போரனர்த்தம் போன்றவற்றாலும் வடபகுதி மக்கள் தற்போது பல்வேறுபட்ட நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் உளவியல் தொடர்பான நெருக்கீடுகள் வட பகுதியில் சடுதியாக அதிகரித்துக் காணப்படுகின்றன.

வடபகுதி தமிழர்களின் பாரம்பரிய கலை, கலாசாரம் என்பது உலகத் தமிழர்களால் மட்டுமன்றி ஏனைய சமூகத்தவர்களாலும் விரும்பப்பட்டதுடன் பாராட்டப்பட்ட ஒன்றாகவும் இருந்து வந்தது.

இன்றைய நவீனத்துவ மாற்றங்கள் முக்கியமாக போருக்குப் பின்னரான எமது இளம் சமுதாயத்தினரிடையே ஏற்பட்டுவரும் மாற்றங்கள் அதிர்ச்சியூட்டும் விதமாகக் காணப்படுகின்றன. இள வயதினரிடையே அதிகரித்து வரும் புகை, போதைப்பழக்கங்கள், இளவயதுக் கர்ப்பங்கள், தற்கொலைகள், வன்முறைப் போக்குகள், ஆசிரியர், பெற்றோரை மதிக்காத அலட்சிய மனப்பாங்குகள் என்பன சமூகத்தில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன.

> இன்றைய நவீனத்துவ மாற்றங்கள் முக்கியமாக போருக்குப்பின்னரான எமது இளம் சமுதாயத்தினரிடையே ஏற்பட்டுவரும் மாற்றங்கள் அதிர்ச்சியூட்டும் விதமாகக் காணப்படுகின்றன.

இவ்வாறான விரும்பத்தகாத மாற்றங்கள் தொடர்பில் அரச, அரச சார்பற்ற, சமூக அக்கறை சார் நிறுவனங்கள் உடனடியாக கவனம் செலுத்தி அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இவ்வாறான இளம் சமுதாயத்தின் மாறுபட்ட உளமாற்றங்களை சீர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனில் எமது சமூகத்தின் பாரம்பரியம், கலாசாரம் அழிவதுடன் எமது எதிர்கால சந்ததியினர் மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்வதும் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: குடும்பத்தில் இருப்பவர்கள் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் தாமதப்படும். செலவுகள் கூடும். அயல் வீட்டாரிடம் கவனமாகப் பேசுவதும் வாக்கு வாதத்தைத் தவிர்ப்பதும் நல்லது. வீண் அலைச்சல் வேலைப்பளு ஆகியவை இருக்கும்.

**இடபம்**: சில முக்கியமான காரியங்களில் கூடுதலாக கவனம் செலுத்துவதன் மூலமும் அதிக உழைப்பாலும் செய்து முடிப்பீர்கள். வெளியூர் பயணம் செல்ல நேரிடும். உங்களது செயல்களால் உங்களுக்கு மற்றவர்களிடம் இருந்து பாராட்டுக் கிடைக்கும்.

**மிதுனம்**: எதிலும் தயக்கமோ, பயமோ இல்லாமல் ஈடுபடுவீர்கள். தந்தை மூலம் உதவிகள் கிடைக்கும். பூர்வீக சொத்துக்கள் மூலம் வருமானம் இருக்கும். எதைப் பற்றியும் கவலைப்படாமல் தொழில், வியாபாரத்தில் முழுக் கவனத்தையும் செலுத்துவீர்கள்.

**கடகம்**: எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தடங்கலின்றி எதையும் செய்து முடிப்பார்கள். பணி தொடர்பான பயணங்கள் இருக்கும். வாழ்க்கைத் துணையின் மூலம் ஆதாயம் உண்டாகும்.

**சிங்கம்**: ஆன்மிக எண்ணம் அதிகரிக்கும். உங்களது பொருள்களின் மீது கவனம் தேவை. சாதுரியமான செயல்களால் இலாபம் உண்டாகும். எதிலும் தயக்கமோ, பயமோ இல்லாமல் ஈடுபட்டு சிறப்பாக செய்வீர்கள். பெரியவர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

**கன்னி**: எந்த ஒரு காரியத்திலும் எதிர்பார்த்த வெற்றி தாமதமாகக் கிடைக்கும். ஒதுங்கி இருந்தால் கூட வலுக்கட்டாயமாக எதிலாவது ஈடுபட சுற்றமும், நட்பும் தூண்டும். கவனமாக அதைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்**: வீண் அலைச்சல் செலவு ஏற்படலாம். பயணங்களின் போது எச்சரிக்கை தேவை. தொழில், வியாபாரத்தில் மந்த நிலை காணப்பட்டாலும் வருமானம் வந்து சேரும். புதிய முயற்சிகள் காலதாமதமாக முடியும்.

**விருச்சிகம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணியைக் கவனிக்க வேண்டி இருக்கும். மேலதிகாரிகளிடமும் சக பணியாளர்களிடமும் அனுசரித்துச்செல்வது நல்லது. குடும்ப உறுப்பினர்களிடம் நிதானமாகப் பேசுவதும் வாக்குவாதத்தை தவிர்ப்பதும் நல்லது.

**தனுசு**: விருந்தினர்கள் வருகையும், அதனால் செலவும் உண்டாகலாம். அடுத்தவர்கள் பேச்சைக் கேட்டு எதிலும் ஈடுபடாமல் இருப்பது நன்மை தரும். வீண் அலைச்சலும், செலவும் உண்டாகலாம். கவனம் தேவை.

**மகரம்**: கவனமாகச் செயற்படுவது நல்லது. எதிர்பார்த்த காரியங்களை வெற்றிகரமாகச் செய்து முடிக்க கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். முக்கிய நபர்களின் நட்புக் கிடைப்பதுடன் அவர்களால் நன்மை யும் உண்டாகும்.

**கும்பம்**: தொழில், வியாபாரம் தொடர்பாக கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். தொழில், வியாபாரம் பற்றிய விடயங்களில் நேரடிக் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக எதையும் செய்வது நல்லது.

**மீனம்**: குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். ஒரு நல்ல குறிக்கோளுக்காக புண்ணிய பயணம் செய்ய வேண்டி இருக்கும். ஆடம்பரப் பொருள்கள், வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும்.

## நாளை

**ஆடி-15 வியாழக்கிழமை | 31.07.2014**

திதி: சதுர்த்தி மு.ப.11.51 வரை
நட்சத்திரம்: உத்தரம்
பி.இ.04.13 வரை

சுபநேரம்: 07.33-09.03 வரை
இராகுகாலம்: 01.33-03.03 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### கடவுள் எம்மைக் காப்பாற்றுகிறார்

'நீ, நான்' என்னும் வேற்றுமை உணர்வு எமக்கு இருக்கும்வரை, கடவுள் எம்மைக் காப்பாற்றுகிறார் என்று பேசியே ஆக வேண்டும். அதன் விளைவுகளுக்கு நாம் உட்பட்டுத்தான் ஆக வேண்டும். நம் இருவருக்கும் இடையில் லட்சியமாக விளங்கும் மூன்றாவது ஒன்று இருப்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த முக்கோணத்தின் சிகரமாகத் திகழ்வது இந்த மூன்றாவது சக்தி. நீராவி, பனியாகி, பின்னர் நீராகிறது; அந்த நீர் பிறகு கங்கையாகிறது. ஆயினும் நீராவி நிலையில் இருக்கும்போது அது கங்கை அல்ல; நீர் என்னும் நிலையில் இருக்கும்போது அது நீராவி அல்ல. படைப்பு அல்லது மாற்றம் என்னும் கருத்து சங்கற்பத்துடன் பிரிக்க முடியாதவாறு இணைக்கப்பட்டுள்ளது. இந்த உலகம் இயங்குவதைப் பார்க்கும்போதெல்லாம், சங்கற்பம் ஒன்று அதை இயக்குகிறது என்ற எண்ணம் நமக்குத் தோன்றவே செய்கிறது. புலன்களால் மயக்கம் ஏற்படுவதைப் பௌதிக விஞ்ஞானம் நிரூபிக்கிறது. நாம் காண்பது, கேட்பது, முகர்வது, தொட்டு உணர்வது, சுவைப்பது எதுவும் உண்மை இல்லை என்று அது கூறுகிறது. சில விளைவுகளை உண்டாக்கும் சில அதிர்வுகள் நமது புலன்களையும் பாதிக்கின்றன; சார்பு பற்றி நிற்கும் உண்மை மட்டுமே நமக்குத் தெரிகிறது.

## சிறுத்தைக்கு மசாஜ் செய்யும் நபர்



சிறுத்தை ஒன்று தனது பராமரிப்பாளரிடம் மசாஜ் செய்யக் கூறி ஏங்கும் காட்சிகள் அடங்கிய காணொலி ஒன்று இணையத்தளத்தில் வெளியாகிப் பலரது கவனத்தை ஈர்த்துள்ளது.

இந்த நிலையில் விலங்கு பராமரிப்பாளர் தனது கை வலிக்க வலிக்க சிறுத்தைக்கு மசாஜ் செய்துள்ளார். சிறுத்தையும் பராமரிப்பாளரின் கைகளைப் பிடித்து தலையைத் தடவி விடுமாறு தனது மொழியில் கூறுகின்றது.

அநாதரவாக விடப்படும் பெரிய பூனைகள் அமெரிக்காவிலுள்ள, லுயிஸ் பேர்கில் 'காடர் கோவ் பெலினி' என்று அழைக்கப்படும் பூங்காவில் வளர்க்கப் பட்டு வருகின்றன. இந்தப் பூங்காவிலே மேற்படி சிறுத்தையும் வளர்க்கப்பட்டு வருகின்றது.

இந்தச் சிறுத்தையை கண்காணிப்பவர் சிறுத்தைக்கு நன்கு பரீட்சயமானவராகி விட்டதால் அவருக்கு முத்தம் கொடுப்பது, தனது மொழியில் மசாஜ் செய்யச் சொல்வது போன்ற செயற்பாட்டில் சிறுத்தை ஈடுபட்டு வருகின்றது.

மேற்படி காட்சிகள் அடங்கிய காணொலி இணையத்தளங்களில் வெளியாகியுள்ளதுடன் இதனை பல இலட்சக் கணக்கான மக்கள் பார்வையிட்டுள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | | 5 | 4 | | 9 | | |
| | | | | | | | | 5 |
| 9 | | | 1 | 2 | | | 8 | 4 |
| 5 | | 1 | 7 | 9 | 6 | | | 3 |
| 7 | | | | | | | | 2 |
| 3 | | | 8 | 5 | 2 | 7 | | 9 |
| 4 | 9 | | | 3 | 1 | | | 8 |
| 6 | | | | | | | | |
| | | 2 | | 7 | 5 | | 9 | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | 5 | 2 | 6 | 1 | 3 | 9 | 7 |
| 9 | 2 | 3 | 7 | 5 | 8 | 4 | 6 | 1 |
| 6 | 7 | 1 | 9 | 4 | 3 | 5 | 8 | 2 |
| 7 | 5 | 9 | 1 | 2 | 4 | 8 | 3 | 6 |
| 3 | 6 | 2 | 5 | 8 | 7 | 9 | 1 | 4 |
| 1 | 8 | 4 | 3 | 9 | 6 | 7 | 2 | 5 |
| 4 | 3 | 7 | 6 | 1 | 9 | 2 | 5 | 8 |
| 2 | 9 | 6 | 8 | 7 | 5 | 1 | 4 | 3 |
| 5 | 1 | 8 | 4 | 3 | 2 | 6 | 7 | 9 |



அச்சுவேலி கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் நடத்திய அமரர் சு. தற்பரன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற அச்சுவேலி கதிரொளி ரொக்கெட் அணியை இங்கு காணலாம். (த)

## வடக்கு,கிழக்கு மாகாணங்களின் பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை 30

வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சும் வடமாகாண பூப்பந்தாட்ட சங்கமும் இணைந்து நடத்தும் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் 31 ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி வரை யாழ்.மாவட்டத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி சுற்றுப்போட்டித் தொடரின் ஆரம்ப நிகழ்வுகள் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் தலைமையில் இடம் பெறவுள்ளது. ஆரம்ப நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார். (த-23)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை30

முள்ளிய வளை வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென்.யூட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து முள்ளியவளை விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்புகுளம் அலைஓசை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செம்மலை உதய சூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அலம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிலாவத்தை இ[illegible] பறவை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இன்று புதன்கிழமை 4 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் [illegible]ரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் றெஜின் போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இன்று புதன்கிழமை 3.[illegible]0 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் றேஞ்சஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கழுகுகள் விளையாட்டுக்கழக அணி மோத வுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.சேவியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோத வுள்ளது. (த-23)



## ஆனந்தம், சுப்பர் ராங், அன்ரனிஸ் அதிரடி ஆட்டத்தால் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை 30

புதுகுடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் புதுகுடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகமைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு.

ஆனந்தம் விளையாட்டுக்கழக அணிக்கும் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஆனந்தம் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சுப்பர் ராங் விளையாட்டுக் கழக அணிக்கும் செந்தமிழ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சுப்பர் ராங் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் ஒட்டிசுட்டான் பரந்தாமன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரணைப் பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## ஆட்டங்களில் வென்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழவை முன்னிட்டு நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் 2ஆம் சுற்றுப் போட்டித் தொடரின் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற காலிறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு;-

இலுப்பைக் கடவை சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் தேவன்பிட்டி சென். சேவியர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இலுப்பைக்கடவை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக 'ஏ' அணிக்கும் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

வலைப்பாடு சென்: ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் பள்ளிமுனை சென்.லூட்சியா விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## நவஜீவன்ஸ், யங்கம்பன்ஸ் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 30

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதா னத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு;-

நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் செந்தமிழ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கண்க்கில் வெற்றி பெற்றது.

யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் நெடிய காடு விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில், யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## வென்றது முல்லைத்தீவு சென்.யூட்


யாழ்ப்பாணம்,ஜூலை 30

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பிரிவு 2 இற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் முல்லைத்தீவு சென்.யூட் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டது. இதில் முல்லைத்தீவு சென்.யூட் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)




# 100 மீற்றர் ஓட்டத்தில் கலக்கும் ஜமெய்க்கா

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியின் 100 மீற்றர் அதிவேக ஓட்டப்பந்தய இறுதிப்போட்டியில் ஜமெய்க்கா வீரர் கெமர் பெய்லி கோல் தங்கம் வென்றுள்ளார்

நேற்று முன் தினம் இரவு நடந்த இந்த போட்டியில் உலகின் அதி வேக வீரர் உசேன் போல்ட் பங் கேற்காதபோதிலும் இறுதிப் போட் டியில் 3 ஜமெய்க்கா வீரர்கள் தகுதி பெற்று இருந்துள்ளனர்.

இதையடுத்து தொடங்கிய இறுதி போட்டியில், 8 பேரும் மின்னல் வேகத்தில் ஓடியதில் ஜமெய்க்கா வீரர் கெமர் பெய்லி கோல் 100 மீற்றர் இலக்கை 10 வினாடியில் கடந்து தங்கம் வென்றுள்ளார்.

வெள்ளிப் பதக்கத்தை இங்கிலாந் தின் ஜெமிலி 10.10 வினாடிகளில் இலக்கை அடைந்து கைப்பற்ற, மற்றொரு ஜமைக்கா வீரர் அஸ் மேக்டே 10.12 வினாடியில் 100 மீற்றர் கடந்து வெண்கலப் பதக் கத்தை வென்றுள்ளார்.

இதேபோல் நேற்று முன் தினம் இரவு நடந்த பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில், நைஜீரியா வீராங்கனை ஒக்பரே 10.85 வினாடியில் இலக்கை கடந்து தங்கம் வெல்ல, ஜமெய்க் காவின் கேம்பல் பிரஷன் 11.03 வினாடிகளில் வந்து வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

மேலும், வெண்கலப் பதக்கத்தை மற்றொரு ஜமெய்க்கா வீராங்க னையான ஸ்டுவர்ப் 11.07 வினாடி யில் இலக்கை கடந்து பெற்றுள் ளார். (த)

# டேரில் போஸ்டரிடம் சேனநாயக்க பயிற்சி

இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் சச்சித்ர சேனநாயக்க, மேற்கு ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரான டேரில் போஸ்டரிடம் பயிற்சி பெறவுள்ளார்.

சேனநாயக்க, முறையற்ற பந்துவீச்சுக் குற்றச்சாட்டின் பேரில் சர்வதேச கிரிக்கெட் சபையினால் அண்மையில் பந்து வீச்சிலிருந்து தடை செய் யப்பட்டிருந்தார்.

ஒகஸ்ட் மாதம், இரண்டாம் வாரமளவில் இவர், இலங்கை அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் ஜெரோம் ஜெயரட்னவுடன் ஆஸ்திரே லியா செல்லவுள்ளார்.

அங்கு அவர் போஸ்டரின் வழிகாட்டலில் ஒரு வாரகாலத் திருத்தப் பயிற்சியில் ஈடுபடவுள்ளார்.

இலங்கையின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளி தரனின் பந்து வீச்சில் ஏற்பட்ட சர்ச்சையைத் தொடர்ந்து அவர் பரி சோதனையில் ஈடுபடுத்தப்பட்டபோது, போஸ்டர் பரிசீலனைக் குழுவில் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (த)




# மொயின் அலிக்கு ஐ.சி.சி எச்சரிக்கை

காஸாவில் இஸ்ரேல் ராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதையடுத்து இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் மொயீன் அலி காஸாவைக் காப்பாற்றுங்கள் மற்றும் 'பலஸ்தீனத்திற்கு விடுதலை அளியுங்கள் என்ற வாசகங்கள் அடங்கிய கைப் பட்டி அணிந்து டெஸ்ட் போட்டியில் களமிறங்கினார்.

உடனே ஐ.சி.சி சமயம் மற்றும் அரசியல் சார்ந்த செய்திகள் அடங்கிய கைப்பட்டிகளை அணியக்கூடாது என்று தடை விதித்தது.

ஆனால் இங்கிலாந்து கிரிக்கெட் சபை மொயீன் அலியின் இந்தச் செயல்பாடு மனிதார்த்த மதிப்பீடுகள் சார்ந்ததே தவிர அரசியல் அல்ல என்று ஆதரவு அளித்துள்ளது.

அதேவேளை, மொயீன் அலி தனது கருத்துக்களை சுதந்திரமாகக் கூறலாம், ஆனால் கிரிக்கெட் மைதானத்தில் சமயம், அரசியல் சார்ந்த கருத்துக் களையோ அடையாளங்களையோ வெளிப்படையாகத் தெரியப்படுத் தக்கூடாது என்று ஐசிசி ஆட்ட நடுவர் மொயீன் அலியை எச்சரிக்கை செய்துள்ளார்.

ஐ.சி.சியின் வீரர்கள் நடத்தை விதிமுறைகள் இதனை அனுமதிப்பதில்லை என்று ஐ.சி.சி கூறியுள்ளது.

மொயீன் அலி பாகிஸ்தானில் பிறந்தவர். இவர் இங்கிலாந்துக்காக இதுவரை 5 டெஸ்ட் போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகள், 6 20/20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியுள்ளார். (த)



# தங்க வேட்டையில் ஆஸி. முன்னிலை



ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெறும் 20 ஆவது விளையாட்டுப் போட்டிகளில் பதக்கப் பட்டியலில் ஆஸ்திரேலியா தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி யுள்ளது.

30 தங்கம், 25 வெள்ளி, 32 வெண்கலப் பதக்கங்கள் அடங் கலாக 87 பதக்கங்களைப் பெற் றுள்ள ஆஸ்திரேலியா பதக்கப் பட்டியலில் தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கின்றது.

27 தங்கம், 24 வெள்ளி மற்றும் 23 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ள இங்கிலாந்து இரண்டாவது இடத்தையும் 13 தங்கம், 8 வெள்ளி, 12 வெண் கலப் பதக்கங்களைப் பெற்றுள்ள ஸ்கொட்லாந்து மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.

தலா 9 தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ள தென்னாபிரிக்கா மற்றும் கனடா ஆகியன முறையே நான்காவது மற்றும் ஐந்தாம் இடங்களைப் பெற்றுள்ளன.

8 தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ள நியூசிலாந்து ஆறாம் இடத்தையும் 7 தங்கப் பதக்கங்க ளைப் பெற்றுள்ள இந்தியா ஏழாம் இடத்தையும் பிடித்துள்ளன. (த)

# நவக்கிரி எல்லாளனை வென்று சம்பியனானது அச்சுவேலி கதிரொளி

அச்சுவேலி, ஜூலை 30
அச்சுவேலி கோல்ட் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திய அமரர் சு.தற்பரன் ஞாபகார்த்த மென்பந்து துடுப்பாட்டத்தில் கிண்ணம் வென்றது அச்சுவேலி கதிரொளி றொக்கட் அணி.

மன்பந்து கிரிக்கெட் அணி கள் மோதிய இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் அச்சுவேலி மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்ட பங்குபற்றுநர்களிலிருந்து இறுதிப் போட்டிக்கு நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகமும், அச்சுவேலி கதிரொளி றொக்கட் விளையாட்டுக் கழகமும் தகுதி பெற்றிருந்தன. மூன்று வார காலமாக நடைபெற்ற லீக் போட்டிகளின் முடிவில், சில்வர் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை அரையிறுதியில் வீழ்த்திய கதிரொளி றொக்கட் மற்றும் அச்சுவேலி மத்திய வி.கழகத்தை அரையிறுதியில் வீழ்த்திய எல்லாளன் வி.கழகமும் இறுதிப் போட்டியில் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற எல்லாளன் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் செந்தூரன் முதலில் துடுப்பாட அழைத்தார். ஆரம்பத்தில் நிதானமான ஆட்டத்தை தொடக்கிய கதிரொளி றொக்கட் அணியினர் சீரான ஓட்ட விகிதத்தை பேணிய போதும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களை சார்ள்ஸ் மற்றும் சிவா அடுத்தடுத்து ஆட்ட மிழந்து அதிர்ச்சியளித்தனர். பின்வந்த 'சென்வூட்'டும் றெக்ஸ்மனும் சோபிக்கத் தவற, ஐந்தாவது இலக்குக்காக சோடி சேர்ந்த மதுசாந்தும் துஷியந்தனும் நிதானித்தனர். அதிரடியும் ஆக்ரோஷமும் கலந்து விளையாடிய இரு வரும் ஐந்தாவது விக்கெட் டுக்கான இணைப்பாட்டமாக 86 ஓட்டங்களைப் பகிர்ந் தனர். பன்னிரெண்டாவது பந்துப் பரிமாற்றத்தில் மது சாந்த் 72 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறிய பின்னும் துஷியின் அதிரடி தொடர்ந்தது. அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் துஷி 34 ஓட்டங்களுடன் வெளியேறிய பின்னர், களம் புகுந்த இளம் வீரர் தனா இறுதிப் பந்துப் பரிமாற்றங்களை நொருக்கித் தள்ளினார். 15 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கு இழப்புக்கு 190 ஓட்டங்களைப் பெற்ற கதிரொளி றொக்கட் அணி இமாலய வெற்றி இலக்கை நிர்ணயித்தது. எல்லாளன் விளையாட்டுக் கழகத்தின் செந்தூரன், பிந்துளன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளைச் சாய்த்தனர்.

191 என்ற கடினமான வெற்றி இலக்கோடு களம் புகுந்த எல்லாளன் அணியினர் ஓட்டங்களைப் பெற எத்தனித்ததில் இலக்குகளை காக்கத் தவறினர். சீரான இடைவெளிகளில் இலக்குகள் சாய்க்கப்பட மீதமுள்ள ஐந்து பந்துப் பரிமாற்றங்களில் 90 ஓட்டங்களைப் பெறவேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டது எல்லாளன் அணி. கைவசமிருந்ததோ ஐந்து இலக்குகள் என்கிற நிலையில் தொடர்ந்து வந்த பிந்துளன், விதுசன், சிந்துஜன் தொடர்ச்சியாக அதிரடி காட்டினர். சார்ள்ஸ் வீசிய 11 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் நான்கு சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி உள்ளிட்ட முப்பது ஓட்டங்களை விளாசி ஆட்டத்தின் விறுவிறுப்பை அதிகரித்தார் சிந்துஜன். அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே றொக்கட் அணித்தலைவர் தேனுஜன் அதிரடியாக ஆடிய சிந்துஜனின் இலக்கை வீழ்த்த ஆட்டம் கதிரொளி றொக்கட் அணியின் பக்கமாக சரிந்தது. இறுதிப்பந்துப் பரிமாற்றத்தில் 35 ஓட்டங்கள் தேவை எனும் நிலையில் எல்லாளன் அணி ஒரு பந்து மீதமிருக்கையில் சகல இலக்குகளையும் இழந்து 162 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியடைந்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக கதிரொளி றொக்கட் அணியின் மதுசாந்தும், சுற்றுப்போட்டியின் தொடர் நாயகனாக எல்லாளன் விளையாட்டுக் கழகத்தின் சிந்துஜனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற றொக்கட் அணிக்கான கிண்ணத்தை அமரர் சு.தற்பரனின் சகோதரன் சு.மகிதரன் கையளித்தார். (த-11)


## உதைபந்தாட்ட பயிற்சி தீவகத்தில்



யாழ்ப்பாணம், ஜூலை 30
யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. நிறுவனத்தினர் தீவகப் பாடசாலைகளின் 19 வயது ஆண், பெண் உதைபந்தாட்ட வீரர்களுக்கான பயிற்சி முகாமை அண்மையில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரியில் நடத்தினர்.

இந்தப் பயிற்சி முகாமில் தீவகப் பாடசாலை களைச் சேர்ந்த 38 மாணவர்கள் பங்குபற்றியிருந்ததாக யாழ்.வை.எம்.சி.ஏ. நிறுவனப் பொதுச் செயலாளர் தெரிவித்தார். (வ-9)

# திணறுகிறார் டோனி



இந்திய அணித் தலைவர் டோனி என்னதான் வெற்றிகளைக் குவித்தாலும் அவரது டெஸ்ட் போட்டியின் கள உத்திகள் தொடர்ந்து கிரிக்கெட் நிபுணர்களால் கேள்விக்குட்படுத்தப்பட்டு வருகிறது.

இது குறித்து தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு முதல் நாள் ஆட்டம் பற்றி கருத்துக் கூறிய சுனில் கவாஸ்கர், டோனியின் களத்தடுப்பு உத்தியை விமர்சனத்துக்குட்படுத்தியுள்ளார்.

முரளி விஜய், விராட் கோஹ்லி ஏன் ஸ்லிப்பில் இல்லை? அவர்கள்தான் இந்திய அணியில் இப்போதைக்கு சிறந்த ஸ்லிப் களத்தடுப்பாளர்கள்.ஆனால் அவர்கள் அங்கு இல்லை. ஏன் என்று தெரியவில்லை. ஆனால் இந்த முடிவு அணிக்கு எந்தவித உதவியையும் புரியவில்லை.

மேலும் ஸ்லிப்பில் களத்தடுப்பாளர்கள் நிறுத்தப்படும் முறையும் தவறாகவே தெரிகிறது. முதல் ஸ்லிப் டோனியிடமிருந்து விலகி நிற்க மற்ற ஸ்லிப் களத்தடுப்பாளர்கள் கூட்டமாக அருகருகே நிற்கின்றனர். இதனால் பிடி வந்தால் அதைப் பிடிக்கப்போவது யார் என்ற சந்தேகம் அவர்களுக்குள்ளேயே ஏற்படுவதுதான் நிகழும். இந்த விவகாரங் களை முதலில் சரி செய்ய வேண்டும்.

ஜடேஜா ஒரு சிறந்த களத்தடுப்பாளர் என்பதில் ஐயமில்லை. அவர் ஸ்லிப்பில் இல்லாமல் வெளியில் நின்றிருந்தால். நிச்சயம் ஓட்டங்களை அவர் தடுத்திருப்பார்.

ஸ்லிப்பில் அவர் பிடி எடுப்பார் என்பது ஒரு புறம் இருந்தாலும் அவரை சிறப்பாகப் பயன்படுத்த வேண்டுமெனில் கவர் திசையில் நிறுத்துவதே சிறந்தது சுனில் கவாஸ்கர் கூறியுள்ளார். (த)

## இலங்கை அணியை புறக்கணித்த மலிங்க

இந்தியாவில் செப்ரெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் சம்பியன்ஸ் லீக் 20/20 கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை வேகப் பந்து வீச்சாளர் லசித் மலிங்க மும்பை இந்தியன்ஸ் அணிக்கு விளையாட முடி வெடுத்துள்ளார்.

இலங்கை அணியான சதர்ன் எக்ஸ்பிரஸ் அணிக்கு விளையாடப் போவதில்லை என்று மலிங்க அறிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபைச் செய லர் நிஷந்த ரணதுங்க இது பற்றிக் கூறுகையில், நாங்கள் சதர்ன் எக்ஸ்பிரஸ் அணிக்கு விளையாடுவதை விரும்பினோம். ஆனால் மலிங்க மும்பை இந்தியன்ஸ் அணிக்கு விளையாடப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபை மற்றும் ஐ.பி.எல். சம்பியன்ஸ் லீக் இடை யேயான ஒப்பந்தத்தின் படி வீரர்கள் தங்கள் விருப்பப்படி அணியைத் தெரிவு செய்து கொள்ளலாம். அதன்படி மலிங்க மும்பை இந்தியன்ஸ் அணிக்கு விளையாட தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார் என்று கூறியுள்ளார்.

சதர்ன் எக்ஸ்பிரஸ் அணி இலங்கை உள்நாட்டு 20/20 கிரிக்கெட் தொடர் சம்பியன் அணியாகும். இதன் அணித் தலைவர் மலிங்க என்பது குறிப்பிடத் தக்கது. (த)

## மரண அறிவித்தல்

### முத்தையா இராஜேந்திரம் (கமல்)



குமரபுரம், பரந்தனைப் பிறப்பிடமாகவும், இல.471, ஆனந்தபுரம் கிழக்கு, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட முத்தையா இராஜேந்திரம் நேற்று (29.07.2014) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் மல்லிகாவின் (மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி) அன்புக் கணவரும், பிரசன்ஜா, டினோஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2014) பிற் பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கனகபுரம்,
கிளிநொச்சி. (41340)(10)

தகவல்:
S.R. மரஅரிவு ஆலைப் பணியாளர்கள்,

## மரண அறிவித்தல்

### திருமதி சிவச்செல்வம்(வள்ளியம்மாள்)நல்லதம்பி



கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் கொம்மாந்தறையை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சிவச்செல்வம் நல்லதம்பி 29.07.2014 செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கம்பர்மலையைச் சேர்ந்த காலஞ்சென்ற விசுவலிங்கம்- இலச்சுமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், மயிலியதனையைச் சேர்ந்த காலஞ் சென்ற சின்னையா- அபிராமி தம்பதியரின் பாசமிகு மருமகளும், நல்லதம்பியின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற தருமராசா மற்றும் சிவராசா தேவராசா, துரைராசா, செல்வராணி, புஸ்பராணி, ஆனந்தராசா, தெய்வேந் திர ராணி, அருந்தவராணி, இராசேந்திரராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், வதனகாந்தி, பூமணி, சந்திரவதனா, தாரணி, திலகநாதன், தவச்செல்வம், சாரு லதா,ஜெயக்குமார், ரகு, கணேசதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், மதனராஜ், மதனரூபி, குகதாஸ், ஜெயப்பிரியா, ஜெயதாஸ்,காலஞ்சென்ற கண்ணதாஸ் மற்றும் கலைநேசன், கலைமேனன், திசாந்தி, செந்தூரி,நிருஷா, நிதுஷன், தமிழ்ச் செல்வன், நிருஷனன்,ரம்மியா, சர்மியா,அனோஜினி, கோகுலன், சரவணன், கஜானன், கம்சாயினி, ஹரிசாயினி, ரதுசாயினி, முகுந்தன், நிரோகினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் றோசனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(31.07.2014) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மயிலியதனை இந்து மயாத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


'ராணி இல்லம்'
கொம்மாந்தறை,வல்வெட்டித்துறை. (40721)(5.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே:077 365 9010

2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து திருத்தி தருகிறோம்.
GUNAA BEST PC Computer Repair
52 Hospital Road Jaffna. 0779086737

வீடு வாடகைக்குண்டு
யாழ்ப்பாணம், விக்ரோறியா வீதியில் அலுவலகப் பாவனைக்கேற்ற வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு:078 818 4204 (50240)(4.3.5.)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



**டேவிட் கே எட்மன் முத்துராஜா**
(தனம் லேணர்ஸ் உரிமையாளர்)

பிறப்பு 24.07.1958 இறப்பு 06.06.2014

நியூ தனம் லேணர்ஸ் ஊழியர்கள்.

## வீட்டில் திருட்டு; இருவர் கைது

வலி.வடக்கு, ஜூலை 30

வீட்டு உரிமையாளர்கள் வேலைக்குச் சென்றதை சாதகமாகப் பயன்படுத்தி பட்டப்பகலில் வீட்டின் பின்புறக் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் சுமார் 25 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட நகைகள், பணம் என்பவற்றைத் திருடிச் சென்ற சம்பவம் ஏழாலை மேற்கில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் இடம்பெற்ற இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் திங்கட்கிழமை மாலை முறையிட்டுள்ளார்.

குறித்த வீட்டு உரிமையாளர்களான கணவன், மனைவி ஆகிய இருவரும் அரச கடமைக்குச் செல்ல பிள்ளைகளும் பாடசாலை சென்றுள்ளார்கள். இதனை நன்கு அவதானித்த திருடர்கள் மிகவும் துணிகரமாக வீட்டினுள் நுழைந்து இந்த திருட்டை மேற்கொண்டுள்ளார்கள்.

சுன்னாகம் பொலிஸாருக்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு ஏழாலை வடக்கைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்களை பொது மக்களிடம் இருந்து பெற்ற தகவலின் அடிப்படையில் பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

குறித்த களவு தொடர்பாக பொலிஸாரால் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருவதுடன் புலன் விசாரணையும் நடைபெற்று வருகின்றது. (வ-86)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08.10.1939 மறைவு 01.08.2003



அமரர் **சின்னத்தம்பி வடிவேலுப்பிள்ளை**
(பங்குதாரர் நியூ சோபிதா நகைமாடம்)
(திதி:30.07.2014)

அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் பதின் ஒன்று ஓடி மறைந்தாலும் ஆறிடுமோ எங்கள் துயர்
இதயத்தை விட்டகலா நினைவுகளுடன் இறைவனை வேண்டுகின்றோம்.
உங்கள் ஆத்மசாந்திக்காய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்மார், பேரப்பிள்ளைகள்.

"திருவேரகம்"
சுதுமலை தெற்கு.
மானிப்பாய்.

நியூ சோபிதா நகைமாடம்,
74/1, (184) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(50344)(12.3.6)

## மரண அறிவித்தல்கள்



### சின்னையா தியாகேஸ்வரன்
(கணக்காளர், டுபாய்)

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கரணவாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தியாகேஸ்வரன் (கணக்காளர், டுபாய்) நேற்று முன்தினம் (28.07.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-முத்தம்மா தம்பதியரின் மருமகனும், வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், தியாகேஸ்வரி, மகாலிங்கம் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்), மகேந்திரன் (ஓய்வுநிலை அதிபர்), கிருஷ்ணலீலா (கனடா), சிவஞானம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவசக்தி (ஆஸ்திரேலியா), விஸ்ணுவேணி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயசூரியன் (சுவிஸ்), சுகன்யா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனும், சித்தாத், நேகா, வத்சன், அக்சயா, அஜந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2014) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளம்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(49717)(10.3.6)

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 076 623 8341

## சமய சந்திதிகளில்

அச்சுவேலி, ஜூலை 30

அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 8ஆம் திகதி சப்பரத்திருவிழாவும், 9ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (க-11)

♦ ♦ ♦

அச்சுவேலி, ஜூலை 30

அச்சுவேலி வளலாய் பெரிய நாகதம்பிரான் கோயில் ஆடிப்பூர விழா இன்று புதன்கிழமை முற் பகல் 11 மணிக்குநடைபெறும் பெரியநாயகி அம்மனுக்கு நன்னீராட்டு, சிறப்புப் பூசை வழிபாடுகளை அடுத்து மகேஸ்வரர் பூசை (அன்னதானம்) நடைபெறும் என்று ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளார். (க-11)

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி



பண்ணாகம், சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி நேற்று(29.07.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கந்தையா கிருஷ்ணமூர்த்தியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவபாக்கியநாதன் மற்றும் அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காண்டீபன் (சுவிஸ்), முகுந்தன் (லண்டன்), ஜானகி, காலஞ்சென்ற காயத்திரி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயலலிதா, கேதாரணி, ஜெகதீசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், தினேஸ், திவ்வியன், திவீசன், காயா, அகல்யா, கேசினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம், சுழிபுரம். (50348) (12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆசைப்பிள்ளை சிற்றம்பலம்
(ஆச்சாரியார்)



சுழிபுரம் கிழக்கு பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை சிற்றம்பலம் 28.07.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சீராளபிள்ளை -சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், பிறேமரஞ்சினி, பிறேமலீலா (நோர்வே), பிறேமதாஸ் (லண்டன்), பிறேமலதா (ஜேர்மனி), பிறேமகீதா, பிறேமதீபா (தாதி, சங்கானை வைத்தியசாலை), பிறேமகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிற்சபேசன், மதிமாறன் (நோர்வே), அரவிந்தன் (ஜேர்மனி), வினோதினி (லண்டன்), சுதாகரன், லஸ்மன் ஆகியோரின் மாமனாரும், தர்மிளா, சிவதர்சன், சிவதர்சினி, பவித்திரா, தனுயா, சாருஜன், மதுஷன், ஹரணி (நோர்வே), கவிதரன், அபிஷன் (லண்டன்), தருண்,ரிஷிபன், அக்ஷயா (ஜேர்மனி), அபினாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை, துரைராசா, சுப்பிரமணியம் மற்றும் மகேஸ்வரி, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

(50345)(5.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே: 077 369 3219

## மரண அறிவித்தல்



### திருமதி வள்ளியம்மை வேலுப்பிள்ளை

புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை வேலுப்பிள்ளை 25.07.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிதம்பரம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு - பாறு தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம், இந்திராதேவி, குலமணிதேவி, தங்கவேல் (லண்டன்), சிவனேஸ்வரன் (டோகா), ஞானதீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விமலராணி, கோபாலரத்தினம், வேலாயுதம், புஸ்பலலிதா (லண்டன்), தயாநிதி, கேதீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், றஜீதா - தீபன், றஜீவ் - துவாரகா, சண்ஜீவ் - தனுசியா, தர்ஷிகா - பிரபாகரன், காலஞ்சென்ற சுஜீவன் மற்றும் பிரதீசன் - கிரிஷா, சஜீவன், மயூரன் - தர்ஷா, அனோஜ், சந்தோஸ், சாருஜன், யுனோஜ், மிதுஷா, கபீஷா, மிர்ஷான், கபில்ராஜ், கபீஷன், சகானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கஸ்வின், கஜோஷ், சைனுஜி, கேனுஜி, கனஷந், தைஸ்னி ஆகியோரின் பாசப் பூட்டியும், காலஞ்சென்ற வர்களான நாகமுத்து, கந்தையா, இலட்சுமி மற்றும் மாணிக்கம், முத்தம்மா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2014) வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (புத்தூர்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கிந்துசிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மணியம் (ராஜபவனம் - புத்தூர்)
சிவம் (ரோஜாவனம் - நீர்வேலி)
ராசன் (லண்டன்)

(இ50439)
(12.3.6)

## தேவை

பிரபல விற்பனை முகவர்
நிலையத்துக்கு
★முகாமையாளர்
★விற்பனைப் பிரதிநிதிகள்
★Computer Typist (Tamil & English)
★சிற்றூழியர்கள் தேவை.

தொடர்பு:
ஸ்ரீ முருகன்
303 கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (சி/15268) (5.6)


# விபத்தில் ஒருவர் காயம்

மட்டக்களப்பு, ஜுலை 30

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயத்திற்கு முன்பாக நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்ற வாகன வித்தில் ஒருவர் படுகாய மடைந்துள்ளார்.

அக்கரைப்பற்றிலிருந்து ஆரையம்பதி நோக்கிச் சென்று கொண்டிருந்த வேன் ஒன்று மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயத்திற்கு முன்பாக வைத்து துவிச் சக்கர வண்டியுடன் வீதியைக் கடந்த ஒருவர் மீது மோதியுள்ளது.

அதில் படுகாயமடைந்த கிராங்குளத்தினைச் சேரந்த மனோகரன் (வயது-41) என்பவர் ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)


## தவறிவிட்டது

500-0274 எனும் இலக்கமுடைய மோட்டார் வாகனப் புத்தகம் இன்சுரன்ஸ் ரக்ஸ் என்பன ஒரு கைப் பையுடன் 21.07.2014 அன்று யாழ்.நகருக்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 0777 299 723 /077 480 9993 (50464) (5.6)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை உபஅதிபர்
திருமதி நிர்மலா-பஞ்சலிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்
நாகம்மா மாணிக்கம்
28.07.2014 இல் இறைபதம்
அடைந்தமையால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
யாழ்.நல்லூர் தெற்கு
ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயக் குடும்பம் (50455) (5.6.3)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## வீடு வாடகைக்கு

அரியாலை கனகரட்ணம் வீதியில் நவீன வசதிகளுடன் 5 Rooms, 2Halls, Varanda, 3நவீன குளியலறையுடனான வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகமாகவோ, வதிவிடமாகவோ உபயோகிக்கலாம். (50442)(5.6.3)
தொடர்பு:076 694 2415/021 222 6272

## தவறிவிட்டது

கந்தையா தனரூபி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (806142722V)யாழ்.நகருக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். திருமதி இ.ஸ்ரீசாந்தினி,
முதலாம் ஒழுங்கை, விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு தொடர்பு:075 22 77 982 (50453)(5.6)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து






பிரான்ஸில் வசிக்கும்
திரு.திருமதி
தர்மசீலன் கிரிதரணி
தம்பதியரின்
செல்வப்புதல்வன்
லித்விகன்
இன்று (30.07.2014) புதன்கிழமை தனது
முதலாவது பிறந்தநாளை பிரான்ஸில்
உள்ள தனது இல்லத்தில் வெகு
விமரிசையாகக் கொண்டாடுகிறார்.
லித்விகன் பல்கலையும் கற்று, நயினை நாகபூசணி அம்மன், கொக்குவில் காட்டுப்புலம் முருகமூர்த்தி பகவான் திருவருள் பெற்று, சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென பெருமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம். (50440)(10.6.3)

வாழ்த்துவோர்:
சண்முகராசா - பாசமுள்ள அம்மப்பா
ராஜமனோகரி - பிரியமுள்ள அம்மம்மா
வைஷ்ணவி - ஆசைச் சித்தி
கமலேஸ்வரி - அன்புப் பாட்டி



S.K.S.
"சிறிவாசம்" கருவேலடி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
021 222 5936

## மரண அறிவித்தல்

### இராசா பூபாலசிங்கம்



யாழ். கொக்குவில் மேற்கு மணியர்பதியைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு வீரபத்திரர் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட இராசா பூபாலசிங்கம் (28.07.2014) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணிதேவி (லில்லி) அவர்களின் அன்புக் கணவரும், யுவராஜ் (றமேஸ்-சுவிஸ்), சுபராஜ் (உமேஸ்-சுவிஸ்), தனராஜ் (தினேஸ்-சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ராஜலட்சுமி, நாகரத்தினம் (பவளம்), சீவரத்தினம், இரத்தினேஸ்வரி (பட்டு), பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகினி, யசோக்குமார், சுபாஜினி, செல்வப்பிரபா ஆகியோரின் அன்பு மாமனாரும், யதுசன், ஜெயந்திரன், சாஜகன், சஞ்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் கோயில் ஒழுங்கை, கல்வியங்காடு. (50451) (7.6.3) தகவல்: குடும்பத்தினர்.



நவாலியூர் அருள்மிகு
கதிரையோடை கண்ணகை அம்மன் தேவஸ்தானம்
ஆடிப்பூரத் திருவிழா சிறப்பு மலர்-2014
நிகழ்ச்சி நிரல்

10ஆம் நாள் 30.07.2014 புதன்கிழமை காலை 9 மணிக்கு விஷேட அபிஷேகமும் நண்பகல் 12 மணிக்கு பூசையும் நடைபெறும். மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று 7.00 மணிக்கு விஷேட தவில் நாதஸ்வரம் முழங்க விஷேட வாண வேடிக்கை நிகழ்வுகளுடன் அம்பாள் மின்சார தீபங்களினால் அலங்கரிக்கப்பட்ட அழகிய முத்துச் சப்பரத்தில் வீதி உலா வருவார். தொடர்ந்து இரவு நிகழ்வுகளாக 9 மணிக்கு விஷேட தவில் நாதஸ்வரக் கச்சேரி நடைபெறும்.

விஷேட ஆன்மீக சொற்பொழிவு-
பிரமச்சாரி ஜாகர்த சைதன்யா சுவாமிகள்

ஈழத்தின் மற்றும் தென்னிந்திய நாதஸ்வர தவில் கலைஞர்கள் வரிசையில்

நாதஸ்வரம்
M.B.பாலகிருஸ்ணன்
R. சிவகுமார்
ஈழநல்லூர் P.S. பாலமுருகன்
K. நாகதீபன்
N. ராஜன்



தவில்
N.R.S. சுதாகரன்
தவில் சுடர் ஒளி - N. பிரசன்னா
N. நந்தகுமார்
P.S. செந்தில்நாதன்
இணுவையூர் B. நர்மதன்
M.S.துளசிபரன்

சிறப்புத் தவில், இவர்களுடன் தென்னிந்தியாவிலிருந்து வருகைதந்த தவில் சக்கரவர்த்தி கலைமாமணி மன்னார்குடி M.R. வாசுதேவன் காஞ்சி காமகோடி ஆஸ்தானவித்துவான் கலைமாமணி கோவிலூர் K.G. கல்யாண சுந்தரம்-
தென்னிலங்கையிலிருந்து தருவிக்கப்பட்ட வாண வேடிக்கை நிகழ்வுகள் நடைபெறும்.
அனைவரும் வருக அம்பிகை அருளைப் பெறுக

சிறிதேவி கருமாரி நகைமாடம்
83/01, கஸ்தூரியார் வீதி, செம்மாந்தெரு, யாழ்ப்பாணம்.
(C/15265)(10.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளியம்மை தர்மலிங்கம்



யாழ். புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் நெடுந்தீவை வதிவிடமாகவும், இல.32, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை தர்மலிங்கம் 27.07.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா- சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பார்வதி, பூரணம் மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன் புச் சகோதரியும், புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கருணாகரன், தவ னேஸ்வரி (முன்னாள் ஆசிரியர்- யாழ். புங்குதீவு, கணேசா மகா வித்தியாலயம்) மற்றும் கனகேஸ்வரி (கனடா-முன்னாள் ஆசிரியர்), கிருபாகரன் (கனடா) ஆகி யோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீபன், சாரதாதேவி மற்றும் தயாபரன் (கனடா), தயாஜினி (கனடா) ஆகியோரின் மாமியும், சுதன்-கஜா (பிரான்ஸ்), கஜானா, பிரசன்னா, டயானா, தர்சன், ஆரதி, ஆரூசன், ஷகீஸ் (கனடா) ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (31.07.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.32, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (50443)(10.6.3)

தகவல்:கிருபாகரன்
(மகன்-கனடா)
077 236 3537



## மரண அறிவித்தல்

### திருமதி நாகரத்தினம் (தேவகி) மகாலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை யா/கனகரத்தினம் ம.ம.வி., யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, க/கண்டி பெண்கள் உயர்தர பாடசாலை, க/சென் சில்வெஸ்டர் கல்லூரி, க/திருத்துவக் கல்லூரி, ஆங்கில விரிவுரையாளர் - பேராதனை பல்கலைக்கழகம்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பேராதனை, கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் மகாலிங்கம் 2014.07.25 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி (ஓய்வுபெற்ற வடபிராந்திய தந்தி தொலைதொடர்பு பொறியியலாளர்), இரத்தினம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்வதுரை (மலேசியன் பென்சனியர்), நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் கலாநிதி மகாலிங்கம் DSc. (ஓய்வு பெற்ற பேராசிரியர்- பேராதனை பல்கலைக்கழக இயந்திரவியல் பொறியியலாளர். பொறியியல் பீடம்) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகராஜா (ஓய்வுபெற்ற கணக்காய்வாளர்) மற்றும் திருமதி நாகேஸ்வரி(ருக்கு) ஜெகநாதன் (முன்னாள் ஆசிரியை-யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற காந்திமதி நாகராஜா மற்றும் திருமதி. மகாலக்சுமி விஸ்வலிங்கம்(UK), காலஞ்சென்ற திருமதி. அருந்தவ நாயகி அருளானந்தம். மற்றும் திருமதி விக்னேஸ்வரி சிவகுரு (அளவெட்டி), வைத்தியகலாநிதி திருமதி. சிவனேஸ்வரி ஸ்ரீரங்கலிங்கம் (UK), செந்தில் நாதன் (பொறியியலாளர்-கனடா), சிவகுமாரன்(பொறியியலாளர்-UK), செல்வக் குமாரன் (பொறியியலாளர்-UK) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவர்.

அன்னாரின் இறுதி கிரியைகள் 2014.07.27 ஞாயிற்றுக்கிழமை கண்டி நுவர மலர்ச்சாலையில் நடைபெற்று நண்பகல் 12:30 மணிக்கு மஹியாவை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மா.சுதர்சன்(மருமகன்) 0777 110383 யாழ்.கலாலயா பயிற்சியகம்.
நா.ஸ்ரீரங்கன்(மருமகன்) 021 222 7824 இல.111, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (C/15366)(10.6)

## தொடர்ச்சிகள்

### காணாமற்

ஆனால்அவர்களிடம்இருந்துஎந்த சாதகமான பதிலும் கிடைக்கவில்லை.

வடக்கு - கிழக்கில் முன்னர் காணாமற்போயினர், கடத்தப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர் எனக் கூறப்பட்ட பலர், பின்னர் பிற இடங்களில் வசிப்பது கண்டறியப்பட்டுள்ளது.

உதாரணத்துக்கு 2009 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார் என்று கூறப்பட்ட, தயாபரராஜா என்பவர், கடந்த மே மாதம் தனுஷ்கோடியில் கைது செய்யப்பட்டுள்ளார்"- என்று அவர் கூறியுள்ளார்.

தமது நாடுகளில் குடியேறிய தமிழர்களின் விவரங்களை கனடா, இந்தியா, சுவிற்ஸர்லாந்து, பிரிட்டன், நோர்வே, ஆஸ்திரேலியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளிடம் இருந்து இலங்கை அரசு கோரியிருந்தது. (ற-5)

### நல்லூர்

யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா.

திருவிழாக்காலத்துக்கான மாற்றுப்பாதைகள் அறிவிக்கப்படும். தினமும் நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை பாதைகள் திறந் திருக்கும். இதேவேளை இரவு நேரங்களில் முழுமையாக வீதிகள் மூடப்பட்டிருக்கும். மாற்றுப் பாதைகள் இருப்பதால் சுமார் ஒரு மாத காலத்துக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-14)

### சர்வதேச

தேர்தலில் பொது வேட்பா ளர் தெரிவு செய்வது போன்ற பிரச்சினைகள் எவ்வாறு தீர்த்து வைக்கப்படப்போகின்றது என்பது எமக்குத் தெரியாது. ஆயினும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எந்த அணியில் இணைந்து தேர்தலை எதிர்கொள்ளும் என்பதை நிதானமாக சிந்தித்து தக்க தருணத்தில் முடிவு செய்யும்.

அடுத்த கட்ட அரசியலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இலங்கையில் எந் தக் கட்சியும் சந்தித்திராத பெரும் சவால்களை சந்திக்கவுள்ளது.

எதிர்வரும் ஆறு மாத காலப் பகுதிக்குள் இலங்கையில் நாடு தழுவிய தேர்தல் நடப்பதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. அரசியலில் ஆறு மாதங்கள் என்பது நீண்ட காலமாகும். அந்தக் காலப் பகுதியில் பல்வேறான விடயங்கள் கட்சிக்குள் நிகழலாம். அத்தனை விடயங்களையும் நிதானமாக ஆராய்ந்து எமது சமூகத்தின் நிம்மதிக்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்க்கமான முடிவை எடுக்கும்.

முஸ்லிம் சமூகத்திற்கெதிராக சமய ரீதியான தீவிரவாதம் காவியுடை தரித்து வேண்டுமென்றே வன்முறைகள் புரிந்த போது அதைத் தடுப்பதற்கு காத்திரமான நடவடிக்கைகளை இந்த ஆட்சியாளர்கள் செய்யவில்லை. அது முஸ்லிம்கள் மாத்திரமன்றி இந்த நாட்டிலுள்ள ஏனைய இனத்தவர்களாலும் நடுநிலைமையில் இருந்து சிந்திக்கும் தரப்பிலிருந்தும் சுட்டிக்காட்டப்பட்டது. எமது சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளை நாம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்துக்கு எடுத்துச் சொன்னோம். இதனால் நாம் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளாக பார்க்கப்பட்டோம்.

ஆனால் அச்சமில்லாமல் ஆட்சியில் இருந்து கொண்டு அந்த சவால்களை சமாளிக்கும் சக்தியும் துணிவும் எமக்கிருக்கின்றது. அமெரிக்க, ஐரோப்பிய, பிரித்தானியத் தூதுவர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரை சந்தித்தால் வேண்டுமென்றே பழி சொல்லப்படுகின்றது. இந்தச் சம்பவத்தால் முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுகின்ற தீவிரமான அரசியல் தலைமைகளால் அரசின் தயவிலோ அல்லது அதன் தயவில்லாமலோ எமக்கெதிராகவும் கட்சிக்கெதிராகவும் பல்வேறான விமர்சனங்கள் எழுந்த வண்ணமுள்ளன.

அடுத்துவரும் ஓரிரு மாதங்களுள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அனைத்து செயற்பாட்டாளர்களையும் ஒன்றிணைத்து தற்கால கள நிலைவரங்களை ஆராய்ந்து கடந்த காலங்களில் ஆட்சியாளர்களால் கட்சிக்கு தரப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டது சம்பந்தமாகவும் கூடவே வைத்துக்கொண்டு வேண்டுமென்றேகுழிபறிக்கும் செயற்பாடுகள் போன்றவற்றை மிகத்தெளிவாக மீளாய்வுசெய்து சமூகத்தின் உள்ளக் கிடக்கைக்கு மாற்ற மில்லாத சரியான முடிவெடுத்து இயங்கவுள்ளது"- என்று அவர் அங்கு உரையாற்றும்போது மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-10)

### திட்டமிட்ட

மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் அதனையே வலியுறுத்தியுள்ளது என்றும் நம்புகின்றேன். மனித உரிமைகள் பணியகம் அதனை நடைமுறைப்படுத்தும்படி வலியுறுத்தியது. எனினும் இலங்கை அதனை நடைமுறைப்படுத்தவில்லை.

இலங்கைக்கு கடந்த ஆண்டு பயணம் மேற்கொண்டிருந்தேன். அங்கு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைச் சந்தித்திருந்தேன். உண்மையில் அவர்கள் எங்களிடம் தமது கருத்துக்களை தெரிவிக்க மிகவும் ஆர்வமாக இருந்தார்கள். அவர்களில் ஒருவர் மதகுரு. அவர் காணாமற் போனோரின் பெயர் பட்டியலை தயார் செய்து வைத்திருந்தார். இலங்கை அரசு இந்த காரியத்தை செய்திருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக அவர்களைத் துன்பத்திற்கு உள்ளாக்கியது.

இதனிடையே, இந்தப் பயணத்தின்போது அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பல குழுக்கள் என்னை சந்தித்தன. அவற்றிலும் ஒரு பாதிரியார் இருந்தார். அவர் தமது கருத்துக்களை தெரிவிக்கும்போது எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. தமிழில் பேசிய அவர் தமக்கு தெரிந்த விடயங்கள் அனைத்தையும் சொல்ல முடியாது என்று குறிப்பிட்டார். அவர் அரசு சார்பிலானவர்.

இந்த விடயம் எனக்கு ஓர் அழுத்தத்தை கொடுத்தது. அவருக்கு சர்வதேச கவனம் பெற்றுத்தர வேண்டும் என்று எனக்குத் தோன்றியது"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

### நிறைவேற்று

பதி முறைமையை இல்லாதொழிப்பதே எமது நோக்கம். அதற்காகத்தான் நாம் பல நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றோம். இந்த நிறைவேற்று அதிகார

நாட்டு மக்களுக்கும் பெரும் பிரச்சினையாக உள்ளது. அரசிலுள்ள அனைத்துக் கட்சிகளும் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை எதிர்க்கின்றன.

நாட்டில் நல்லாட்சி நிலை நாட்டப்பட வேண்டும். ஜனநாயகத்துக்கு அனைவரும் மதிப்பளிக்க வேண்டும். இவை அனைத்துக்கும் இடையூறாக இருப்பது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தான். இதனை இல்லாதொழிக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அதற்காகத் தான் அனைத்துத் தரப்பினருடன் நாம் பேச்சு நடத்தி வரு கின்றோம். அதன் ஒரு கட்ட நடவடிக்கைதான் அண்மையில் இடம்பெற்ற சம்மேளனம். எதிர்க்கட்சி மற்றும் சிவில் சமூகத்தைச் சார்ந்த அனைத்து தலைவர்களையும் ஒரு மேடைக்கு கொண்டு வந்தோம். இதனூடாக பொது வேட்பாளர் ஒருவரைத் தெரிவுசெய்வதற் கான நடவடிக்கையில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். நாம் எந்த நடவடிக்கையை முன்னெடுத்தாலும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதே எமது நோக்கமாகும்.

இதற்காக நாம் பல நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான் நாட்டின் தலைவர். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க அவர்தான் தலைமைதாங்க வேண்டும். இதற்கு அவர் தலைமையேற்பாராயின் பொது வேட்பாளர் ஒருவர் எமக்குத் தேவையில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை அவர் இல்லாதொழிப்பாரென நான் எதிர்பார்க்கின்றேன்."- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-சி)

### ஆசிரிய

ணங்கள் தொடர்பாக இடமாற்றம் கோரும் ஆசிரியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். வைத்திய காரணங்களுக்காக இடமாற்றம் கோருவோர் அரச வைத்திய அதிகாரியின் சான்றிதழும், வேறு காரணங்களுக்காக இடமாற்றம் கோருவோர் அதனை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் இணைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடமாற்ற விண்ணப்பங்கள் யாவும் பாடசாலை அதிபர், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக எதிர்வரும் செப்ரெம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும் என்றும், சகல இடமாற்ற விண்ணப்பத்துடனும் முதல் நியமனக் கடிதப் பிரதியும் சான்றுப்படுத்தக் கூடிய பொருத்தமான ஆவ ணங்களும் இணைக்கப்பட வேண்டும் என்பதுடன், குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படமாட்டாது என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

### ஐ.நா.குழு

"தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஒரு தொகுதி ஆவணங்களை ஐ.நா. மனித உரிமைகள் சபையிடம் ஏற்கனவே

தற் போதும் இது தொடர்பான ஆவணங்களை நாம் சேகரித்து வருகின்றோம். இந்த ஆவணங்கள் ஐ.நா. விசாரணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்" என்றும் அவர் கூறினார்.

ஐ.நா. விசாரணைக்குழு இலங்கை வர அரசு அனுமதி மறுத்துள்ளது. இந்நிலையில், அந்த விசாரணைக் குழு முன்னிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாட்சியமளிக்குமா; எந்த வழியில் கூட்டமைப்பு சாட்சியமளிக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷிடம் நேற்று வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இலங்கையில் நல்லிணக் கம் ஏற்படவேண்டுமெனின் இங்கு இடம்பெற்ற கறைபடிந்த சம்பவங்கள் தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். இந்தக் கடமையை இலங்கை அரசு செய்யவில்லை. இந்நிலையில், ஐ.நா. குழுவின் விசாரணையை இலங்கை அரசு எதிர்கொண்டுள்ளது. நாம் நீதியின் பிரகாரம் நடந்த உண்மைகளை - தமிழ் மக்கள் அனுபவித்த இன்னல்களை ஐ.நா. குழுவிடம் வாய்மொழி மூலம் தெரிவிக்கத் தயாராகவுள்ளோம்" - என்றார்.

இதேவேளை, இலங்கையில் இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் ஆவணப்படங்களை வெளியிட்டு இலங்கைக்கு அனைத்துலக மட்டத்தில் கடும் நெருக்கடிகளை ஏற்படுத்திய சனல் - 4 தொலைக்காட்சி நிறுவனத்தின் ஊடகவியலாளர் கெலும் மெக்ரே மற்றும் போர்க்காலத்தில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான முயற்சிகளுக்கான அனுசரணையாளராகச் செயற்பட்ட எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரும் ஐ.நா. விசாரணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்கத் தயாராகி வருகின்றனர். (ற-சி)

### பௌத்தர்களே

களும் அவதானித்துள்ளன என்றும் அது தெரிவித்துள்ளது. சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான 2013ஆம் ஆண்டு அறிக்கை அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியினால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. இதில் இலங்கை தொடர்பில் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பொது பல சேனா உள்ளிட்ட பௌத்த அடிப்படைவாத அமைப்புகள் சிறுபான்மை மதத்தினருக்கு எதி ராகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றன என்று அறிக்கை சுட்டிக்காட்டி யுள்ளது. இதற்கு இலங்கை அரசு பாதுகாப்பு வழங்கி வருகின்றது எனவும் அது கூறுகின்றது. அத்துடன், பௌத்தர்கள் வசிக்காத வடக்கில் இலங்கை இராணுவத்தி னரால், அதிகளவு பௌத்த விகாரைகள் நிறுவப்பட்டு வரு வதையும் அது குறிப்பாகச் சுட்டிக் காட்டியுள்ளது.

#### அதிகரிக்கும் சிங்களக் குடியேற்றம்

"பெரும்பான்மையின பௌத்தர்களின் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த 27 ஆண்டுகால மோதல் முடிவுக்கு வந்த பின்னர், வடக்கில் தமிழர்களின் பிரதேசத்தில் அரசுப் படையினர் தொடர்ந்தும் பௌத்த வழிபாட்டுஇடங்களை அமைத்து வருகின்றனர். இந்த இடங்கள் பெரும் பாலும் இந்துக்களின் வாழ் விடங்கள் அமைந்துள்ள பகுதியாகும்.

கிறிஸ்தவ, முஸ்லிம்கள் வாழும் பகுதிகளிலும்கூட இவ்வாறு பௌத்த வழிபாட்டு இடங்கள் அமைக்கப்படுகின்றன. முன்னர் விடுதலைப் புலிகள் வசமிருந்த பகுதிகளில் அரச ஆதரவுடன் சிங்களக் குடியேற்றங்கள் இடம் பெறுவதாக தமிழ் அமைப்புகள் குற்றம்சாட்டி வருகின்றன. வடக்கிலுள்ள, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில், கூட பௌத்த வழிபாட்டு தலங்கள் அதிகரித்துள்ளன" என்று அந்த அறிக்கை கூறுகின்றது. இலங்கை அரசமைப்பு மதச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தியுள்ள போதும் இவ்வாறான மீறல்கள் இடம் பெறுகின்றன என்றும் அறிக்கை கூறுகின்றது.

#### அரசு கண்டுகொள்வதில்லை

மத சிறுபான்மையினர் மீதான, பௌத்த தேசியவாத அமைப்புகளின் வன்முறைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு மனித உரிமை அமைப்புகள் விடுத்த கோரிக்கைகளை இலங்கை அரச அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை என அறிக்கை சாடுகின்றது. முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட்ட பௌத்த பிக்குகளைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க இலங்கை அரசு தவறியுள்ளது. பௌத்த பிக்குகள் அரசினால் பாதுகாக்கப்படுகின்றனர் என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மத வழிபாட்டுத்தலங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பாக விவரிக்கும் இந்த அறிக்கை அவற்றுக்கு எதிராக இலங்கை அரசு நடவடிக்க எடுக்கத்தவறியுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் கோடிட்டுக் காட்டியுள்ளது. (முன்னர் வந்த செய்தி 6 ஆம் பக்கத்தில்) (உ-5)

### மதிப்பிட்டதை

ஜனாதிபதியிடம் இதற்கான சிறப்பு அனுமதி பெறப்பட்டது என்ற காரணத்தைக்காட்டி ஆளுநரின் அனுமதியுடன் இந்தக் கொடுப்பனவு செய்யப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. மதிப்பீடு செய்யப்பட்ட அளவிற்கும் மேலாக வீட்டு உரிமையாளர்கள் வாடகை கேட்டால் மதிப்பீட்டுத் திணைக் களத்திற்கு மேன்முறையீடு செய்வதே வழமையான நடைமுறை. ஆனால் இந்த விடயத்தில் அது பின்பற்றப்படவில்லை. வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகம் மற்றும் முதலமைச்சரின் அமைச்சுக்குரிய அலுவலகங்கள் அனைத்தும் சோமசுந்தரம் அவனியூவில் உள்ள தனியார் ஒருவரின் வீட்டிலேயே அமைந்துள்ளன. மூன்று மாடிகளைக் கொண்டது அந்த வீடு. (உ-5)

### முதலமைச்சர்

ரிக்கப்பட்டு, வடக்கு மாகாண அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டு வடக்கு ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஆளுநர் குறித்த நியதிச் சட்டங்கள் தொடர்பில் நிதி ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் ஆலோசனையைக் கேட்டிருந்தார். அவற்றினடிப்படையில் மாகாண நியதிச் சட்டத்தில் உள்ள சில சரத்துக்கள் மத்திய அரசுக்குரிய அதிகாரங்களையும் உள்ளடக்கி உள்ளதாகத் தெரிவித்துள்ளார். அதேநேரத்தில் வடமாகாண முதலமைச்சர் நிதியத்தை உருவாக்குவதற்கான நியதிச் சட்ட வரைவை அவர் நிராகரித்துள்ளார். மாகாண சபை முன்வைத்த முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம் தொடர்பில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. முதலமைச்சர் நிதியம், நிதிகளை நேரடியாக மாகாண சபை பெறத்தக்க வகையிலான சில சரத்துக்களைக் கொண்டிருந்த காரணத்தாலேயே அது நிராகரிக்கப்பட்டதாக ஆளுநர் தரப்பிலிருந்து கூறப்பட்டிருக்கிறது.

வடக்கு மாகாண ஆளுநரினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிதி நியதிச் சட்டம் மற்றும் முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம் என்பன எதிர்வரும் 5ஆம் திகதி இடம்பெறவுள்ள வடக்கு மாகாண சபையின் அமர்வில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. (உ-5)

### செப்ரெம்பர்

திணைக்களம்தெரிவித்துள்ளது. யாழ்ப்பாணம் வரை ரயில் பாதை அமைக்கும் பணிகள் முடிவுக் கட்டத்தை நெருங்குவதை அடுத்து செப்டெம்பர் 15ஆம் திகதி சேவையை ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சார்த்த ரயில் சேவைகள் செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. முன்னதாக ஜூலை மாதத்தில் கொழும்பு - யாழ். சேவையை ஆரம்பிப் பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் உரிய காலத்தில் பணிகள் முழுமை பெறாததால் அது சாத்தியமாகாமல் போனது. தற்போது 80 வீத மான பணிகள் பூரணப்படுத் தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர். எனவே அறிவிக்கப்பட்டபடி செம்டெம்பர் மாதம் 15ஆம் திகதி கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத் துக்கு யாழ் தேவி புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-14)

### நட்டநடு

இரவு ஏழாலையில் இடம் பெற்ற திருட்டில் 25 பவுண் நகைகள் மற்றும் 50 ஆயிரம் ரூபா பணம் என்பன பறிபோயுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கோண்டாவிலில் சம்பவம், வீட்டிலிருந்தவர்களின் நடமாட்டத்தை நன்கு அவதானித்து நீண்ட நாள் நோட்டம் விட்ட பின்பே இடம்பெற்றிருக்கக் கூடும் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். வீட்டிலிருந்த பெண் வெளியே வரும் வரை காத்திருந்த கொள்ளையர்கள், வந்ததும் பாய்ந்து அவர் கழுத்தில் கத்தியை வைத்துள்ளனர். அதன் பின்னர் அவரைப் பணயக் கைதி போன்று நடத்தி வீட்டுக் குள்ளே புகுந்து நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துக்கொண்டு மாயமாகிவிட்டனர். சம்பவம் தொடர்பில் எவரும் உடனடியாகக் கைது செய்யப்படவில்லை.

இதேவேளை, ஏழாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற திருட்டில் 25 பவுண் நகைகள் அபகரிக்கப்பட்டுள்ளன. அரச உத்தியோகத்தர்களான வீட்டவர்கள் இருவரும் வெளியே சென்றிருந்த இடைவெளியைப் பயன்படுத்தி புகுந்த திருடர்கள் நகைகள் மற்றும் பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

சந்தேகத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 2 பேரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (உ-4)

# காஸா மீதான தாக்குதலை நிறுத்துமாறு கோரி கிழக்கில் நேற்று முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டம்




கிழக்கு மாகாணத்தின் பல் வேறு பகுதிகளில் பலஸ்தீனம், காஸா மீதான தாக்குதலை கண்டித்து நேற்று முஸ்லிம் மக்களால் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடியிலும் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை, அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாலமுனை மற்றும் சின்னப்பாலமுனை ஆகிய பிரதேசங்களில் நோன்பு பெருநாள் தொழுகையின் பின்னர் இந்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பாதாகைகளை ஏந்தி உடனடியாகப் போரை நிறுத்தி முஸ்லிம்களுக்கு உதவுங்கள் என்று கோஷம் எழுப்பினர். இதேவேளை, பலஸ்தீனம், காஸாவில்

## அமெ. நுழைய முயன்ற இலங்கையர்கள் கைது



இலங்கையர்கள் உட்பட்ட சட்டவிரோத குடியேறிகள் குழு ஒன்று மெக்சிக்கோவில் இருந்து டெக்ஸாஸ் செல்லும் வழியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளது என்று சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்தவார இறுதியில் இந்தக் குழு அமெரிக்கா மாநில மான டெக்ஸாஸிக்குள் பிரவே சிக்கும் நோக்கில் சென்று கொண்டிருந்தபோது கடந்த 26 ஆம் திகதி கைது செய்யப் பட்டதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

ரியோ கிரான்டே ஊடாகவே இந்தக்குழு டெக்ஸாஸுக்கும் பிரவேசிக்க முற்பட்டுள்ளது.

இலங்கை, பங்களாதேஷ் மற்றும் நேபாளத்தைச் சேர்ந்தவர்கள் இந்தக் குழுவில் அடங்கியுள்ளனர். அவர்கள் அனைவருமே ஆண்களாவர்.

மெக்ஸிக்கோவின் ஊடாக டெக்ஸாஸுக்கு சட்ட விரோதமாக பிரவேசிப்போரில் ஆசிய நாட்டவரே அதிகமாக உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (வ)

## மொழிப் பயன்பாட்டை ஊக்குவிக்க இணையத்தில் மும்மொழி அகராதி

கொழும்பு, ஜூலை 30

இலங்கையில் மும்மொழிப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் ஜேர்மனியின் உதவியுடன் இணையத்தில் மும்மொழி அகராதி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மும்மொழி இணைய அகராதியை www.trilin gualdi ctionary.lk என்ற முகவரியில் அணுகலாம்.

இலங்கையில் மும்மொழிப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக ஜேர்மன் அரசின் உதவியுடன் இலங்கையின் அரசகரும மொழிகள் திணைக்களத்தால் இந்தச் செயற்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த மும்மொழி அகராதியில் 25,000 இற்கும் மேற்பட்ட சொற்கள் சேர்க்கப்பட்டுள்ளதோடு, பயனாளிகளின் வசதிக்காக இலவசமாகத் தரவிறக்கப்படக் கூடிய கணினி மென்பொருள் ஒன்றும் காணப்படுகின்றது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரிவு 9.244, மொழிக் கொள்கையை உரிய விதத்தில் நடைமுறைப்படுத்தவும், சிறிய வயதிலிருந்தே சிறுவர்களுக்கு மும்மொழிக் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) கல்வியை வழங்கவும் பரிந்துரைத்துள்ளது. (வ)




## அகதிகளுக்கு நிதி வழங்கும் திட்டத்தில் புதிய கொள்கை

### இந்திய அகதி முகாம்களில்

சென்னை, ஜூலை 30

இந்திய அகதி முகாம்களில் வசிக்கும் இலங்கை அகதிகளுக்கு வழங்கப்படும் மாதாந்த நிதிக் கொடுப்பனவு அட்டை யில் கை விரல் அடையாளம் பொறிக்கப்பட்டு அட்டைகள் வழங்கப் படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வருவாய்த்துறை அதிகாரிகளின் கோரிக்கைக்கு இணங்க இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதனால் ஆள் மாறாட்ட மோசடிகளைத் தவிர்க்க முடியும் என்று வருவாய்த்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தியன் வங்கி அதிகாரி குழு, முகாம்களுக்குச் சென்று ஒவ்வொருவரின் விரல் அடையாளங்களைப் பெற்று புதிய கொடுப்பனவு அட்டைகளை வழங்கவுள்ளது.



இந்தத் திட்டத்தின் மூலம் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தனித்தனியாகவும், அதற்கு கீழ் பட்டவர்களுக்கு பெற்றோருடனும் இணைத்தும் இந்த அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

செப்ரெம்பரில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த நடவடிக்கை ஒக்ரோபர் மாதத்தில் அனைத்து முகாம்களிலும் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மாதத்தின் முதலாவது மற்றும் மூன்றாவது வாரங்களில் பதிவு மற்றும் பணக் கொடுப்பனவு அட்டைகளை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு உறுதிப்படுத்தத் தவறுபவர்களது அட்டைகள் நிறுத்தப்படும் என்றும் வருவாய்த் துறையினர் அறிவித்துள்ளனர். (வ)

## கண் கிளினிக் இன்று நடைபெறாது

தென்மராட்சி, ஜூலை 30

சாவகச்சேரி மருத்துவமனையில் இன்று புதன்கிழமை நடைபெறவிருந்த கண் சிகிச்சை கிளினிக் தவிர்க்க முடியாத காரணங்களால் நடைபெறமாட்டாது என்றும், வழமைபோல் அடுத்த புதன்கிழமை கண் கிளினிக் நடைபெறும் என்றும் மருத்துவமனை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ-9)

# பாப்பாண்டவரின் இலங்கை பயண திகதிளை வெளியிட்டது வத்திக்கான்



வத்திக்கான், ஜூலை 30
பாப்பாண்டவர் பிரான்சிஸின் இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸிற்கான பயணம் எதிர்வரும் ஜனவரி மாதம் 12 முதல் 19 ஆம் திகதி வரையில் இடம்பெறும் என்று வத்திக்கான் அறிவித்துள்ளது.

பாப்பாண்டவரின் இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸிற்கான பயணம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்போது அவர், பிலிப்பைன்ஸில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது வத்திக்கான் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாப்பாண்டவர் இலங்கையில் 12ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை பயணத்தில் ஈடுபடுவார் எனவும் பின்னர் பிலிப்பைன்ஸ் நோக்கிப் பயணிப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# பொலிஸாரால் கைப்பற்றப்படும் போதைப் பொருள்கள் எங்கே?

## கேள்வி எழுப்புகின்றார் அஜித் பெரேரா எம்.பி

கொழும்பு, ஜூலை 30
பொலிஸாரால் கைப்பற்றப்படும் போதைப் பொருள்கள் மீண்டும் சந்தைக்கு சொல்கின்றனவா என்று கேள்வியெழுப்பியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா.

அண்மைக்காலமாக இலங்கையில் பெருமளவில் போதைப் பொருள்கள் பிடிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு பிடிக்கப்படும் போதைப் பொருள்களுக்கு என்ன நடக்கின்றது என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மீட்கப்பட்ட போதைப்பொருள்கள் கணக்காய்வுக்கு உட்படுத்த வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளதுடன், அண்மையில் மீட்கப்பட்ட ஹெரோயின் போதைப் பொருள்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளன என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

மீட்கப்படும் ஹெரோயின் போதைப் பொருள்கள் உரிய எடையுடன் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படுவதில்லை என்று குற்றச்சாட்டியுள்ள அவர் போதைப் பொருள் மீட்பு தொடர்பில் தெளிவானதும் வெளிப்படையானதுமான விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸார் போதைப் பொருள்களை கைப்பற்றி வருகின்றனர். ஆனால் அவை மீளவும் போதைப்பொருள் வர்த்தகர்களிடமேசென்றடைகின்றன என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (ற)

# ஹெரோயின் மீட்பு: இருவர் கைது

கொழும்பு, ஜூலை 30
ஹெரோயின் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய கடற்படை வீரர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.


இவருடன் கொழும்பு நட்சத்திர ஹோட்டல் ஒன்றின் முகாமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளார். ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்ததாக குறித்த இருவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதுருவ பிரதேசத்தில் வைத்து குறித்த இருவரையும் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 1675 மில்லி கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட கடற்படை வீரர் திருகோண மலை பிரதேச முகாமொன்றில் கடமையாற்றுகின்றார் என்று கூறப்படுகின்றது. மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# இந்திய மீனவர்கள் 51 பேர் கைது



கைது செய்ய[illegible]வர்களில் சிலர்

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)* நாட்டுப் படகுகளும் கடற்றொழில் நீரியல்வள உதவிப் பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தியிடம் நேற்றுக்காலை கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டன. அத்துடன் படகுகளில் இருந்த மீன்பிடி வலைகளும், உபகரணங்களும் ஒப்படைக்கப்பட்டன. அதேவேளை, இலங்கைக் கடற்படையினரால் ஏற்க னவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்குமாறு கோரி இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் காலவரையறையற்ற பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். (ற-14,5,109)

**ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல்**

# சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் கண்டனம்

கொழும்பு, ஜூலை 30
சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளர் சுனில் அபயசேகரவிற்கு விடுக் கப்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் குறித்து கடும் கண்டனம் வெளியிட்டுள்ள சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம், இது குறித்து அரசை உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் பத்திரிகையாளர்களை குறிப்பாக தமிழ் பத்திரிகையாளர்களை துன்புறுத்துவதை கைவிடுமாறும் கோரியுள்ளது.

"இலங்கையில் எந்த பத்திரிகை யாளரின் உயிருக்குமான அச்சுறுத்தலை நாங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக கருதுகின்றோம்- பத்திரிகையாளரின் உயிர்களுக்கு பாரிய ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய சட்டத்தின் பிடியிலிருந்து விதிவிலக்களித்தல் குறித்து நாங்கள் கடும் கண்டனத்தை முன்வைக்கின்றோம்.

உலகம் பல காரணங்களுக்காக இலங்கையை உற்று நோக்கிய வண்ணமுள்ளது. அச்சுறுத்தல்களையும் மிரட்டல்களையும் சகித்துக்கொள்ள முடியாது.

சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளர் சுனில் ஜெயசேகரவிற்கு விடுக்கப்பட்டுள்ள மரண அச்சுறுத்தல் குறித்தும் நாங்கள் ஆழ்ந்தகவலை கொண்டுள்ளோம்.

இலங்கை பத்திரிகையாளர்கள் எதிர்நோக்குகின்ற பாதுகாப்பின்மையை கருத்தில் கொள்ளும் போது இந்த அச்சுறுத் தல்களை அலட்சியம் செய்ய முடியாது" என்று மேற்படி அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# பாக். உளவுப்பிரிவை நெறிப்படுத்தியவரை 2012 முதல் கண்காணித்ததாம் இந்தியா

## 'டைம்ஸ் ஒவ் இந்தியா' நாளிதழ் கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 30
கொழும்பிலிருந்து பாகிஸ்தான் உளவுப்பிரிவின் நடவடிக்கைகளை நெறிப்படுத்திவந்த அந்த நாட்டு இராஜதந்திரி அமீர் சுபைர் சித்தீக்கின் நடவடிக்கைகளை இந்தியா 2012ஆம் ஆண்டு முதல் கண்காணித்து வந்தது என்று செய்தி வெளியாகியுள்ளது.

இது குறித்து டைம்ஸ் ஒவ் இந்தியா மேலும் தெரிவித்துள்ளதாவது.

2012ஆம் ஆண்டு தமீம் அன்சாரி என்ற ஐ.எஸ் .ஐ உளவாளியை கைதுசெய்த வேளையே இந்த இராஜதந்திரி குறித்து தகவல்கள் தமிழ்நாடு பொலிஸாருக்கு தெரியவநதுள்ளது.

தஞ்சாவூரைச் சேர்ந்த தமீம் அன் சாரியை இலங்கை முஸ்லிமான சாஜி என்பவரே இராஜ தந்திரி அமீர் சுபைர் சித்தீக்கிற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

நீண்ட காலமாக இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த அமீர் சுபைர் சித்தீக், தமீம் அன்சாரிக்கு சம்பத்வங்கியின் கடனட்டை ஒன்றைவழங்கியுள்ளார்.

தமீம் அன்சாரியை இந்திய புலனாய்வு பிரிவினர், திருச்சி விமான நிலையத்திற்கு அவர் சென்று கொண்டிருக்கையில் 2012ஆம் ஆண்டு கைது செய்திருந்தனர். அவரிடமிருந்து தென்னிந்தியாவின் பாதுகாப்பு நிலைகள் குறித்த விவரங்கள் அடங்கிய இலத்திரனியல் ஆவணத்தையும், குறிப்பிட்ட கடனட்டையையும் மீட்டனர்.

இந்த விவகாரம் வெளியுலகிற்கு தெரியவந்ததை தொடர்ந்து சுபைர் சித்தீக் 2012ஆம் ஆண்டு பாகிஸ்தான் அழைக்கப்பட்டிருந்தார் எனினும் மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்பட்டார், மலேசிய அதிகாரிகள் கொடுத்ததகவல்களை தொடர்ந்து சென்னையிலுள்ள இரு துணைத்தூதரகங்கள் மீது மேற்கொள்ளப்படவிருந்த தாக்குதல்கள் முறியடிக்கப்பட்ட வேளை மீண்டும் சித்தீக்கின் செயற்பாடுகள் அம்பலமாகின.

இந்த வருடம் ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்ட இலங்கை முஸ்லீமான ஹுசைன், சுபைர் சித்தீக்கை கடந்த 18 மாதங்களில் 15 தடவைகளுக்கு மேல் சந்தித்ததாக தெரிவித்துள்ளார். சகல சந்திப்புகளும் பாகிஸ்தான் தூதரகத்தில் மதிய வேளையில் இடம்பெற்றுள்ளன. ஹுசைன் சென்னையை சேர்ந்த சில இளைஞர்களை தன்னுடைய நடவடிக்கையில் இணைத்துக்கொள்ள முயன்றுள்ளார் 'என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-சி)

# மஹிந்தவால் மட்டுமே இலங்கையை ஆள முடியும்

## அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன

கொழும்பு, ஜூலை 30
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தவிர வேறு யாராலும் இந்த நாட்டை ஆட்சி செய்ய முடியாது என்று துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன தெரிவித்துள் ளார்.

நாட்டில் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை உறுதுணையாக அமைந்தது.

நாடாளுமன்றில் உள்ளவர்கள் கால்களில் இழுத்துபயணத்தை தடுக்க கூடியவர்கள். அவ்வாறானவர்களைக் கொண்டு பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டிருக்க முடியாது. ஜனாதிபதி மஹிந்தவே இந்த நாட்டை சரியான பாதையில் வழிநடத்தி வருகின்றார் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

Mega Sale
ARPICO
ஆடி தள்ளுபடி
என்றும் எங்கும் கிடைக்காத
அமோக விலை குறைப்பு
மாங்களா காட்சியறை
536, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8367 - 021 222 8368 0777 286 069


SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
நேரடியான உரையாடற்பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் 50000 இற்கும் அதிகமான சொற்களுடன் சுயமாக ஆங்கிலம்பேச பயிற்றுவிக்கும் "சாம்சனின்" புதிய நேரடி SPOKEN ENGLISH பயிற்சிநெறி.
அரச, தனியார் ஊழியர்கள், பல்கலை ,உயர்கல்வி மாணவர்கள் இளைஞர், யுவதிகள்,வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
புதிய பயிற்சிநெறி ஆரம்பம் 02.08.2014 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
பயிற்சியில் சுயமாகவசனம் உருவாக்கல்,பிரயோகங்கள்,50000சொற்கள் என்பன நேரடி உரையாடற் பயிற்சியின் மூலம் சாம்சனினால் கற்பிக்கப்படும்
பயிற்சியில் இணைய அடிப்படை ஆங்கில அறிவு அவசியமில்லை.
SAAMSON LANGUAGE SCHOOL
379, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567
021 320 3313

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மணிகளுக்குச் சிறகுகள் உண்டு. அவை காலத்தை ஏற்படுத்தியவரிடம் சென்று, நாம் அவற்றை எப்படி உபயோகித்தோம் என்பதைத் தெரிவிக்கும். - மில்.

புதன் பொய்கை A

உதயன் 30 ஜூலை 2014 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு



# உறவுகள்

ராஜராஜன்

உறவுகள் என்று கூறும்போது மனதில் இனம் புரியாததொரு சிலிர்ப்பு எம்மிடையே தோன்றுகின்றது. வெறும் சதைத் துண்டங்களால் ஆன எமது உடல்களை உணர்வுரீதியாகவும் இணைப்பவை இந்த உறவுகள்தான். அன்றலர்ந்த மலராக இந்தப் பூவுலகைத் தரிசிக்கும் குழந்தைக்கு அதன் தாயை அறிமுகம் செய்துவைக்கும் சம்பிரதாயம் ஒருபோதுமே நிகழ்ந்ததில்லை. தாயின் கருவறையில் இருக்கும்போது தனது தாயை இன்னாரென அந்தக் குழந்தை புரிந்துகொள்கின்றது. ஏனைய உறவுகளைத் தனது அன்னையிடமிருந்து அந்த மழலை தெரிந்து கொள்கின்றது. காலப்போக்கில் எண்ணில்லாத உறவுகளால் அது சூழப்படுகின்றது. விரிவடைந்த வாழ்க்கை வட்டத்தினுள் தனது வாழ்வையும் அமைத்துக் கொள்கின்றது.

'தம்பி உடையான் படைக்கு அஞ்சான்' என்று கூறுவார்கள். இது கூட தம்பி என்னும் உறவு தருகின்ற உதவியின் வெளிப்பாட்டையே காட்டுகின்றது. ஆனால் ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அன்னைக்கும், தந்தைக்கும் கிடைக்கும் மதிப்பும், கௌரவமும் எப்போதுமே உயர்ந்த நிலையில் வைத்துத்தான் போற்றப்படுகின்றன. இதனால்தான் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற கூற்று உருவானது. எம்மை இந்த உலகில் தவழவிட்ட தெய்வங்கள் எமது அன்னையும், தந்தையும்தான்.

முன்னரெல்லாம் உறவுகளுக்கிடையிலான பிணைப்புக்கள் மிகவும் நெருக்கமாகக் காணப்பட்டன. இதற்கு அன்றிருந்த கூட்டுக் குடும்ப அடிப்படையிலான வாழ்க்கைமுறை பெரிதும் உதவியது. ஒரே காணிக்குள் வீடுகளை அமைத்து நெருங்கிய உறவுகள் வாழ்ந்த காட்சி இன்னமும் மனக் கண் களில் தெரிகின்றது. எதிரி மீதான அச்சஉணர்வு அப்போது இருந்ததில்லை. சிறியதொரு பாதிப்பு ஏற்படும்போதுகூட உறவுகள் எல்லாம் ஒன்று திரண்டு அதற்கு எதிராகக் கிளர்ந்து எழுந்து போராடிய நிலையே அன்று காணப்பட்டது. உணவுகளைக் கொடுத்துப் பரிமாறுவதும், நோய் மற்றும் துன்பங்கள் ஏற்படும்போது உடனிருந்து உதவுவதும் அன்றைய உறவுகளின் சிறப்பை எடுத்துக் காட்டியது. அங்கு சுயநலம் இருக்காது. உதவிகள் வழங்கப் பின்னடிக்கும் கபடத்தனம் இருக்காது. அவர்கள் எம்மவர்கள். எமது ஒரே இரத்தம். அவர்களுக்கு ஏற்படும் துயரங்கள் எமக்கு ஏற்படுவது போன்றவைதான். அதிலிருந்து நாம் இம்மியளவும் விலகியிருக்க முடியாது. இவ்வாறான சிந்தனைகள்தான் அன்று வாழ்ந்த நாகரிக வளர்ச்சி குன்றிய மனிதர்களிடத்தில் காணப்பட்டன. அவர்களது மனதில் என்றுமே வேற்றுமை உணர்வு தோன்றியதில்லை.

மனிதன் காட்டுவாசியாக வாழ்ந்தபோது கொடிய மிருகங்களின் மத்தியில் அவனது வாழ்வு கரைந்து கொண்டிருந்தது. கொடிய புலியொன்று தனது உறவினர்களில் எவரையாவது தாக்கிக் கொல்வதற்கு முயன்றால் அன்றைய மனிதர்கள் பயம் காரணமாக விலகியிருந்ததில்லை. தமது உயிர் போனாலும் பரவாயில்லை. தமது உறவுகளைக் காப்போம் என்ற மன உணர்வுடன் இறுதிவரை போராடினார்கள். இது தமது உறவுகளின் மீது அவர்கள் கொண்டிருந்த மாறாத பாசத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஆனால் மனிதன் நாகரிகமடைய ஆரம்பித்ததும் இவையெல்லாம் கனவுகளாக மாற ஆரம்பித்துவிட்டன. கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை ஒழிந்து, தனியான வாழ்வு வாழவும் மனிதன் தலைப்பட்டுவிட்டான். இதனால் தனியான எண்ணங்களும் அவனது மனதில் குடிகொள்ள ஆரம்பித்துவிட்டன. தந்தையின் சொத்துக்களுக்கு சகோதரர்கள் சண்டை பிடிப்பதுவும், நீதிமன்றங்களில் இதற்கென பல வருடங்களைச் செலவழிப்பதோடு அதிகளவு பணத்தைச் செலவிடுவதும் இன்று வழக்கமான நிகழ்வுகளாகிவிட்டன. அதுமட்டுமல்லாது சகோதரங்களையே ஒருவரை ஒருவர் அந்நியர்களாக மதிக்கும் இழிவான பண்பும் உருவாகிவிட்டது.

ஆனால் இன்றைய மனிதர்கள் நடிப்பதற்கு மட்டும் நிறையவே கற்றுக் கொண்டுவிட்டார்கள். ஒரு சிலர் தமது உறவினர்களைக் கண்டுவிட்டால் முகமெல்லாம் மலர்ந்து குசலம் விசாரிக்க ஆரம்பித்து விடுவார்கள். அவர்களின் துன்பத்தைக் கேட்டுத் தாம் துயரத்தில் ஆழ்ந்து விட்டதைப் போன்று முகபாவத்தை வைத்துக் கொண்டு நடிக்க ஆரம்பித்து விடுவார்கள். எதிரே நிற்பவர் தமது துன்பங்களை அடுக்க ஆரம்பித்துவிட்டால் அதை இடைமறித்து தாம் அதனிலும் பார்க்க துன்பப்படுவது போன்ற தோற்றத்தை உருவாக்க ஆரம்பித்து விடுவார்கள். எங்கே உதவி ஏதாவது கேட்டுவிடுவார்களோ என்ற அச்சம் ஏற்பட்டதும் அந்த இடத்தைவிட்டு நழுவத் தொடங்கி விடுவார்கள். புலியுடன் சண்டை புரிந்தவர்கள் எங்கே? இவர்கள் எங்கே? இதுதான் இன்றைய உறவுகளின் லட்சணம்.

ஆனால் இந்த விடயத்தில் ஒட்டுமொத்தமாக அனைவரை யும் குற்றஞ்சாட்டுவது நியாயமானதல்ல. ஒருசிலர் இன்னமும் உறவுகளைப் பேணி வருவதைக் காண முடிகின்றது. ஆனால் பெரும்பாலானவர்களின் நிலைதான் வேதனையளிக்கின்றது. ஆனால் மனிதர்கள் மாறிவிட்டாலும் மிருகங்கள் இன்னமும் மாறவில்லை. தாயை இழந்த குட்டி யானையொன்று கண்ணீர் சிந்தியவாறு தனது தாய் யானையின் உடலின் அருகில் அழுதுபுரண்ட காட்சி கல் நெஞ்சு படைத்தவர்களையும் உலுக்கி விட்டது. இதேபோன்றதுதான் குட்டியானையொன்றை இழந்த தாய் யானையின் நிலையும். இறந்த தனது குட்டியின் உடலைத் தூக்கியவாறு அங்குமிங்கும் ஓடித்திரிந்த தாய்க் குரங்கின் நிலைகண்டு கலங்கியவர்கள் ஏராளம். ஒருதாய்க்கும் பிள்ளைக்குமிடையேயான உறவை இது பிரதிபலித்தாலும் அங்கு காணப்பட்ட போலித் தன்மை இல்லாத பாசம் என்றுமே உயர்வானது.

எவர் என்னதான் கூறினாலும் மனிதர்களிடையேயான உறவு என்ற அந்தப் பிணைப்பு இன்று வலுவிழந்த நிலையில் காணப்படுவதை நாம் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். வயது முதிர்ந்த தமது பெற்றோரைக் கூட சுமையாக எண்ணும் பிள்ளைகள் இன்று அதிகமாகக் காணப்படுகின்றனர். இவர்களது எண்ணங்களை நிறைவேற்றுவது போன்று முதியோர் இல்லங்கள் காணப்படுகின்றன. தமது பெற்றோரையே சுமையாக எண்ணும் பிள்ளைகள் ஏனையோரைக் கருத்தில் கொள்வார்களா? என்பது கேள்விக்குறிதான். நாம் வெறுமனே உறவு முறை களைக் கூறி உறவுகளை நியாயப்படுத்துவதில் பயனொன்றும் கிடைக்காது. இதை வெறும் பெயரளவிலான உறவு என்றே அழைக்க வேண்டும். எமது துன்பத்தில் துடிக்காத ஒருவன் எம்மைப் பொறுத்தளவில் எம்முடன் உறவு கொள்ளாது இருப்பதே மேலானது.

ஒரு சிலர் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக மட்டுமே தமது உறவுகளை நாட முயல்வார்கள். தமக்குப் பெரும் துன்பம் ஏற்பட்டதாகக் கூறி மற்றவர்களின் அனுதாபத்தைச் சம்பாதிப்பதற்கும் இத்தகையவர்கள் முயற்சி செய்வார்கள்.

இவர்களது பாசாங்குத் தனத்துக்கு எடுபடுபவர்களிடமிருந்து தாம் நினைத்த காரியத்தை இவர்கள் சாதித்தும் விடுவார்கள். ஆனால் மற்றவர்களைப் பற்றி இவர்கள் எண்ணிப் பார்ப்பதுமில்லை, உதவ வேண்டுமென்று துடிப்பதுமில்லை. ஒரு சிலர் தமது உறவினர்களின் பலவீனத்தைப் புரிந்து கொண்டு தாம் இலாபத்தை அடைவதற்கு முயற்சிப்பார்கள். உதவவேண்டுமென்ற நினைப்புச் சிறிதளவும் இல்லாத இவர்கள் சுயநலத்தின் மொத்த உருவமாகக் காணப்படுவார்கள். எனவே, இத்தகைய போலிகளை இனம் கண்டு அவற்றையெல்லாம். ஒதுக்கி வைப்பதே சிறந்தது. வெறுமனே உறவுகளின் பெயரைக் கூறுவதால் எதுவுமே ஆகப்போவதில்லை. ஆகவே தான் வேறு மனிதர்களை இனம் காண்பது போன்று உறவுகளையும் இனம்காண வேண்டும்.

இந்தப் பரந்த உலகிலே வாழும் நாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால் அனைவருமே ஏதோ ஒரு வகையில் உறவினர்களாக இருப்பது தெரியவரும்.

ஆனால் அதனை இனம் காண்பதற்கான திறமைதான் எம்மிடமில்லை. அதற்கென நிறையவே நேரத்தையும் செலவிட வேண்டி நேரிடும்.

இந்த நிலையில் பயனுள்ள உறவுகள் தொடர்பாகவே நாம் சிந்திப்போம். ஏனையவற்றை ஒதுக்கி விடுவோம்.




'சந்திராயன்', 'மாங்கள்யான்'... வரிசையில் இந்திய விண்வெளி ஆய்வுக்கழகத்தின் பெயரிடப்படாத, தீவிரமாக வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அடுத்த திட்டத்தின் பெயர், 'மான் ஒன் மிஷன்'.

விண்வெளிக்கு ஒரு இந்தியனை அனுப்பி சில நாள்கள் மிதக்கவைத்து, மீண்டும் கீழே இறக்குவதுதான் மான் ஒன் மிஷன் திட்டம். ஒரு சுற்றுலாசென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்புவது மாதிரி. என்ன. அது விண்வெளிச் சுற்றுலா என்பதால், அதிகமான தொழில்நுட்ப அக்கப்போர், உலக நாடுகளின் பனிப்போர் எல்லாவற்றையும் ஈர்த்துக் கவனம் பெறுகிறது; கோடிகளில் செலவு பிடிக்கிறது!

சரி... முதலில், எதற்கு மனிதனை விண்வெளிக்கு அனுப்ப வேண்டும்?

நாடு, நாடோடி... என எல்லோருக்கும் இடம் பிடிக்கும் ஆசை என்பது ஆழ்மனதில் ஊறிய விடயம். துணையின் மனதில் முதல் இடம் பிடிப்பதில் இருந்து, 'சென்னைக்கு மிக அருகில்' திண்டிவனம் தாண்டி இடம் பிடிப்பதாகட்டும், அமெரிக்கா போல அடுத்த நாட்டின் அதிகாரத்தை வளைத்துப் பிடிப்பதாகட்டும். உலக வரலாற்றில் இடம்பிடிப்பது தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கும் ஒரு நிகழ்வு.

இருக்கும் உலகத்தைக் குப்பைமேடு ஆக்கிவிட்டோம்; கடலைக் கழிவுநீர்த்தொட்டி ஆக்கிவிட்



டோம். எரிபொருள், குடிதண்ணீர் இரண்டும் அதிவேகமாகத் தீர்ந்துகொண்டிருக்கின்றன. ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்து விரிசல் பெரிதாகிக்கொண்டே இருக்கிறது.


இன்னும் சில நூறு வருடங்கள் தான் இந்தப் பூமி தாக்குப் பிடிக்கலாம். அதற்குப் பிறகு பூமி பயன்படாமலே போய்விட்டால், மனிதனுக்கு வேறு கிரகங்களில் குடியேற வாய்ப்புக் கிடைக்குமா? இப்படியோசித்த வல்லரசுகள் அண்ணாந்து பார்த்ததில் கிடைத்ததுதான் விண்வெளி.

'செவ்வாயில் ஒருகாலத்தில் நீர் இருந்திருக்கலாம்' என்ற ஒரு வரி ஆய்வு முடிவுகள் அமெரிக்காவுக்கு ஆசையைத் தூண்டியது. உலக நாடுகளிடையே விண்வெளிப் போட்டியைத் தூண்டியது.

சோஜர்னர், கியூரியாசிட்டி விண்கலங்களை அமெரிக்கா அனுப்ப வேறு சில நாடுகள் செயற்கைக் கோள்களை அனுப்பிவைத்தன. அந்த வரிசையில் இந்தியா அனுப்பிய 'குறைந்த செலவு கர்ச்சீஃப்'தான் மங்கள்யான். இந்த விண்வெளிப் போட்டியின் அடுத்த கட்டத் திட்டமே 'மான் ஒன் மிஷன்'!

ஒரு செயற்கைக்கோளை ராக்கெட்டில் வைத்து ஏவி புவிவட்டப் பாதையில் நிலை நிறுத்துவது கூட எளிது. ஆனால் அதை மீண்டும் பூமிக்குக் கொண்டுவருவது... ஏவு வதைவிட செலவு எகிறும், தனித்துவம் நிறைந்த கடினமான சவால். அதனாலேயே விண்வெளியில் செயற்கைக்கோள் பழுதடைந்தால், அதை அப்படியே கைவிட்டு விடுவார்கள்.

அதுவாகவே ஒருநாள் பூமியின் வளிமண்டலத்துக்குள் நுழைந்து எரிந்து விழுந்து விடும். இது அப்படி அல்ல. ஒரு மனிதனை ராக்கெட்டில் அனுப்பி சில நாள்கள் விண்வெளியில் சுற்றவைத்து அவரை மீண்டும் பூமிக்குக் கொண்டுவர வேண்டும்.



## மனிதனை எப்படி அனுப்புவார்கள்?

செயற்கைக்கோளை அனுப்ப, பி.எஸ்.எல்.வி. வகையறா ராக்கெட்கள் போதும். ஆனால், மனிதன் பயணம் செய்யும் கேப்சூலை அனுப்ப ஜி.எஸ்.எல்.வி. வகையறா ராக்கெட்கள் வேண்டும். பி.எஸ்.எல்.வி. அதிகபட்சமாக இரண்டு தொன் எடையைத் தூக்கிக்கொண்டு பறக்கும் என்றால், ஜி.எஸ்.எல்.வி. ஆறு தொன் வரை தூக்கிக்கொண்டு பறக்கும். மான் ஒன் மிஷனின் முதல் தேவை.

மனிதன் உள்ளே அமரும் அளவுக்கு, மிதந்துகொண்டே தூங்கும் அளவுக்கு ஒரு கேப்சூல் வேண்டும். அதற்குள்ளே ரேடியோ தகவல் பரிமாற்ற மீற்றர்கள், பதப்படுத்தப்பட்ட உணவு, சிறுநீரைக் குடி தண்ணீராக மாற்றும் உபகரணங்கள், வெப்பநிலையைக் கட்டுப்படுத்தும் கருவிகள், ஒட்சிசன் அளவைப் பராமரிக்கும் கருவிகள் எல்லாம் வேண்டும்.

இவை எல்லாம் வைத்து கேப்சூல் செய்தால், அது மிக அதிகமான எடையுடன் இருக்கும். இவ்வளவு எடை மிகுந்த கேப்சூலைத் தூக்கிக்கொண்டு குறைந்தது 160 கிலோமீற்றர் உயரம் பறக்க மெகா சைஸில் இருக்கும் ஜி.எஸ்.எல்.வி. வகை ராக்கெட்கள் தான் சிறந்தது.

ஆனால், அவ்வளவு எடைகொண்ட ராக்கெட்களை விண்ணில் செலுத்த கிரையோஜெனிக் என்ஜின்கள் தேவை. அந்த வகை என்ஜின்கள் தயாரிப்பில், இந்தியவிஞ்ஞானிகள் இப்போதுதான் ஆரம்பக் கட்டங்களைத் தாண்டி வருகிறார்கள்.

## எப்படித் திரும்பக் கொண்டுவருவார்கள்?

ராக்கெட்டில் இருந்து பிரிந்து செல்லும் கேப்சூலை, விண் வெளியில் சில நாள்கள் மிதக்கவிடுவார்கள். பின்னர் குறிப்பிட்ட நாள் வந்ததும், கேப்சூலில் இருக்கும் எரிபொருள் மூலம் உந்துதல் உண்டாக்கி கேப்சூலை அதிவேகமாக பூமியை நோக்கிச் செலுத்துவார் கள். விநாடிக்கு எட்டு கி.மீ. வேகத்தில் கேப்சூல் பூமியை நோக்கிப் பயணித்து, வளிமண்டலத்தில் நுழையும்போது காற்றில் உரசி கேப்சூலின் வெளிப்புறம் முழுவதும் தீப்பிடித்துக் கொள்ளும்.

இந்தத் தீயும் வெப்பமும் உள்ளே பரவாமல் இருக்க, வெப்பத் தடுப்பு மற்றும் தீ தடுப்பு தகடுகள் பதிக்கப்பட்டிருக்கும்.

தீ அணைந்த பின், ஒரு பரசூட் விரியும். அப்போது கேப்சூலின் வேகம் விநாடிக்கு 101 மீற்றராகக் குறைந்துவிடும். இன்னும் சிறிது தூரம் கடந்த பின், இன்னொரு பரசூட் விரியும். அப்போது கேப்சூலின் வேகம் விநாடிக்கு 47 மீற்றராகச் சரியும். இந்த வேகத்தில் கடலில் விழும் கேப்சூல், அதன் ஆழத்துக்குச் சென்றுவிடும்.

அதனால், கடலை நெருங்கியதும் கேப்சூலைச் சுற்றி பெரிய பலூன் படாரென விரிந்து, கேப்சூல் கடலில் மூழ்காமல் மிதக்கவைக்கும். கடலில் கேப்சூல் எங்கு இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க, அதன் உச்சியில் அடர் செம்மஞ்சள் நிறத்தில் ஒரு பலூன் முளைக்கும். வெப்பம் தணிந்த பின், கேப்சூலைப் பத்திரமாகக் கரைக்கு இழுத்துவருவார்கள். இது தான் பொதுவான, அடிப்படையான நடைமுறை.

இந்தத் திட்டத்தின் முதல் கட்ட முயற்சியாக, 2007 ஆம் ஆண்டு பி.எஸ்.எல்.வி.சி.7 ராக்கெட் மூலமாக 555 கிலோ எடையுள்ள ஒரு கேப்சூலை (ஆள் இல்லாமல்) விண்வெளிக்கு அனுப்பியது இஸ்ரோ. 12 நாள்கள் விண்வெளியில் சுற்றிய பின் மேற் சொன்ன முறைப்படி வங்காளவிரிகுடாவில் அதைக் கீழே விழ வைத்தார்கள். அந்தக் கேப்சூல், இப்போது பெங்களூரில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது அடுத்த கட்டத்துக்கு முயற்சிக்கிறது இஸ்ரோ.

## அந்த 'இந்தியன்' தயாரா?

இந்த முறையும் கேப்சூலில் ஆள் இருக்கப் போவது இல்லை. ஆளுக்குப் பதிலாக தோராயமாக 60 கிலோ எடை கொண்ட பொம்மை ஒன்று இருக்கும்.

மனிதன் சென்றால் என்னென்ன வசதிகள் செய்யவேண்டி இருக்குமோ, அதெல்லாம் இருக்கும். சுமார் 2 அல்லது 3 தொன் எடை கொண்ட அந்தக் கேப்சூலைப் பத்திரமாக பூமிக்குத் திரும்பக் கொண்டுவந்துவிட்டால், அது பெரிய வெற்றிதான்.

இதுவரை விண்வெளிக்குச் சென்ற ஒரே இந்தியர் ராகேஷ் சர்மா. அதுவும் ரஷ்ய விண்வெளி ஓடமான சோயூஸில் பயணித்தவர். அவரையே மீண்டும் விண்வெளிக்கு அனுப்பி வைக்கலாம் என்பது இஸ்ரோ விஞ்ஞானிகள் சிலரின் யோசனை.

ஆனால், அவர் விண்வெளிக்குச் சென்று 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. அவருக்கு வயதும் 65 ஆகிவிட்டது. எனவே 'புதிய இளம் இந்தியன்' ஒருவரைத் தேடிப் பிடித்துப் பயிற்சி கொடுத்து விண்வெளிக்கு அனுப்பும் திட்டத்தில் இருக்கிறது இஸ்ரோ.

## எப்படிப் பயிற்சி கொடுப்பார்கள்?

மும்பையில் இருக்கும் அமெரிக்க அறிவியல் நிறுவனத்தில் பணிபுரியும் அறிவியல் மென்பொருளாளர் சுதாகர் கஸ்தூரி, விண்வெளி பயிற்சி குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொள்கிறார்.

'முன்பு விண்வெளி வீரர்களுக்கு நீலப் பச்சைப் பாசி போன்ற திரவ வகை உணவுகளைப் பதப்படுத்திக் கொடுப்பார்கள். அப்படிப் பதப்படுத்தப்படும் உணவு, விண்வெளி வீரரில் உடலில் உள்ள நீர்ச்சத்தை உறிஞ்சிவிடாததாக இருக்க வேண்டும்.

அதனால் இப்போது காபோஹைதரேட், புரதச்சத்து நிறைந்த மாத்திரை களைக் கொடுக்கிறார்கள். 12 நாள்கள் விண்வெளியில் மிதக்க வேண்டும் என்றால் மனோதிடப் பயிற்சி அவசியம். இந்தப் பயணத்துக்குப் பெரும்பாலும் இந்திய விமானப் படையைச் சேர்ந்த வீரரைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். அவர்களுக்குத்தான் உயரம், வேகம் குறித்த நடுக்கமோ பயமோ இருக்காது. அதிநவீனக் கருவிகளைக் கையாளவும் தெரியும்.

விண்வெளியில் சிறிய அறை ஒன்றில், அமைதியாக இருக்க, அதுவும் தனிமையில் அமைதியாக இருக்க பெரும் பயிற்சி தேவைப்படும். அதுதான் பயிற்சியின் மிக முக்கியமான கட்டம்.

விண்வெளிக்குச் சென்ற பின், நேரம், காலம் தெரியாததால் ஒருவரது உடலில் இருக்கும் உயிர்ச்சூழல் கடிகாரம் பாதிக் கப்படும். இதயத்துடிப்பு குறையும். உப்புக் கூடும். அந்தச் சிக்கல்களை எல்லாம் தானாகவே கண்டுபிடித்துச் சரிசெய்ய வேண்டும்.

இதற்காக பூமியிலேயே விண்வெளி போன்ற ஈர்ப்பு விசையற்ற நிலையை உருவாக்கி, அதில் விண்வெளி வீரரை முதலில் மணிக்கணக்கில் தங்கவைப்பார்கள். பின்னர் ஒரு நாள், 2 நாள்கள், 4 நாள்கள். எனப் பயிற்சியை அதிகரிப்பார்கள். சமயங்களில் தனிமையில் கேப்சூலில் ஒரு மாதம் கூடத் தங்கவைப்பார்கள். அப்போதுதான் 'சவாலே சமாளி' மனத் திடம் அதிகரித்து, விண்வெளியில் 12 நாள்கள்கூடத் தாக்குப்பிடிப்பார்.



கொதிக்கும் மதிய வெயிலில் தார் வீதியில் நடக்கச் சொன்னால் யோசிப்பீர்கள்தானே? ஆனால், வெறும் காலோடு தார் பாலைவனத்தில் நடந்து பயிற்சி பெற்ற பின், தார் சாலை வீதி என்பது மிக இலகுதானே... அதே யுக்தி தான் இது!"

*(நன்றி:விகடன்)*



# குழந்தைகளின் மறதியை மறக்கடிக்கும் வழிகள்.....



மயூரி

குழந்தைகள் கிரிக்கெட்டில் எந்த ஆட்டத்தில் எந்த வீரர் பெற்ற புள்ளிகள் குறித்துக் கேட்டாலும் சொல்வார்கள். அல்லது சினிமா பற்றிய புள்ளி விவரங்களை துல்லியமா கத் தருவார்கள். இன்னும் சிலர் ஒரு சில பாடத்தில் சட்டென்று பதில் தருவார்கள். இதிலிருந்து குழந்தைகளுக்கு அந்தப் பாடத்தில் அல்லது அந்த விளையாட்டில் மட்டுமே நினைவாற்றல் உண்டு என்றும், ஏனையவற்றில் நினைவாற்றல் இல்லை என்றும் அர்த்தமாகிவிடாது. இவர்களது பிரச்சினை நினைவாற்றலில் இல்லை. ஆர்வத்தில்தான் என்று புரிந்துகொள்ள வேண்டும். எதில் நினைவாற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டுமோ, அதில் கண்டிப்பாக ஆர்வம் இருக்க வேண்டும். நினைவாற்றலுக்கு ஆர்வமே அடிப்படைக் காரணமாகிறது.

**கவனிக்கும் திறன் வேண்டும்**

உங்கள் குழந்தையிடம் அவர்கள் பாடப் புத்தகத்தில் உள்ள அட்டைப்படத்தை வரையச் சொல்லுங்கள். அல்லது அவர்கள் விரும்பிப் பார்க்கும் தொலைக்காட்சி அலை வரிசையின் லோகோவையும் வரையச் சொல்லுங்கள். அட்டையில் உள்ள படங்களுக்கு என்னென்ன வர்ணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் குறிக்கச் சொல்லுங்கள். பின்னர் ஒப்பிட்டுப் பாருங்கள். சிறிது நேரம் கழித்துப் பார்த்தால் பெரும்பாலான விடயங்களை தவறாக குறித்திருப்பார்கள். அல்லது குறிக்காமல் விட்டிருப்பார்கள். தினமும் பார்க்கின்ற புத்தகம் தான் அல்லது தினமும் பார்க் கின்ற தொலைக்காட்சி அலை வரிசை தான். இருந்தாலும் சரியாகஎழுதமுடியாததற்குக் காரணம் நாம் பார்க்கிறோமே தவிர கவனிப்பதில்லை. நினைவாற்றலின் அடிப்படையே இந்த கவனிக்கும் திறன்தான்.

**எதிலும் ஒழுங்கு அவசியம்**

குழந்தைகள் பல நேரங்களில் கணக்குப் புத்தகம் எங்கு உள்ளது தெரியவில்லையே என்று நாள் முழுவதும் புலம்பிக் கொண்டு தேடிக்கொண்டும் இருப்பார்கள். இருபது அல்லது முப்பது புத்தகங்கள் உள்ள ஒரு சிறிய அறையிலே நம்மால் நமக்குத் தேவையான புத்தகத்தை தேடிக்கண்டு பிடிக்க முடியவில்லையே, லட்சக் கணக்கான புத்தகங்கள் உள்ள நூலகத்துக்கு அழைத்துச் சென்று, அங்கே பணியாற்றுபவர்கள் மட்டும் எப்படி கண்டு பிடிக்கிறார்கள்? என்பதை அவர்களை விட்டே கண்டறியச் சொல்லுங்கள்.

காரணத்தை ஆராய்ந்தால், வீட்டில் புத்தகங்கள் கிடைக்காததற்கு காரணம் புத்தகங்கள் பரந்து கிடப்பதுதான். நூலகத்தில் கிடைப்பதற்கு காரணம் அடுக்கி இருப்பதே. குழந்தைகள் என் றில்லை, நாமே கூட பல நேரங்களில் எங்க கிடக்குதென்று தெரியவில்லை என்று புலம் பிக் கொண்டே நமக்குத் தேவையானவற்றை தேடி இருக்கிறோம். இதனால் எதிலும் ஒழுங்கைக் கடைப்பிடிக்க பழக வேண்டும்.

**மறதியை விரட்டும் வழி**

குழந்தைகளின் மறதியைப் போக்கப்பெற்றோர்கள் சில வழிகளை மேற்கொள்ளலாம். அதாவது, குழந்தைகளுடன் வெளியில் எங்காவது சென்று வந்த பின் அங்கே பார்த்தவற்றைப் பற்றிக் கேள்வி கேளுங்கள். உதாரணத்துக்கு நூலகத்தில் அவர்கள் பார்த்த புத்தக அலுமாரியின் வரிசையை அல்லது தெருவில் உள்ள கடைகளின் வரிசையை எழுதச் சொல்லுங்கள். அல்லது இன்று வகுப்பில் ஆசிரியர் முதலில் சொன்ன வார்த்தை எது என்று கேளுங் கள்.

இதனால் அனைத்தையும் ஆர்வத்துடன் உன் னிப்பாக கவனிக்கத் தோன்றும்.

உங்கள் உள்ளே ஓர் ஒழுங்கு ஏற்பட வேண்டும் என்றாலும் நீங்கள் செய்யும் வெளிச் செயல்களிலும் ஓர் ஒழுங்கு நிச்சயம் வேண்டும் என்பதைக் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லி, அவர்கள் செய்யும் எல்லாச் செயல்களையும் ஒழுங்கோடு செய்யச் சொல்லுங்கள்.

பாடசாலையிலிருந்து வந்ததும் காலணியை நிதானமாகக் கழற்றி ஒழுங்காக அதற்குரிய இடத்தில் வைக்க வேண்டும். காலுறையைக் கழற்றி துவைப்பதற்கென்று உள்ள பகுதியில் போட வேண்டும்.

இப்படி ஒவ்வொரு செயலையும், ஓர் ஒழுங்கோடு செய்தால், உள்ளேயும் அதாவது மனதின் செயற்பாடுகளிலும் ஒழுங்கு ஏற்படத் தொடங்கும்.

இவற்றை எல்லாம் தவறாமல் பின் பற்றினால் குழந்தைகளின் மறதியையும் மறக்கடிக்கலாம்.

# உழைப்பால் வரும் அதிர்ஷ்டம்

யதீ எஸ். பாலசுந்தரராஜ்

'நீங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு உழைக்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு அதிர்ஷ்டம் அடிக்கும்' என ஒரு அறிஞர் கூறியுள்ளார்.

கல்லூரிகளில் சிறப்புப் பேச்சாளர் பேசும்போது, மாணவர்கள் கடுமையாக உழைத்தால் முன்னேறலாம் என்று கூறுவார்கள். கடின உழைப்பு என்றால் என்ன? மூடை தூக்குவதும், வெயிலில் வேலைபார்ப்பதும் மட்டுமா கடின உழைப்பு?

கடின உழைப்பு என்றால் உங்களது இலக்கை நோக்கி முன்னேற, தடைகளைத் தாண்டி உழைக்க வேண்டும். அந்த உழைப்பு, உங்கள் இரத்தம், சதை ஆகியவற்றில் ஊறி இருக்க வேண்டும். அதுவே கடின உழைப்பு.

நீங்கள் என்னவாக வேண்டும் என்று திட்டமிடுங்கள். உயர் பதவிக்கு வரவேண்டும் என்றால், முதலில் எம்மை அதற்கு தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். எம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும். எமது தகுதியை உயர்த்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அந்தப் பதவி உயர்வு கிடைத்தாலும், அதனைத் தக்க வைத்துக் கொள்வது மிகவும் கடினமாகும்.

படிக்காத மேதை எனப் பலரைக் கூறுகிறோம். ஆனால், அவர்கள் அந்தத்துறையில் நல்ல புலமை பெற்றிருப்பார்கள். எப்படிப் புலமையைப் பெறுவது என கேட்கலாம். அதற்குத் தான் கடின உழைப்புத்தேவை. புத்தகங்களைப் படிப்பதன்மூலம் எம்மை தயார் செய்து கொள்ளலாம். அத்துறை வல்லுநர்களிடம் பழகி, விடயங்களைத் தெரிந்து கொள்ளலாம். வெற்றிபெற்றவர்கள் ஒரே நாளில் சாதிப்பதில்லை. நாம் சாதிக்கப் பிறந்தவர்கள் என்ற எண்ணம் வந்துவிட்டால், உற்சாகம் பிறந்து கடின உழைப்புக்குத் தயாராகி விடுவீர்கள். இதையடுத்து உங்களுக்கு அதிர்ஷ்டம் அடிக்கும்.

ஒரு விதை ஒரே நாளில் மரமாவதில்லை. அதைப்போல ஆசைப்படும் மனிதன் ஒரே நாளில் விஞ்ஞானியாகவோ, பொறியியலாளராகவோ மாறுவதில்லை.

ஒரு மனிதன் பாறையைப் பிளக்க அதன்மீது சம்மட்டி கொண்டு அடிமேல் அடியாக அடித்துக் கொண்டிருந்தான். கடைசியில் நூறாவது அடியில் பாறை பிளந்தது. பாறையை உடைத்தவன், நூறாவது அடியில்தான் பாறை பிளந்தது. ஆனால், அதற்குமுன் அடித்த 99 அடிகளும் பாறை பிளப்பதற்கு காரணமாக இருந்தன' என்றான்.

மனிதன் குறிக்கோளை அடையத் திட்டம் வகுக்கிறான். ஆனால், வெற்றி பெறுவது என்பது திட்டத்தை நிறைவேற்ற உழைக்கும் செயற்றிறனைப் பொருத்துள்ளது.

அனைவருக்கும் ஆசை உள்ளது. இலட்சியம் இருக்கிறது. திட்டம் உள்ளது. ஆனால் அதைச் செயற்படுத்துவதில்தான் வித்தியாசப்படுகிறார்கள்.

சிலர் என்னால் இது முடியாது என்று எண்ணுகிறார்கள். என்னிடம் அந்தத் திறமை இல்லை என்று நினைத்து முடங்கி விடுகிறார்கள். மனித மனம் காரியங்களைச் செய்யாமலிருக்க ஒரு சமாதானத்தைத் தேட முனைகிறது.

இதனால் என்னால் இந்தக் காரியத்தைச் செய்ய முடியவில்லை என்று கூறுவார்கள். இது ஏற்க முடியாத சமாதானமாகும். இலக்கை நோக்கி பயணிப்பவர்கள் தங்கள் உடல் உழைப்பைக் கொடுக்கத்தான் வேண்டும்.

உழைப்பாளிகளின் வியர்வையால்தான் எமக்கு உணவு கிடைக்கின்றது. உடை, வீடு என உழைப்பாளிகள் இல்லாமல் எதுவும் கிடைக்காது. எனக்குத் தெரிந்த ஒரு தையல் கடைக்காரர், "எனக்கு என சில வாடிக்கையாளர்கள் உள்ளார்கள் அதுபோதும் என்று கூறுவார். அவரது மகன் வந்தான். பலவகை ஆடைகளைக் தைக்கக் கற்றுக்கொண்டான். கடையை விரிவுபடுத்தி, பலருக்கு வேலை கொடுத்தான். இன்று அவனது கடைதான் அந்த ஊரில் சிறந்த கடை.

வாழ்க்கையில் வெற்றி பெறுவதும் சாதனை புரிவதும் மனநிலையைப் பொறுத்துள்ளது. எனக்குத் தெரிந்த தொழிலதிபர் ஒருவர் கல்லூரி நடத்தி வருகிறார். கல்லூரியில் மாணவர்களிடமும் பேராசிரியர்களிடமும் நீங்கள் தினசரி 18 மணி நேரம் உழைக்க வேண்டும் எனக் கூறி வந்தார்.

இதனைக் கேட்ட மாணவன் ஒருவன், தினசரி பல புத்தகங்களைப் படிக்கத் தொடங்கினான். விளையாட்டை ஆர்வமாகக் கற்றுக்கொண்டான்.

அவன் அக்கல்லூரியைவிட்டு வெளியேறும்போது, சிறந்த மாணவனாக வெளியேறினான். இதற்குக் காரணம், அந்த மாணவனின் கடின உழைப்பு. அது அவனுக்கு அதிர்ஷ்டத்தைக் கொடுத்துள்ளது.

49 வயதில் பெண் ஒருவர் யோகாசனத்தில் உலக சாதனை புரிந்துள்ளார். ஒரே நாளில் எந்தப் பெண்ணும் சமையலில் நிபுணராக ஆவதில்லை. சாதனையாளர் எனக்கூறுகிறோம். அதற்கு அவரின் உத்வேகமும், நூறு சதவீத கடின உழைப்பும்தான் காரணம். கடின உழைப்பு மட்டுமே உங்களை அதிர்ஷ்ட தேவதையிடம் அழைத்துச்செல்லும்.

# எண்ணங்களை மாற்றும் கண்ணாடி

அது ஒரு பிரபலமான ஹோட்டல். பல மாடிகள் கொண்ட கட்டடத்தில் உள்ளது. இந்த ஹோட்டலில் எல்லாம் சிறப்பாக இருந்ததால் வாடிக்கையாளர்கள் வருகையும் அதிகரித்தது. ஆனால் இந்தக் கட்டடத்தில் இருந்த லிப்ட் மெதுவாக இயங்கியது பலருக்குப் பிடிக்கவில்லை. லிப்டுக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருந்ததால் வெளியில் காத்திருந்தவர்கள் கோபம் அடைந்தனர். லிப்ட் மெதுவாகச் செல்வதாலும், மாடியின் ஒவ்வொரு ஃபுளோரிலும் பலர் இறங்கி, ஏறுவதால் ஏற்படும் தாமதத்தினாலும் பலர் எரிச்சல் அடைந்தனர். நல்ல ஹோட்டல் என்பதால் பலர் பொறுத்துக்கொண்டு வந்து சென்று கொண்டிருந்தனர்.

ஹோட்டலின் முறைப்பாட்டுப் புத்தகத்தில் தினமும் இந்தக் குறை குறித்து அதிக வாடிக்கையாளர்களால் எழுதப்பட்டது. இந்த ஒரே குறை திரும்பத் திரும்ப எழுதப்பட்டதால் ஹோட்டல் நிர்வாகமும் சங்கடப்பட்டு, வாடிக்கையாளர்களின் குறைகளை எப்படி சரி செய்யலாம் என்று சிந்தித்தது. லிப்ட் வேகத்தை அதிகப்படுத்தலாம் என்று முயற்சித்தபோது அதற்கு வாய்ப்பே இல்லை என்று தெரிந்தது. லிப்டை மாற்றுவதானால் அதற்குப் பல லட்சம் ரூபா செலவாகும். அதற்கு அப்போதிருந்த சூழ்நிலையில் வழியில்லை.

வாடிக்கையாளர் மத்தியில் ஹோட்டலுக்கு நல்ல பெயர் இருப்பதால்தான் சலிப்படைந்தாலும் பொறுத்துக் கொண்டு வந்து செல்கின்றனர்.

அப்படிப்பட்ட வாடிக்கையாளர்களின் குறையைப் போக்க என்ன செய்யலாம் என்று மண்டையைப் பிய்த்துக் கொண்ட ஹோட்டல் நிர்வாகம், பல முறை ஆலோசனைக் கூட்டம் நடத்தியும் அதற்கு எந்தவொரு பலனும் ஏற்படவில்லை.

முடிவில் ஹோட்டலின் சாதாரண ஊழியர் ஒருவர் தயங்கிக் கொண்டே தனக்குத் தோன்றியதைக் கூறினார்.

'லிப்டின் உள்ளேயும், வெளியேயும் முகம் பார்க்கும் கண்ணாடியைப் பொருத்தினால் இந்த பிரச்சினையைத் தீர்க்க முடியும்' என்று கூறி அதற்கு விளக்கமும் கொடுத்தார். அந்த ஊழியர் கூறியதை செயற்படுத்திப் பார்க்க ஹோட்டல் நிர்வாகம் முடிவு செய்தது. என்ன ஆச்சரியம்... அதன் பின்னர்



ஹோட்டலின் முறைப்பாட்டுப் புத்தகத்தில் அந்த குறை குறித்து எந்த வாடிக்கையாளரும் எழுதவில்லை.

ஊழியர் கூறியபடி லிப்டின் உள்ளேயும், வெளியேயும் முகம் பார்க்கும் பெரிய கண்ணாடிகள் பொருத்தப்பட்டதால், லிப்டின் உள்ளே இருந்தவர்கள் கண்ணாடியில் தங்கள் பிம்பத்தைப் பார்த்து ரசிக்கும் நேரத்தில் லிப்டின் தாமதத்தை மறந்தனர். வெளியே இருந்தவர்கள் காத்திருக்கும் நேரத்தில் வெளியில் இருந்த கண்ணாடியில் தங்கள் அழகைச் சரி செய்து கொள்வதில் கவனம் செலுத்தியதால் தாமதத்தை மறந்தனர்.

சரி செய்ய முடியும். ஆனால் செலவாகும் என்று ஹோட்டல் நிர்வாகம் தயங்கிய நிலையில், மாற்றி யோசித்த அந்த ஊழியரால் சிறிய செலவில் பிரச்சினை முடிவுக்கு வந்ததால் வாடிக்கையாளர்களையும் திருப்திப்படுத்த முடிந்தது. ஹோட்டல் நிர்வாகத்துக்கும் அதன் பிறகு வியாபாரம் அதிகரித்தது. எல்லா பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வு கண்டிப்பாக இருக்கும். அதற்கு ஓரளவு மாற்றி யோசித்தால் போதும்.



# உங்கள் குண நலன்களை காட்டிக்கொடுக்கும் நகத்தின் வடிவங்கள்



உலகில் எத்தனையோ நம்பிக்கைகள் பரவி உள்ளன. கூட்டமாகக் கொக்குகள் பறக்கும்போதும், வெள்ளைக் கழுத்தையுடைய பருந்துகள் வானில் வட்டமிடும்போதும் நாம் ஏதாவது நினைத்துக் கொண்டால் அது அப்படியே நடக்குமாம்!

அதேபோல்தான் ஒரு மனிதனின் விரல்களில் உள்ள நக்ங்களுக்கும் அவனுடைய குணத்துக்கும் ஒரு தொடர்பு இருக்கிறதாம்!

நீளமான நக மொட்டுக்களைக் கொண்டிருப்பவர்கள் பெரிய படைப்பாளிகளாகவும், அகன்ற நகங்கள் உள்ளவர்கள் பேச்சாற்றலில் வல்லவர்களாகவும், சதுர நகங்களைக் கொண்டவர்கள் தைரியசாலிகளாகவும் இருப்பார்களாம்.

இயந்திர உலகில் கொடிகட்டிப் பறக்கும் ஜப்பானியர்களிடம்தான் இந்த நம்பிக்கை இன்னும் அதிகமாகத் தலைதூக்கியுள்ளது. இதுபோன்ற நம்பிக்கைகளை வேடிக்கை மட்டும் பார்த்துவிட்டு, தூக்கி எறிந்து விடுபவர்களும் இருக்கிறார்கள். நகத்தை வைத்தே உடல் நலக் குறைபாடுகளை அறிந்து கொள்ளலாம் என்றும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. ஊட்டச்சத்து குறைபாடு உள்ளிட்ட பிரச்சினைகளை நகமே காட்டிக் கொடுத்து விடுமாம்! நகத்தின் வடிவங்கள் எப்படி மனிதனின் குண நலன்களை நிர்ணயிக்கின்றன என்பது குறித்துப் பார்க்கலாம். ராசி பலன் போல இவற்றையும் படித்துக் கொள்ளுங்கள்.

**அகன்ற நகங்கள்** உங்கள் நகங்கள் அகலமாக இருந்தால், உங்கள் இடதுபக்க மூளை நன்றாக வளர்ந்திருக்கலாம். இது உங்களுக்கு அதிக பேச்சாற்றலைக் கொடுக்க வல்லதாகும். நீங்கள் உங்கள் மனதில் நினைப்பதைத் தெளிவாகப் பேசுவதிலும் வல்லவர்கள். உங்கள் பேச்சில் மக்கள் நிச்சயம் மயங்குவார்கள். மறுபக்கத்தில், நீங்கள் மிகவும் கோபக்காரராகவும் பொறுமை இல்லாதவராகவும் இருப்பீர்கள்.

**முட்டை வடிவ நகங்கள்** நீங்கள் எதையுமே கூலாக எடுத்துக் கொள்வீர்கள். எப்போதும் மகிழ்ச்சியாகவும் இருப்பீர்கள். சமுதாயத்தில் உங்களுக்கு பொறுப்புணர்ச்சி மிகவும் அதிகம். உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கு ஏதேனும் பிரச்சினை என்றால், நீங்கள்தான் முன்நின்று அதைத் தீர்த்து வைப்பீர்கள். அனைவருக்கும் நீங்கள் பிடித்தமானவர்கள் தான்.

**சதுர நகங்கள்** இவ்வுலகில் பெரும்பாலானோர் இவ்வகையினர் தான். உங்களுடைய தைரியமும் விடாமுயற்சியும் உங்கள் இரு கண்கள். நீங்கள் எப்போதும் சீரியஸாகவே இருப்பீர்கள். ஆனாலும் உங்களுடைய தலைக்கனம்தான் உங்கள் முதல் எதிரி. அனைவரிடமும் நீங்கள் கொஞ்சம் சமாதானமாகப் போவது உங்களுக்கு நல்லது.

**முக்கோண நகங்கள்** உங்களிடம் அதிக சிந்தனைகள் பொங்கி வழியும். மற்றவர்கள் தவறவிடும் சின்னச் சின்ன விடயங்களைக்கூட நீங்கள் சரியாகப் பிடித்து விடுவீர்கள். தலைகீழ் முக்கோண வடிவில் உங்களுக்கு நகம் இருந்தால், நீங்கள் எதிலும் ஊக்கமுடையவர்களாக இருப்பீர்கள். மேற்கூம்பிய முக்கோண வடிவில் நகம் இருந்தால், உங்களைச் சுற்றி நடக்கும் கொடுமையான விடயங்களைப் பொறுத்துக் கொள்ளமாட்டீர்கள்.

**பாதாம் நகங்கள்** உங்களுக்கு உயிர்ப்புள்ள கற்பனைத் திறன் மிக மிக அதிகம். நீங்கள் அன்பானவர், நேர்மையானவர், அமைதி யானவர், சகிப்புத் தன்மை கொண்டவர். அடுத்தவர்களிடம் எப்போதுமே உண்மையாக இருப்பீர்கள். ஆனால் ஒரு விடயம் உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால், உடனே சுள்ளென்று கோபம் வந்துவிடும். ஆனாலும் சிறிது நேரத்திலேயே உங்கள் கோபம் காற்றில் மறைந்து போய்விடும்.

**கூர்மையான நகங்கள்** நீங்கள் கடும் உழைப்பாளி. வாழ்க்கையில் உங்கள் குறிக்கோள்களை நிறைவேற்றத் தேவையான உழைப்பைக் கொடுக்கத் தயங்கவே மாட்டீர்கள். உங்களுக்கு சில விடயங்கள் பிடிக்காவிட்டாலும், அவை உங்கள் வளர்ச்சிக்குத் தேவை என்றால் அவற்றைக் கட்டாயம் செய்து முடிப்பீர்கள். ஆனாலும், உங்களுக்கு சகிப்புத் தன்மையும், பொறுமையும் மிகவும் குறைவு.

# கழுதையின் புத்துசாலித்தனம்

ஒரு நாள் ஒரு காட்டுப் பகுதியில் கழுதை ஒன்று புல்மேய்ந்து கொண்டிருந்தது. கழுதையைக் கவனித்த ஓநாய் ஒன்று அதை அடித்துத் தின்னும் நோக்கத்துடன் அதன் மீது பாய்ந்தது. தனக்கு வந்த ஆபத்தைக் கண்டு பயந்தது கழுதை. ஓநாயை எதிர்த்துச் சண்டை போடுவது கஷ்டம். அதனால் ஏதாவது ஒரு தந்திரம் செய்து தான் சமாளிக்க வேண்டும் எனக் கழுதை தீர்மானித்தது.

ஓநாயின் பாய்ச்சலின் போது சற்று விலகிக் கொண்டு, "ஓநாயாரே, உம்முடைய வலிமையின் முன்னால் நான் எம்மாத்திரம்... நான் இன்று உமக்கு இரையாகப் போவது உறுதி. இதை யாராலும் தடுக்க. முடியாது நானும் உமக்கு இரையாகத் தயாராக இருக்கிறேன். அதற்கு முன்னால் நான் சொல்லக் கூடிய விஷயத்தைத் தயவு செய்து கேட்க வேண்டும்" என வேண்டிக் கொண்டது.

"நீ என்ன சொல்ல விரும்புகிறாய்? சொல்வதைச் சீக்கிரம் சொல். எனக்குப் பசி அதிகமாக இருக்கிறது" என உறுமியது ஓநாய்.

"ஓநாயாரே, எனது காலில் பெரிய முள் ஒன்று குத்தி விட்டது. முள்ளை எடுக்க நான் எவ்வளவோ முயற்சி செய்தும் முடியவில்லை. காலில் முள் உள்ள நிலையில் நீர் என்னை அடித்துச் சாப்பிட்டால் அந்த முள் உமது தொண்டையில் மாட்டிக் கொள்ளும். அது உமக்குக் கடுமையான வேதனையைத் தருவதுடன் உமது உயிரை வாங்கி விடவும் கூடும். அதற்கு அருள் கூர்ந்து முதலில் என் காலில் இருக்கும் முள்ளை எடுத்துவிடும். ஆதலால் பிறகு நீர் என்னை அடித்துத் தின்பதில் எனக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை" எனக் கழுதை கூறியது.

ஏமார்ந்த ஓநாய் அதற்கு ஒத்துக் கொண்டது.

கழுதை தனது பின்னாங் கால்களைத் திருப்பிக் காண்பித்து. 'இடது காலில் தான் முள் இருக்கிறது!' எனக் கூறிற்று.

ஓநாய் கழுதையின் பின்னாங்கால்களில் முள் இருக்கிறதா என ஆராய்ச்சி செய்தது. அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு கழுதை பின்னாங் கால்களால் ஓநாயைப் பலமாக உதைத்துப் படுகாயப்படுத்தியது.

கழுதையின் உதை தாளமாட்டாது ஓநாய் துடிதுடித்து வீழ்ந்தது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கழுதை வேகமாக ஓடித் தப்பித்துக் கொண்டது.

அகிலா





ச.புருஷோத்மன், தரம் -1
முத்துஐயன்கட்டு அ.த.க.பாடசாலை

## தண்ணீர் தண்ணீர்

*விண்ணின் சாரம் மழையாகும்*
*மண்ணில் சேர்ந்தால் நலமாகும்*
*நெகிழ்மப் பொருள்களை போட்டு நீ*
*இறங்கும் மழையைத் தடுக்காதே - இனி*

*நிலத்தடி நீரைக் குறைக்காதே!*
*உழவுத் தொழிலைச் செய்வதும்*
*உயிரைக் காத்துக் கொள்வதும்*
*குடித்துக் குளித்து மகிழ்வதும்*

*தண்ணீர் இன்றி ஆகுமோ - இனி*
*வறட்சி இங்கே வேண்டாமே!*
*ஏரிக் குளத்தை மேடாக்கி*
*நிறையக் குப்பையை அதில் கொட்டி*

*தங்கும் மழை நீரைத் தடுக்காதே*
*இயற்கையின் சிறப்பைக் கெடுக்காதே!*
*மழையே நின்று போய் விட்டால்*
*காடும் கழனியும் கருகிடுமே*

*நாடும் பாலை ஆகிடுமே*
*நீரும் கனவாய் மாறிடுமே!*
*தண்ணீர் தண்ணீர் என்றே நீ*
*தரையைத் தோண்டி அலையாதே*

*விண்ணின் மழையை நேசிப்பாய்*
*விழுந்த மழையைச் சேமிப்பாய்*
*மண்ணில் வாழ்க்கை மலர்ந்திடுமே*
*எல்லா நலனும் விளைந்திடுமே!*

# பறக்கும் வெளவால்


பறவை இனங்களில் வெளவால் மிகவும் வித்தியாசமானதாகும். இதன் முகம் நரியைப் போல இருப்பது மட்டும் இதற்குக் காரணமல்ல. வெளவால் ஏனைய பறவைகளைப் போன்று முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்காது. குட்டி தான் ஈனும். இது தவிர ஏனைய பறவைகள் தூங்கச் செல்லும் நேரம்தான் இவை விழித்து இரை தேடும் நேரமாகும்.

வெளவால் தோன்றி சுமார் 5.3 கோடி ஆண்டுகள் ஆகின்றன. வெளவாலில் சுமார் ஆயிரம் வகைகள் உள்ளன. அவற்றில் இந்தியாவில் மட்டும் நூறு வகை வெளவால்கள் இருக்கின்றன. இரைதேடப் போகும் வெளவால்கள் மனிதர்கள் கேட்க முடியாத மெல்லிய ஓசையை எழுப்புகின்றன. அதனால் கலவரமடையும் கொசுக்கள், மிகச்சிறிய வண்டுகள், பூச்சிகள் எல்லாம் இருட்டில் ஒடியொளிய ஆரம்பிக்கின்றன. மிக மெல்லிய ஒலியை எழுப்பவல்ல வெளவால்களால் மிகத் துல்லியமான ஒலியைக் கேட்க முடியும். ஆகவே சலனமடைந்த கொசுக்கள் வண்டுகள் பூச்சிகள் ஆகியவற்றின் அசைவுகளால் வெளிப்படும் ஓசையை வெளவால்கள் காதுகளால் கேட்கும். அதே நேரத்தில் அதிநுட்பமாக நுகரும் சக்தியையும் மோப்ப சக்தியையும் கொண்ட மூக்கின் உதவியால் இரை இருக்கும் இடத்தை எளிதாக அடைந்துவிடும்.

ஒவ்வொரு இரவிலும் பெருமளவு கொசு வண்டு பூச்சிகள் ஆகியவற்றை வெளவால் தின்று விடுகிறது. வெளவால்கள் மட்டும் இல்லை என்றால் உலகில் சிறுபூச்சிகள், வண்டுகள், கொசுக்களின் பெருக்கம் கட்டுக்கடங்காமல் போய்விடக் கூடும் என்கிறார்கள் நிபுணர்கள். சில வெளவால் இனங்கள் பழங்களைத் தின்று வாழும்.

தமிழ்நாட்டில் பழம் தின்னி வெளவால் என்றே ஒன்று உள்ளது. இது பழங்களையே விரும்பி உண்ணும் அதனை மனிதர்கள் விரும்பிச் சாப்பிடுவார்கள். இதன் முகம் நரியைப்போல் இருப்பதால் பறக்கும் நரி என்று இதனை அழைப்பார்கள். இரத்தைத்தை உறிஞ்சும் வாம்பயர் இன வெளவால்கள் அமெரிக்காவில் காணப்படுகின்றன.

இது கரப்பான், தேள், பல்லி, சுண்டெலி, சிட்டுக்குருவி போன்ற வகைகளைப் பிடித்து இரத்தத்தை உறிஞ்சிக் குடித்துவிடும். மனித இரத்தத்தையும் குடிக்கும். வட இந்தியாவில் உள்ள வெளவால் கடும் குளிர்காலத்தில் இடப்பெயர்ச்சி செய்கிறது. குளிர்காலத்தில் ஏற்படும் உணவுப் பற்றாக்குறைதான் இதற்கு முக்கிய காரணம்.



பூங்கோதை

# பொது அறிவு

1. உலகின் கலாசாரச் சொத்து என இலங்கையில் அழைக்கப்படுவது எது?
   காலிக்கோட்டை
2. ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?
   27
3. இலங்கையில் டெங்கு நோயை அழிப்பதற்கு கொண்டுவரப்பட்ட பக்றீரியாவின் பெயர் யாது?
   BII பக்றீரியா
4. இலங்கையில் சுனாமி எச்சரிக்கை நிலையம் எங்கு அமைந்துள்ளது?
   ஹிக்கடுவ

**தர்மலிங்கம் நிசாந்தினி,**
**அத்தியார் இந்துக் கல்லூரி.**

1. இலங்கையை முதன் முதலில் ஆட்சி செய்த பெண் அரசி யார்?
   அனுலாதேவி
2. பொதுநலவாய அமைப்பிலிருந்து 2007இல் நீக்கப்பட்ட நாடு எது?
   பாகிஸ்தான்
3. சப்பாத்துக் கால் வடிவில் அமைந்துள்ள நாடு எது?
   இத்தாலி
4. தேசியக் கொடியில் தனது வரைபடத்தைக் கொண்ட நாடு எது?
   சைப்பிரஸ்
5. பிளாஸ்ரிக் ரூபாத் தாளை அறிமுகப்படுத்திய நாடு எது?
   ஆஸ்திரேலியா
6. கப்பலில் மஞ்சள் கொடி பறப்பதன் அர்த்தம் யாது?
   கப்பலில் உள்ளவர்களுக்குத் தொற்றுநோய் உள்ளது
7. சகாரா பாலைவனம் அமைந்துள்ள நாடு?
   வட ஆபிரிக்கா
8. மனித உடலில் மிகப் பெரிய தசை எது?
   இதயத் தசை
9. மிக நீண்ட ஆயுள் கொண்ட உயிரினம் எது?
   நீலத்திமிங்கலம்
10. கல்குலேட்டரை கண்டுபிடித்தவர் யார்?
   பிரான்ஸைச் சேர்ந்த பாஸ்க்கல்

**வி.சாருமதி,**
**தரம் 7 ஏ,**
**மீசாலை வீரசிங்கம்**
**மகா வித்தியாலயம்**



# கரும் துளைகள் இறுதிக் கட்டத்தில் வெண் துளைகளாக மாறும்

பிரபஞ்சம் தோன்றிய புதிதில் உருவாகிய மிகச் சிறியளவான கரும் துளைகள் மழிந்து எதிர்த்திசையில் தோற்றம் பெற்ற அதிக சக்தியுடைய பின்புலக் கதிர்களையோ அல்லது கதிர்வீச்சையோ வெளித்தள்ளும் வெண் துளைகளை (white holes) இதுவரை மனித இனத்தால் அவதானிக்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வானியல் விஞ்ஞானிகளுக்குப் புரியாத புதிராகவும் தேடத் தேட ஆச்சரியமூட்டும் தன்மைகளைக் கொண்டிருப்பதுமானவை பிரபஞ்ச வெளியில் அமைந்துள்ள கரும் துளைகள் ஆகும்.

பிரபஞ்சத்தின் சில பகுதிகளில் எம்மால் கணக்கிட முடியாத மிக வலிமையான ஈர்ப்பு விசையுடன் தொழிற்படும் எவன்ற் ஹொரிசோன் (event horizon) என்ற நிகழ்வை ஏற்படுத்தும் கரும் துளைகளின் அபார ஈர்ப்பு விசையில் இருந்து மிக நுட்பமான ஒளி கூடத் தப்ப முடியாது என அறிவியலாளர்கள் சிலர் கூறுகின்றனர்.

இப்படிப்பட்ட ஓர் இடத்தில் இருந்து கூட சிற்சில நுட்பமான கதிர்கள் வெளியாவதாகவும், இந்தக்கதிர்களைக் கொண்டு பிரபஞ்சத்தின் குறித்த பகுதி ஒன்றில் கரும் துளைகள் உள்ளனவா? அல்லது இல்லையா? என்று எதிர்வு கூற முடியும் என்ற தனது மிகத் தனித்துவமான தத்துவத்தை இந்த நூற்றாண்டில் ஒருவர் கூறியிருந்தார்.

'ஹாவ்கிங்க்' கதிர்வீச்சு என்று அவரது பெயரால் அறியப்படும் இந்தக் கதிர்வீச்சுக்களைக் கண்டு பிடித்த அந்த விஞ்ஞானிதான் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் 21 ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த வானியலாளரும் பௌதிகத் தத்துவவியலாளருமான ஸ்டீபன் ஹாவ்கிங் ஆவார். இவரது 'த பிறீவ் ஹிஸ்டரி ஒவ் ரைம்' ('The brief hisotry of time') என்ற புத்தகம் உலகில் அதிகளவு விற்பனையான புத்தகங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

கரும் துளைகள் தமது இறுதிக் கட்டத்தை அடையும்போது (இறக்கும் போது) என்னவாகும்? இதற்குப் பதிலாக இவற்றின் பெரிய ஈர்ப்பு விசை நேர் எதிராகிதான் அள்ளி விழுங்கிய அனைத்துச் சடப்பொருள்கள் மற்றும் அலைகளையும் உப்பித் தள்ளி வெடித்துச் சிதறும் என்று கூறும் ஈர்ப்பு ஊக குவாண்டம் கோட்பாட்டு விஞ்ஞானிகள் (speculative quantum theory of gravity scientists) இந்நிகழ்வை ஏற்படுத்தும் துளையை வெண் துளை (white hole) என்று பெயரிட்டும் உள்ளனர்.


White hole என்று அறியப்படும் இந்த தத்துவத்தின் படி அது முன்பு கரும் துளையாக இருந்தபோது தனது ஈர்ப்பால் உள்வாங்கிய அனைத்துதிணிவுடையசடப்பொருள்கள், போட்டோன்கள் (Photon) மற்றும் ஏனைய கூறுகளை ஒரு கட்டத்தில் வெளித்தள்ளும் (expel) என ஊகிக்கப்படுவதால் உண்மையில், கரும் துளைகள் தாம் விழுங்கும் பதார்த்தங்களை முற்றாக அழிக்குமா அல்லது நிலை மாற்றம் செய்யுமா? என்பதை முடிவு செய்வதற்கான ஒரு வாய்ப்பும் உள்ளது என வானியலாளர்கள் கூறுகின்றனர்.



நவீன வான் இயலில் அதி திணிவு கரும் துணிக்கைகள் (per massive black holes) எனக் கருதப்படும் நமது சூரியனை விட மில்லியன் அல்லது பில்லியன் மடங்கு திணிவுடைய பெரிய கரும் துளைகள் ஒவ்வொரு அண்டத்தினதும் (Galaxy) மையத்தில் தொழிற்படுவதாகக் கருதப்படுகின்றது.

அப்படியிருந்த போதும் பிரபஞ்சம் தோன்றிய புதிதில் உருவாகிய மிகச் சிறியளவான கரும் துளைகள் மழிந்து எதிர்த்திசையில் தோற்றம் பெற்ற அதிக சக்தியுடைய பின்புலக் கதிர்களையோ அல்லது கதிர் வீச்சையோ வெளித் தள்ளும் வெண் துளைகளை (white holes) இதுவரை மனித இனத்தால் அவதானிக்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை- அதி திணிவு கரும் துணிக்கைகள் பற்றியோ அல்லது வெண்துளை (இருப்பின்) பற்றியோ ஆய்வு செய்வதற்கு தம்மிடம் இப்போது இருப்பதை விட மிகச் சக்தி வாய்ந்த எக்ஸ்ரே விண் தொலைக் காட்டிகள் நிச்சயம் தேவைப் படுவதாக என்று விஞ்ஞானிகள் கூறுவதும் குறிப்பிடத்தக்கது.




# விமானப் பறப்புத் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் துல்லியமாக அறிந்து கொள்ள..

தற்போது விமானங்களில் பயணம் செய்பவர்கள் தமது உயிரைக் கையில் பிடித்தவாறே பயணிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இதற்கு கடந்த பெப்ரவரி மாதம் கடத்தப் பட்ட எதியோப்பிய விமானம், மார்ச் மாதம் மாயமான மலேசிய விமானம், சில தினங்களுக்கு முன்னர் சுட்டு வீழ்த்தப்பட்ட மலேசிய விமானம் என்பன சான்று பகிர்கின்றன.

இவை தொடர்பான விவரங்களை http://www.flightradar24.com/data/pinned/ என்ற இணையத் தளத்தில் பார்வையிடலாம்.

இதேவேளை, போக்குவரத்து விமானங்கள் பறப்பில் ஈடுபடும்போது அவை தொடர்பான அனைத்துத் தகவல்களையும் கட்டுப்பாட்டு மையம் தெரிந்து கொள்ளும்.


இந்தத் தரவுகளைப் பயணிகளும், அல்லது பயணிகளின் உறவினர்களும் அறிந்துகொள்ள முடியும் என்பது உங்களுக்கு தெரியுமா?

இந்தச் சேவையை http://www.flightrad ar 24.com/ என்ற இணையத்தளம் வழங்கி வருகின்றது.

இதில் உலகெங்கிலும் பறப்பில் ஈடுபடும் விமானங்கள் எங்கிருந்து எங்கு செல்கின்றன, விமான இலக்கங்கள், பறப்பில் ஈடுபடும் உயரம், வேகம், அகலாங்கு, நெட்டாங்கு என்பனவற்றுடன் குறித்த நேரத்தில் எந்த இடத்தில் பயணிக்கின்றது என்பது தொடர்பான அனைத்துத் தகவல்களையும் அறிந்துக் கொள்ள முடியும்.

இதுதவிர சரியான நேரத்துக்கு புறப்படும் விமானங்கள், தாமதமாகிப் புறப்படும் விமானங்கள் என்பவற்றினையும் வேறுபடுத்தி அறிந்துகொள்ள முடியும். இந்தச் சேவையை iOS, Android மொபைல் சாதனங்களிலும் பெற்றுக் கொள்வதற்கு விசேட அப்பிளிக்கேஷன் களும் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றை http://www.flightradar24.com/ என்ற முகவரிக்குச் சென்று தரவிறக் கம் செய்துகொள்ள முடியும்.





# மனித உடலின் மர்மங்கள்

மர்மங்கள் என்றாலே எங்கள் அனைவருக்கும் சுவாரஸ்யத்தையும், சந்தோஷத்தையும் ஏற்படுத்தும். ஆனால் உங்கள் நினைப்பை விட்டு வெளியேறும் அளவிலான மர்மத்தைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா? அதைத் தேடி எங்கேயும் செல்ல வேண்டாம். மனித உடலில் இல்லாத மர்மமா வேறு எங்காவது இருக்க போகிறது? உலகத்திலேயே மிகப்பெரிய மர்மமே மனித உடலில்தான். மனித உட லைப் பற்றிய சில சுவாரஸ்ய தக வல்கள்!
மனிதர்கள் ஏன் இவ்வளவு பெரிய மர்மமாக விளங்குகிறார்கள் என்பதற்கு எண்ணிலடங்காக் காரணங்கள் உள்ளன. அதற்கு ஒன்றும் பெரிய விளக்க சோதனையும் தேவையில்லை. உதாரணத்துக்கு, தொழில்நுட்பம், அறிவியல் மற்றும் மருத்துவத் துறையில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்தாலும்கூட, மனித மூளையைச் சுற்றியுள்ள மர்மத்தை இன்னமும் கண்டுபிடிக்க முடியவில்லை. மனித உடலில் இருக்கும் 7 மர்மங்களைப் பற்றித் தான் பார்க்கப் போகிறோம். இயற்கையாகவே இவை அனைத்தும் மனித உடலில் உள்ள மர்மங்களே.

## நாம் ஏன் சிரிக்கிறோம்? என்டோர்ஃபின்ஸ்

எமது மனநிலையை மேம்படுத்துவதற்காக நாம் சிரிக்கும்போது உடலில் என்டோர்ஃபின்ஸ் சுரக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் எது சிரிப்பை வரவழைக்கிறது என்பது இன்னமும் யாருக்கும் புரியவில்லை. சில நேரம் மிகப்பெரியதொரு நகைச்சுவைகூட சிலருக்கு சிரிப்பை வரவழைக்காமல் போகலாம்.

## நாம் ஏன் அசடு வழிகிறோம்?

சரியான முறையில் அறிவியலால் பதிலளிக்க முடியாத மற்றொரு கேள்வி தான் இது. இருப்பினும் நெருக்கம் மற்றும் ஈர்ப்பை வளர்க்கும் அதிமுக்கிய காரணியாக இது விளங்குகிறது என நம்பப்படுகிறது. அதனால் தான் இந்த நிகழ்வு நடக்கிறதோ என்னவோ?

## குணப்படுத்தும் திறன்

மனிதர்களிடம் இருக்கும் மிகப் பெரிய மர்மங்களில் இதுவும் ஒன்றாகும். சிலருக்கு மட்டும் எப்படிக் குணப்படுத்தும் திறன் இருக்கிறது என்பதை பற்றி எமக்கு அதிகம் தெரிவதில்லை. இந்தக் குணமுடையவர்கள் சிலர், இதனைத் தான் அண்டத்தின் ஆற்றல் திறனிடம் இருந்து பெற்றதாகக் கூறுகிறார்கள். ஆனால் இது எப்படி சாத்தியமாகிறது? விடை தெரியாத மர்மம்தான்.

## கனவுகள்; நாம் ஏன் கனவு காண்கிறோம்?

அது மூளையின் நடவடிக்கை என்றும், அது ஒருவரின் ஆயுள்காலம் வரை தொடரும் என்றும் அறிவியல் காரணம் கூறுகிறது. ஆனால் எப்படி கனவு சில நேரங்களில் நனவாகிறது? தான் கனவில் கண்டதை நிஜ வாழ்வில் சந்திக்கும் உதாரணங்கள் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றன.
மனிதர்கள் மற்றும் அவர்களின் உடலைப் பற்றிய வியக்கத்தக்க மர்மம்தானே இது?

## உடலில் இவ்வளவு நீரை கொண்டு என்ன தான் செய்கிறோம்?

உடலில் நான்கில் மூன்று பகுதி தண்ணீரால் நிறைந்துள்ளது. இந்த அளவு குறைந்தால், உடல் இயல்பற்ற முறையில் செயற்படத் தொடங்கி விடும். தண்ணீரே மனிதர்களுக்கு பிரதானமாக விளங்குகிறது. இவ்வளவு தண்ணீரைக் கொண்டு நாம் என்ன தான் செய்கிறோம்?

## உயிரின ஒளியாக்கம்




நோய்வாய்ப்பட்டிருக்கும்போதோ, அல்லது உடல்நலம் சரியில்லாமல் இருக்கும்போதோ ஒருவருக்கு உயிரின ஒளியாக்கம் ஏற்படலாம். ஹியர்வார்ட் காரிங்க்டன் என்பவர் எழுதிய டெத்: இட்ஸ் காசஸ் அண்ட் ஃபினாமினா என்ற புத்தகத்தில், உயிரின ஒளியாக்கத்தைப் பற்றிய கருத்தை விளக்கியுள்ளார். தீவிரமான ஆஸ்துமா நோயாளி தூங்கும்போது, அவர் நெஞ்சில் இருந்து, நீல நிற ஒளி வெளிவந்துள்ளது. அதே போல், ஒரு பையன் இறந்தவுடன், அவனுடைய நெஞ்சில் இருந்து நீலநிற ஒளி வெளிவந்துள்ளது என்றும் அந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. உயிரின ஒளியாக்கமும் மிகப்பெரிய மர்மமாக விளங்குகிறது.




வீட்டில் வளர்க்கப்படும் பூனைகள் கத்தும்போது அவற்றின் பிரச்சினைகள் என்னவென்று அறிந்துகொள்ளமுடியாமல் புலம்புவதே எமது வாடிக்கையாகிவிட்டது. ஆனால், பூனைகள் கத்தினால் அவற்றின் பிரச்சினைகள் என்ன என்பதை அறிந்துகொள்ளும் அசாத்திய திறமைகொண்ட இளைஞர் ஒருவர் பிரிட்டனில் வாழ்ந்து வருகிறார்.
பிரிட்டனின், லிதேம் சென் ஏன்ஸைச் சேர்ந்த 29 வயதுடைய லோவிஸ் டெசூயர் என்பவரே இத்தகைய திறமையுடன் விளங்குகிறார். 10 முறைக்கு 9 முறை அவை கண்சிமிட்டும் போது அவை என்னை நம்புகின்றதா இல்லையா என்பதையே உணர்த்த விரும்புகின்றன. என்னால் பூனைகள் நினைப்பதையும் பேசுவதையும் உணர்ந்துகொள்ள முடியும் என்ற நம்பிக்கை உண்டு என்று அவர் தெரிவித்துள்ளார். பூனைகளின் ஒழுங்கான நடத்தையின்மை காரணமாகவும், குழப்பம் காரணமாகவும் கருணையற்ற முறையில் அவை தண்டிக்கப்படுகின்றன. மற்ற விலங்குகளுடன் ஒப்பிடுகையில் பூனை மிகவும் வித்தியாசமான உயிரினமாகும். குறிப்பாக ஒரு பூனை அதனது படுக்கையில் இல்லாமல் வெளியில் சுற்றிக் கொண்டு இருந்தால் அது, தனது படுக்கை பாதுகாப்பு இல்லை என்பதையே உணர்த்துகின்றது. பூனைகள் 20 நிமிடங்கள் மட்டுமே விளையாடும். ஏனெனில் அந்த நேரத்தில் மட்டும்தான் அவற்றின் பிரச்சினைகளை அவற்றால் தீர்த்துக்கொள்ள முடிகின்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். மேற்படி இளைஞர், சென் ஏன்ஸ்ஸில் உள்ள பூனைகள் காப்பகம் ஒன்றுக்கு பல உதவிகளைச் செய்து வருகின்றார். பூனைகளுக்கான பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் ஒரு நிகழ்வை ஆரம்பிப்பதே தமது இலக்கு என்று அவர் ஊடகங்களுக்குக் கூறி யுள்ளார்.

# நீண்ட காலம் வாழ்வதற்கு விருப்பமா? நாற்காலியில் நீண்ட நேரம் அமராதீர்கள்!

பெரும்பாலான அலுவலகங்களில் பணி நேரம் முழுக்க ஒரு நாற்காலியிலேயே முடங்கிக் கிடக்க வேண்டியதாகி விடுகிறது. அதே சமயம் வீட்டிலுள்ள பெண்கள் ஆடாமல் அசையாமல் சின்னத்திரைத் தொடரில் மூழ்கிவிடும் போக்கே நிலவுகிறது. இதனால் தேவையான உடல் உழைப்பு இல்லாமல் போவதால் பதற்றம், முதுகு வலி, அஜீரணக் கோளாறு என்று வரிசை கட்டும் பிரச்சினைகள் ஏராளம் என்று அடிக்கடி எச்சரிக்கைக் குரல் ஒலித்தாலும், சமீபத்திய ஆராய்ச்சி ஒன்றில் நாற்காலியில் நீண்ட நேரம் அமர்ந்தால் ஆயுள் குறைவதாகவும், குறைவாக அமர்ந்தால் ஆயுள் கூடுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே நீங்கள் கடின உழைப்பாளியாக இருந்தாலும் வாழ்நாளில் அரைப் பகுதியை இருக்கையில் அமர்ந்து ஆயுளைக் குறைத்துக் கொள்ள வேண்டாம்.
தினந்தோறும் நாற்காலியில் நீண்ட நேரம் அமர்ந்தால் தசைகளின் செயற்பாடு குறைந்து பல பிரச்சினைகள் உருவாகின்றன. தசைகளில்தான் அதிகப்படியான கொழுப்புகள் சேமிக்கப்படுகின்றன. எனவே, ஒரே இடத்தில் எந்த நடவடிக்கையும் இல்லாமல் மூச்சு விட்டுக் கொண்டிருந்தால் கலோரிகள் எரிக்கப்படுவது குறையும். அதன் காரணமாக குளுக்கோஸ் கன்வர்ஷன் மிகவும் குறைந்து, முடிவில், நீரிழிவு நோயை உருவாக்கி விடும். எனவே, சுறுசுறுப்பாக, ஓடியாடும்போதும், உடற்பயிற்சி செய்யும் போதும் தான், ஒட்சிசன் அதிகம் உள் வாங்கப்பட்டு கலோரிகள் எரிக்கப்பட்டு கொழுப்புக் குறைகிறது. தொடர்ந்து ஆறு வாரம் உட்கார்ந்தே இருந்தால் உடலில் கெட்ட கொழுப்புகள் அதிகரிக்கும்.
உதாரணமாக பிரியாணி சாப்பிட்டு, சில மணித்துளிகள் கழிந்து உடற்பயிற்சி செய்தால், அது நல்ல கொழுப்பாக மாறும். ஆனால், எவ்வித உடற்பயிற்சியும் செய்யாமல் தூங்கினால், அது கெட்ட கொழுப்பாக மாறும். எனவே வீடு அல்லது அலுவலகத்தில் லிப்ட் இருந்தாலும் அதைத் தவிர்த்து படிகளில் ஏறலாம். மிக அருகில் இருக்கும் ஏ.ரி.எம்., செல்ல வாகனத்தை எடுக்காமல் நடந்து செல்லலாம். அலுவலகத்துக்குள் இருந்து சக ஊழியர் களுக்கு உள்ளக மின் அஞ்சல் அனுப்பு வதற்கு பதில் ஒரு சிறிய நடை நடந்து அவர் களின் இடத்துக்குச் சென்று கைகுலுக் கலாம்.
ஏனெனில், தொடர்ந்து கணினியில் வேலை செய்யும் பலருக்கும் சிஸ்டம் ரேடியேட்டிங் பெய்ன் என்ற ராடிகலோபதி ஏற்படுகிறது. கணினியில் பணியாற்றும் போது முதுகுத் தண்டு, தலை, தோள்பட்டை போன்றவை நேராக இருக்க வேண்டும். மேலும் மொனிட்டர் சரியான அளவாகவும், அது வைக்கப்பட்டிருக்கும் கோணமும் சரியாக இருக்க வேண்டும். கிராஸ் லெக் பொசிஷன் அதாவது கால் மேல் கால் போட்டு அமர்வது மற்றும் கோணலாக அமர்வதைத் தவிர்க்க வேண்டும்.



# கடல் நடுவே அமைந்த துவாரகை நகரம்



நிசாந்தன்

இந்தியாவின் தற்போதைய குஜராத் மாநிலத்தில் 5200 ஆண்டுகளுக்கு முன்னர் (துவாபர யுகத்தின் முடிவில்) ஆழ் கடல் நடுவே அற்புதமாக அமைந்திருந்த நகரம் துவாரகை ஆகும்.

இந்துக் கடவுளான கிருஷ்ணர் ஆட்சி செய்ததாகக் கருதப்படும் நகரம் இதுவாகும். கிருஷ்ணர் மதுராபுரியில் இருக்கும் போது கம்சனை கொன்றமையால் கம்சனது மருமகனான ஜராசந்தன் என்பவன் அதற்கு பழி வாங்கும் வகையில் கிருஷ்ணர் மீதும் அவரது யாதவ சேனை மீதும் அடிக்கடி போர் தொடுத்து வந்தமையால் தனது யாதவ குல மக்களைக் காப்பாற்றுவதற்காக தேவதட்சன் விஸ்வ் காமாவைக் கொண்டு கிருஷ்ணா கடல் நடுவே ஒரு நகரம் அமைப்பித்தார். அதுவே துவாரகை எனப்படுகின்றது. அகன்ற பாதைகள், உணவுக் கூடங்கள், பூங்காக்கள், பொழுது போக்கு திடல்கள் என மக்கள் வசிப்பதற்குத் தேவையான சகல வசதிகளையும் கொண்ட மைந்ததாக சொர்க்க லோகத்தைக் காட்டிலும் செழிப்பும் ரம்மியமும் மிகுந்ததாக இந்த நகரம் விளங்கியது.

கிருஷ்ணரால் நீண்ட காலம் ஆட்சி செய்யப்பட்டு வந்த இந்தத் துவாரகை நகரம் அவர் பூமியை விட்டு நீங்கியதும்



அதாவது மகாபாரதப் போர் நிறைவுற்று 36 வருடங்கள் கழித்து கடலுக்குள் மூழ்கிவிட்டதாகக் கூறப்படுகின்றது.

உண்மையில் அவ்வாறானதொரு நகரம் கடல் நடுவே அமைக்கப்பட்டிருந்தது என்பதையும் அது கிருஷ்ணரால் ஆட்சி செய்யப்பட்டது என்பதையும் இந்து இதிகாசமான மகாபாரதம் குறிப்பிடுகின்றது.

இருப்பினும் இதை உறுதி செய்யும் வகையில் துவாரகை அமைந்திருந்ததாகக் கருதப்படும் கடலில் இந்திய தேசிய கடல் நீர் ஆராய்ச்சிக்கழகம் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. இதுவரையும் 18 தடவைகள் (1983- 1990 வரை) மேற் கொண்ட ஆய்வாராய்ச்சிகளின் முடிவில் உண்மையில் துவாரகை என்ற ஓர் நகரம் கடல் நடுவே அமைந்திருந்தமையை அங்கு காணப்படும் பல ஆதாரங்களுடன் உறுதி செய்துள்ளனர். இதனது ஆராய்ச்சி முடிவுகளை அந்த ஆராய்ச்சிக் குழுவின் தலைவர் எஸ்.ஆர்.ராவ் ஒரு புத்தகமாக எழுதி வெளியிட்டுள்ளார். அந்த நூலின் பெயர் 'தி லொஸ்ட் சிட்டி ஒப் துவாரகா, என்பதாகும்.

இவ்வாறு கடல் நடுவே கண்டு பிடிக்கப்பட்ட துவாரகையில் அடிப்படை வசதிகள் கொண்ட குடியிருப்புக்கள்,அகன்ற இடங்கள், துறைமுகம், பிரமாண்ட கற்சிலைகள் அத்துடன் சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்த தூண்கள், இருக்கைகள், பொன், வெள்ளி இரத்தினங்களால் அமையப் பெற்ற பல பொருள்கள் இருந்துள்ளன. இங்கு 18 மீற்றர் அகலம் உடைய இரு பிரதான சாலைகள், மூன்று பிரமாண்டமான கட்டடத் தொகுதிகள் என்பன தென்படுகின்றன. இந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு பயன் படுத்தப்பட்ட கற்கள் இன்றைக்கு 5600 வருடங்களுக்கு முற்பட்டவையாக உள்ளனவாம்.



கோமதி நதிக்கரையில் அமைந்திருந்ததாகக் கருதப்படும் துவாரகை நகருக்கு துவாரவதி, துவாரகாபுரி, குசஸ்தலை. என்ற பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. துவாரகைக்கு அருகில் 'பேட் துவாரகை' என்ற நகரம் இருந்துள்ளது.இவ்விடம் கிருஷ்ணர் மற்றும்அவரது ராணியரது பொழுதுபோக்கு நகரமாக இருந்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

துவாரகை அழிந்த பின்னர், அங்கு மூன்று முறை கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவை எல்லாமே கடலில் மூழ்கியிருக்கலாம். இருப்பினும் கடலில் மூழ்கியதாகக் கருதப்படும் ஆதி துவாரகையின் நிழலாக அழிந்த துவாரகையை நீர் மூழ்கிக் கப்பலில் சென்று பக்தர்கள் பார்ப்பதற்கு இந்தியக்கடல் அகழ்வாராய்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்து வருகிறது.

ஐந்து தலங்கள் அமைந்துள்ளன. இவை இற்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டவையாகும்.

இவை பஞ்ச துவாரகை என்று அழைக்கப்படுகின்றன. மோட்ச துவாரகை, பேட் துவாரகை, ஸ்ரீநாத் துவாரகை, டாஸ் ரோடி துவாரகை, மூலத்துவாரகை என்பனவே அவையாகும். இதன்படி முக்தி நகரம் ஏழினுள் ஒன்றாகவும் ஆழ்வார்களால் பாடப்பெற்ற 108 வைணவத் திருத்தலங்களில் ஒன்றாகவும் இந்த நகரம் சிறப்பிக்கப்படுகின்றது. ஆகவே இவற்றை எல்லாம் வைத்துப் பார்க்கும்போது உண்மையில் ஆச்சரியத்தையும் வியப்பையும் ஏற்படுத்தும் வகையில் துவாரகை நகரம் அமைந்திருந்தது என்பதை மேற்குறிப்பிட்ட தகவல்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

# வாழ்க்கை வட்டத்தின் தத்துவம்

ஒரு சிறு குழந்தை ஒரு சிறிய பொம்மையை எடுத்து விளையாடுகிறது. சிறிது நாள்கள் கழித்து இன்னொரு புதிய விளையாட்டுப் பொருள் கிடைக்கையில், இந்தப் பழைய பொம்மையை விட்டு விட்டு அதனைக் கையில் எடுத்துக் கொள்கிறது. வாழ்க்கையின் தத்துவம் இங்கேதான் தொடங்குகிறது பாசம், கண்ணீர், சண்டை, குதூகலம், நண்பர்கள், துரோகம், காதல், தொழில், இலாபம், நட்டம், துன்பம், இன்பம், தனிமை, உளைச்சல் என்று பலவகைக் கூறுகளால் நமது வாழ்க்கை கட்டப்பட்டுள்ளது. இவைகளில் பலவற்றை அவ்வளவு சுமான்யமாக உதறித்தள்ளிவிட முடியாது. ஆனால் எவை எவை எந்தெந்த நேரத்தில் கிடைக்கிறதோ, அதைப் பொறுத்து ஒருவன் அதிர்ஷ்டசாலியாகவோ அல்லது ஏமாளியாகவோ ஆகிறான். சிறுவயதில் கிடைத்த நண்பர்களுடன் விளையாடுகிறோம்.. பெற்றோருடன் திரைப்படங்கள் பார்க்கச் செல்கிறோம்.. வெளியே வரும்போது நாமும் ஒரு ஹீரோவைப் போலவே உணர்கிறோம்.

கெட்டவைகளை உடனே களையும் ஒரு பாராக்ரமம் எமக்குக் கிடைக்காதா என்று ஏங்குகிறோம்.. வாழ்க்கை ஓடுகிறது.. பாடசாலைக் காலம்.. மறக்க முடியாத நினைவுகள்.. நல்ல நண்பர்கள்.. கெட்ட நண்பர்கள்..

பாடசாலை, கல்லூரிக்காலம் முடிவடைந்து சிலருக்கு பல மலரும் நினைவு ள் இங்கு தான் பதியம் போடப்படுகின் றன.. பலருக்குப் பாடச லைக்கும் கல்லூரிக்கும் வித்தியாசம் சொல்ல முடியாதவாறு கல ரிக் காலமும் முடிவடைகிறது..

இதற்கிடையே கிட த்த நட்பு வட்டங்களுக்கு ஏற்றவாறு மனம் ஓடுகிறது. நல்ல திரைப்படங்களைப் பார்க்கும் நண்பர்கள் கிடைத்தால் அவர்களோடு நாமும் சேர்ந்து பார்த்து விமர்சனம் செய்கிறோம். பாட்டு ஆட்டங்களுடன் சுற்றும் நண்பர்களோடு சேர்கையில் நாமும் இறங்கி ஒரு கை பார்த்து விடுகிறோம்.. நல்ல கதைகளைப் படிக்கும் நண்பர்களோடு சேர்கையில் எமக்கும் புத்தகங்கள் கைமாறுகின்றன. அரட்டை நண்பர்களுடன் சேர்கையில் அரட்டையில் லயிக்கிறோம்.. ஆர்குட், பேஸ் புக், டுவிட் டர், ப்ளாக் என்று ஏதோ ஒரு குறிப்பிட்ட நட்பு வட்டத்தின் உந்துதலாலும் எமது உள்மன உந்துதலாலும் ஓடிக் கொண்டு இருக்கிறோம்.

ஆனால் வாழ்க்கையில் வெற்றியை அடைந்தவர்கள், இந்த வாழ்க்கை ஓடத்தின் ஒரு சிறுபகுதியை மட்டுமே துடுப்பின்றிக் கடக்கின்றனர் என்றே தோன்றுகிறது. மீதத்தைத் துடுப்புப் போட்டுத் தங்களுக்கு ஏற்றவாறு திசைமாற்றி ஓட்டக் கற்றுக் கொள்கின்றனர். ஓட்டியும் வென்று விடுகின்றனர்.

இத்தனை காலத்திலும் நாம் இத்தனை விடயத்தைக் கடந்து வருகிறோம்.. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்கு மேல் ஒரு விடயத்தின் மீது எமக்கு உந்துதல் இல்லை என்றால் அது எமக்கான களம் இல்லை என்பதே பொருள் என்று நான் நினைக்கிறேன். எமக்கான களம் எங்கோ ஒன்று எமக்காகக் காத்திருக்கிறது. அதைத் தேடிப்போகாதவர்கள் ஓடம் போகும் பாதையிலேயே வாழ்க்கையைப் பயணித்து விடுகின்றனர். சிலருக்கு அதிர்ஷ்டம் இருந்தால் போகும் பாதை இனிதாய் அமையும். சிலருக்கு அமையாது.

ஆனால் தமக்கான களம் எங்கோ இருப்பதை உணர்பவர்கள், அல்லது தமக்கான காலத்தை அமைத்துக் கொள்பவர்கள், சாதாரண மக்களை விட மிகவும் அவதிப்படுகின்றனர். அவர்களது வாழ்க்கை எப்போதும் கேள்விக் குறியாகவே இருக் கும். எமது இலக்கை நோக்கிச் செல்வது அவ்வளவு சாதாரணமானதல்ல. அதுவும் சொந்த பந்தங்கள், ஆசாபாசங்களால் கட்டுண்டு இருப்பவர்களால், அவ்வளவு எளிதாக அதைக் கடந்து சாதனைப் பாதையைத் தொட்டு விட முடியாது.